**இல்முல் ஙைப்**

மறைவான ஞானம் என்பது மனிதனின் உணர்ச்சியும் அக்லும் அறிந்து கொள்ளாத ஒன்றாகும். இல்முல் ஙைப் இருவகைப்படும்.

قِسۡمٌ لَادَلِيۡلُ عَلَيۡهِ

لقَوۡلِهِ تَعَالٰى وَعِنده مَفَاتِيۡحُ الۡغَيۡبِ لَايَعۡلَمها الا هو.....

وقسم نصب عليه الدليل فى قوله تعالٰى يؤمنون بالغيب...............

பொதுவாகவே ஷரீஅத்தில் ஙைப் என்பது அதற்கு எந்த ஆதாரமும் இருக்காது. அதனை பெற்றுக் கொள்வதற்கு எந்தப் பாதையும் இருக்காது.

நபிமார்களுக்கு முஃஜிஸாத்தும், வலிமார்களுக்கு கராமத்தும் உண்டு என்பது சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கையாகும். இல்முல் ஙைப் என்பது முஃஜிஸாத்திலும், கராமத்திலும் கட்டுப்பட்டதாகும். அல்லாஹ்வின் அறிவிப்பைக் கொண்டும், அவனது உத்தரவு அவனது நாட்டம் இவைகளைக் கொண்டும் இல்முல் ஙைப் உண்டாகும்.

இல்முல் ஙைப் என்பது நபிமார்களுக்கும், சிலவேளை வஹியைக் கொண்டும், சிலவேளை இல்ஹாமைக் கொண்டும், சிலவேளை குறிப்பிட்ட ஏற்பாடு, குறிப்பிட்ட சக்தியைக் கொண்டும் ஏற்படும். ஆனால் இவை அனைத்தும் அல்லாஹ்வின் உத்தரவு அவனது நாட்டத்தைக் கொண்டே நடைபெறும். கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்கள் மத்தியிலே ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பார்த்தார்கள். அவர்களது பேச்சை செவியுற்றார்கள். ஆனால் மற்றவர்களைப் பார்க்கவில்லை. இந்தப் பார்வையும், செவியுறுதலும் வஹியின் மூலம் அல்ல. (புஹாரி)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருநாள் “ஆயிஷாவே! இவர் ஜிப்ரயீல். உனக்கு சலாம்சொல்கிறார் என்ற போது, அதற்கு ஆயிஷா நாயகி அவர் மீது ஸலாம் உண்டாவதாக! நான் பார்க்காத ஒன்றை நீங்கள் பார்க்கிறீர்கள் என்றார்கள். (புஹாரி)

இல்முல் ஙைப் என்னும் மறைவான ஞானம் அன்பியாக்கள் அனைவருக்கும் கொடுக்கப்பட்டிருந்தாலும், காத்தமுன்னபிய்யாகிய கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட இல்ம் ஆகிறது மற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டதை விட அதிக சக்தி வாய்ந்ததாகும். அவர்களுக்கு அல்லாஹ் தஆலா அவர்கள் அறியாத அனைத்தையும் கற்றுக் கொடுத்தான்.

وَعَلَّمَكَ مَالَمۡ تَكُنۡ تَعۡلَمُ وَكَانَ فَضۡلُ اللّٰهِ عَلَيۡكَ كَبِيۡرًا عَظِيۡمًا

எனவே அவர்களது மறைவான ஞானம் மற்றவர்களின் இல்மை விட விசேசமானது. அவர்களது இல்மிலிருந்துதான் மற்றவர்களுக்கு அல்லாஹ் இல்மை வழங்கினான்.

وَاللّٰهُ الْمُعْطِى وَاَنَا الْقَاسِمُ

அல்லாஹ் கொடுக்கிறான். நான் பங்கு வைக்கிறேன் என்றார்கள் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹு அவர்கள் கூறும்போது,"கண்மணி நபிகளாரின் நுபுவ்வத்தாகிறது, அது மற்றவர்களை பிரித்துக் காண்பிக்கிறது. அவர்கள் அல்லாஹ்வைக் கொண்டு சம்பந்தமான காரியங்களின் ஹகீகத்தை அறிகிறார்கள். அல்லாஹ்வின் சிபத்துகளையும், மலக்குமார்களையும், மறுமை நாளையும் அறிகிறார்கள். மற்றவர்கள் அதனை அறிய மாட்டார்கள். மற்றவர்களிடத்தில் இல்லாத அதிகமான அறிவும், அதிக உறுதியும், நபிகளாரிடம் இருந்தது. ஹவாரிக்குல் ஆதாத் خوارق العاذاتவழமைக்கு மாற்றமான செயல்களை செய்யக் கூடிய தன்மையும் நபிகளாரிடம் உள்ளது. மலகூத்தையும், மலக்குமார்களையம் பார்க்கக் கூடிய தன்மையும், மறைவிலே, பிற்காலத்தில் நடக்கக்கூடியதை அறியக்கூடிய தன்மையும் லவ்ஹுல் மஹ்பூலில் உள்ளதை நோட்டமிடக்கூடிய தன்மையும் நபிகளாருக்கு இருக்கிறது. இவை அனைத்தும் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு தரிபட்டு இருக்கக் கூடிய பூரணமான ஷர்த் தன்மைகளாகும். (ஃபத்ஹுல் பாரி فتح الباري 368/12)

روي بخاري انّ النَّبِيَّ صلى الله عليه وسلم قال لا تسألُوْنِيْ عنْ شَيْئٍ اِلَّا اَخْبَرْتُكُمْ بِهِ

எந்த ஒரு வஸ்துவும் அதைப் பற்றி நான் உங்களுக்கு அறிவித்தே தவிர என்னிடம் அதைப் பற்றிக் கேட்காதீர்கள் என்றார்கள்.

சாவி ரஹிமஹுல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்:

"துன்யாவிலும், ஆகிறத்திலும் உண்டாகக் கூடிய அனைத்து மறைவான விஷயங்களையும், அல்லாஹ் நபிகளாருக்கு அறிவித்துக் கொடுக்கும் வரை நபிகளார் இவ்வுலகத்தை விட்டு மறையவில்லை" என்பதைக் கொண்டு ஈமான் கொள்வது வாஜிப் ஆகும்.

رُفِعَتْ اِلَى الدُّنْيَا فَاَنَا اَنْظُرُ فِيْهَا كَمَا اَنْظُرُ اِلَى كَفِّى هٰذِهِ

"எனக்கு துன்யா உயர்த்தப்பட்டது, இந்த எனது உள்ளங்கையைப் பார்ப்பது போன்று துன்யாவில் உள்ளதை நான் பார்த்தேன் என்றார்கள்.

சுவனம் அதிலுள்ளவைகள், நரகம் அதிலுள்ளவைகளையும் நபிகளார் பார்த்தார்கள் என்றாலும், அவற்றில் சிலதை மறைப்பதைக் கொண்டு ஏவப்பட்டுள்ளார்கள்.

وَلَوْ كُنْتُ اَعْلَمَ الْغَيْبَ لَاسْاَكْثَرْتُ مِنَ الْخَيْرِ

"மறைவானவைகளை நான் அறிந்திருந்தேன். நன்மையில் நின்றும் அதிகத்தை நான் தேடியிருப்பேன்.(اعراف 188)

இந்த வசனத்தில் நபிகளார் கூறியதெல்லாம் தங்களதுபணிவிற்காக கூறினார்கள். மேலும், எந்த ஒன்று நிகழ்வதை இறைவன் நிர்ணயித்துள்ளானோ, அத்தகைய ஒன்றை மாற்றுவதின் மீது அவர்களுக்கு சக்தியில்லை என்பது தான் இந்த ஆயத்தின் கருத்தாகும்.

மேலும்கண்மணி நாயம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மறைவான விசயங்களை தானாக அறியவில்லை. அல்லாஹ் அவர்களுக்கு கற்றுக் கொடுத்தான் என்பதையும் இந்த வசனம் விளக்குகிறது.

தப்ஸீர் ரூஹுல் பயானிலே கூறுகிறார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடந்து விட்ட ஒன்றையும், பின்னால் நடக்கக்கூடிய ஒன்றையும் இறைவனின் அறிவிப்பைக் கொண்டு அறிவிக்கிறார்கள்.

قظرت فى خلقي قظرت علمتما كان وما سيكون.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மறைவானதை அறியவில்லை என்று ஒருவன் சொன்னால் அவன் தவறிழைத்து விட்டான். (روح البيان35/3 )

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்: நபிகளார் காலத்தில் சூரிய கிரகணம் ஏற்பட்டது. அவர்கள் கிரகணத் தொழுகை தொழுதார்கள். சூரா பகராவை ஓதுவதின் காரணமாக, கியாமை நீளப்படுத்தினார்கள். பிறகு நீளமாக ருகூ செய்தார்கள். பிறகு திரும்பினார்கள். சூரியன் தெளிவானது. சூரியனும், சந்திரனும் அல்லாஹ்வின் அத்தாட்சியில் நின்றும் இரு அத்தாட்சிகளாகும். ஒருவனின் மரணத்திற்கோ, பிறப்பிற்கோ அது உண்டாகாது. நீங்கள் அதைப் பாாத்து அல்லாஹ்வை நினைவு கூறுங்கள் என்றார்கள். அப்போது சஹாபாக்கள் யாரஸூலல்லாஹ்! உங்களது இடத்தில் இருந்து கொண்டே ஏதோ ஒன்றை தாங்கள் எடுப்பது போன்று நாங்கள் பார்த்தோம். பின்னர் தாங்கள் பின் வாங்குவதையும் பார்த்தோம் என்று சஹாபிகள் கூறினார்கள். அதற்கு நபி அவர்கள், நான் சுவர்க்கத்தைப் பார்த்தேன். அதிலுள்ள ஒரு குலையின் பால் (அதனைப் பறிக்க) நீட்டினேன். அதை நான் கொண்டு வந்திருந்தால் அதிலிருந்து நீங்கள் இந்த உலகம் இருக்கும் காலமெல்லாம் சாப்பிட்டிருப்பீர்கள். பிறகு நான் நரகைப் பார்த்தேன். இன்றைய(தினத்தில்)தினத்தைப் போல் அதிபயங்கரமான தோற்றத்தை நான் பார்த்ததில்லை. அவற்றில் உள்ளவற்றில் பெரும்பாலோர் பெண்களாக இருக்கக் கண்டேன் என்றார்கள்.

(بخاري باب صلاة الكسوف 1/ 144)

இப்னு ஹஜர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: நபி அவர்கள் கண்களால் பார்த்தார்கள். மற்றவர்களின் மீதே நபிகளாருக்கு திரை நீக்கப்பட்டது. அதன் ஹகீகத்தின் மீதே நபிகளார் பார்த்தார்கள். அவர்களுக்கும், அவைகளுக்கும் மத்தியில் உள்ள தூரம் சுருக்கப்பட்டது. ( فتح الباري531/2)

عَنْ اَنسٍ رضي اللهُ عنهُ قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صلى الله عليه وسلم رصُّوْا صُفُوْفَكَمْ وَقَارِبُوْا بَيْنَهَاحَاذُوْا بِالْاَعْنَاقِ فَوَ الّذِيْ نَفْسِيْ بِيَدِهِ انى لاري اشَّيطانَ يدْخُلُ مِنْ خِلَدِ الصَّفِّ كَاَنَّهَا اَلحَذَفُ (روالا ابو داود مشكوة98)

உங்கள் வரிசைகளில் இணைந்து நில்லுங்கள். அதற்கு மத்தியில் நெருங்கி நில்லுங்கள். கழுத்துகளை கொண்டு நேர்ப்படுங்கள். எனதுஆன்மா யார் வசமிருக்கிறதோ, அவன் மீது ஆணையாக! ஆட்டுக்குட்டியைப் போன்று ஸஃபின் இடைவெளிக்கு மத்தியில் ஷெய்த்தான் நுழைவதை நான் பார்க்கிறேன் என்றார்கள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்படுகிறது: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: குறைஷிகள் என்னைப் பொய் படுத்தியபோது ஹிஜ்ரிலே நான் நின்று கொண்டிருந்தேன். அல்லாஹ் பைத்துல் முகத்தஸை எனக்கு காண்பித்தான். அதன் அத்தாட்சிகளைப் பற்றி நான் குறைஷிகளுக்கு அறிவித்தேன். அதை நான் கண்களால் பார்த்தேன். (متفق عليه مشكوة53 البَقَرَة باب فى العراج)

இந்த ஹதீதின் வளிக்கத்தில் கூறும்போது, நபிகளாருக்கும், பைத்துல் முகத்தஸுக்கும் மத்தியிலுள்ள திரை நீக்கப்பட்டது. அதைத நபிகளார் பார்த்தார்கள் என்றார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருநாள் சென்று உஹதில் கொல்லப்பட்டவர்களுக்காக ஜனாஸா தொழுகையை தொழுதார்கள். பின்னர் மிம்பருக்குத் திரும்பி வந்து, நான் உங்களுக்குفَرَطُ(முன் சென்று ஆயத்தம் செய்பவனாக) இருக்கின்றேன். நான் உங்களுக்கு சாட்சியாக இருக்கின்றேன். இறைவன் மீது ஆணையாக என்னுடைய حوضஐ இப்போது நான் பார்க்கிறேன். பூமியிலுள்ள பொக்கிஷங்களின் திறவுகோல்கள் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அல்லாஹ் மீது ஆணையாக (கூறுகிறேன்) என்கது பின்னர் நீங்கள் இணைவைத்து விடுவீர்கள் என்று நான் உங்களைப் பற்றி அஞ்சவில்லை. நீங்கள் அதில் (உலக மாயையில்) மூழ்கி விடுவீர்களோ என்று அஞ்சுகிறேன் என்றார்கள். அறிவிப்பாளர்: உக்பத் இப்னு ஆமீர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.

இந்த ஹதீதில் நபிகளார் حوضஐ பார்த்தது, வஹியைக் கொண்டல்ல. மாறாக, நபிகளார் அவர்கள் எதிர்வரும் காலத்திற்கு கண்ணாடியைப் போன்று இருக்கிறார்கள்.

கண்மணி நபிகளார் அவர்களின் இல்ம் ஆகிறது கஷ்புடைய நிலையாகும். அவர்கள் தூய்மைப்படுத்துவதில் நின்றும் அழுக்குகளை விட்டும் தவிர்ந்திருப்பதில் நின்றும் படைக்கப்பட்டதின் காரணமாக உலகின் கண்ணாடியாக மாறிவிட்டார்கள். உலகம் முழுவதும் ஒரு மாணிக்கக் கல்லாக மாறிவிட்டது. நபிகளார் அந்த மாணிக்கக் கல் உள்ளே உள்ளதைப் பார்க்கக் கூடிய கண்ணாடியாக இருக்கிறார்கள்.(زرقاني)

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்படுகிறது, என்னுடைய கிப்லா இந்த இடத்தில் இருக்கிறது(பின்னால் இருப்பவர்களைப் பற்றி நான் அறிய மாட்டேன்) என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? அல்லாஹ் மீது சத்தியமாக கூறுகிறேன். உங்களுடைய பயபக்தியும், ருகூவும் எனக்கு மறைந்ததாக இல்லை. என்னுடைய முதுகுக்குப் பின்புறம் உங்களை நான் பார்க்கிறேன் என்றார்கள். (புகாரி)

சாதாரணமாக மக்கள் எப்பக்கம் திரும்பி இருக்கிறார்களோ அப்பக்கமே பார்க்க முடியும். மனிதனால் முன்னுள்ளதையும், கடைக்கண்ணால் அக்கம்பக்கத்தையும் பார்க்க முடியுமே தவிர பின்னால் உள்ளதை பார்க்க முடியாது. ஆனால் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முகத்தை திரும்பாமலே பின் பக்கத்தையும் பார்த்துக் கொள்வார்கள். அது அவர்களுக்கு இறைவனளித்த பார்வையின் விசேச சக்தியாகும்.

அனஸ் இப்னு மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்படுகிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு நேற்று பத்ருவாசிகளின் கொல்லப்படக்கூடிய இடங்களை காண்பித்தார்கள். இந்த இடம், நாளை இன்ஷாஅல்லாஹ் இந்த மனிதனுடையது இந்த இடம், நாளை இந்த மனிதருடையது என்றார்கள்.

உமர் ரலியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள். உண்மையைக் கொண்டு அவர்களை அனுப்பினானே அவன் மீது ஆணையாக "ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்ட எந்த ஒரு இடமும் தவறாக இல்லை" என்றார்கள்.

(مسلم مشكوت 43 باب في المعزجات)

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்: ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மூத்தா போரில் ஷஹீதானவர்களைப் பற்றி அவர்களுக்கு செய்தி வரும் முன்பே ஜைத் ரலியல்லாஹு அன்ஹு, ஜ..பர் ரலியல்லாஹு அன்ஹு இப்னு ரவாஹா ரலியல்லாஹு அன்ஹு ஆகியோர்களின் வபாத் செய்தியை மக்களுக்கு அறிவித்தார்கள். (.بخاري. مشكوة 533)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: இரவில் உங்கள் மீது கடின காற்றடிக்கும். அப்போது அதிலே எந்த ஒருவரும் நிற்க மாட்டார்கள். بخاري. مسلم (مشكوة 539)

இந்த ஹதீதிலே நபிகளார் காற்று, மழையில் நின்றும் நாளை ஏற்படக் கூடியதை அறிவித்தார்கள்.

ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: நபிகளார் ஸபரிலிருந்து முன்னோக்கி வந்தார்கள். மதீனாவை நெருங்கிய போது கடின காற்று வீசியது. அப்போது பெருமானார் கூறினார்கள்: இந்த காற்று ஒரு முனாபிக்கின் மௌத்திற்காக அனுப்பப்பட்டது என்றார்கள். அங்கே முனா..பிக்கு தலைவன் மரணமாகியிருந்தான். (مسلم. مشكوة 536)

மேற்கூறிய அனைத்து ஹதீதுகளிலிருந்தும் நபிகளார் நாளை நடக்கக் கூடியதை அறிவித்தார்கள். ஆனால் குர்ஆனில் 34 ஆவது ஆயத்தில்,

مِنَ اللهِ عِنْدَهُ عِلْمُ السَّاعة ويُنَزِّلُ الْغَيْثَ وَيَعْلَمُ مَافِي الْاَرْحَامِ وَمَاتَدْرِي نَفْسٌ مَّاذَا تَكْسِبُ غَدًا وَمَا تَدْرِيْ نَفْسٌ بِأَيِّ اَرْضٍ تَمُوْتُ اِنَّ اللهَ عَلِيْمٌ خَبِيْرٌ(لقمان)

மேற்கூறப்பட்ட வசனத்திலே உள்ள ஐந்து விசயங்களை இறைவனதை தவிர யாரும் அதை அறிய மாட்டார்கள். அதனைப் பற்றிய இல்ம், இறைவனைத் தவிர யாருக்கும் இல்லை என்றார்கள். பெருமானார் அவர்கள் இந்த வசனத்தையும், மேற்கூறப்பட்ட ஹதீதையும் கொண்டு கருத்தாகிறது, அந்த விசயங்களைப் பற்றி இல்ம் இறைவனுக்கு மட்டுமே உண்டு. அவைகளை அவன் தானாகவே அறிகிறான். அவனுடைய இல்ம் علم استقلالي — ஆனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதைப் பற்றி அறிகிறதாவது, அவர்களுக்கு அல்லாஹ் அறிவித்துக் கொடுக்கிறான். அந்த இல்ம் العلم العطائ ஆகும்.

அம்ரு இப்னு அக்தப் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்: ரசூலுல்லாஹ் ஒரு நாள் எங்களுக்கு சுப்ஹு தொழ வைத்தார்கள். பிறகு மிம்பரில் ஏறி லுஹர் வக்த் வரும்வரை பிரசங்கம் செய்தார்கள். பிறகு மிம்பரை விட்டு இறங்கி லுஹர் தொழ வைத்தார்கள். பிறகு மிம்பரில் ஏறி அஸர் வரும்வரை குத்பா ஓதினார்கள். பிறகு இறங்கி அசர் தொழுதார்கள். பிறகு இறங்கி சூரியன் மறையும் வரை குத்பா ஓதினார்கள். கியாமத் நாள் வரை நடைபெறக் கூடிய விஷயங்களைப் பற்றி எங்களுக்கு அறிவித்தார்கள். எங்களில் மிக அறிவாளிகள் அதனை மனனமிட்டு கொண்டார்கள். (مسلم. مشكوة.543في المعجزات)

اَنّ انس ابنُ مالِكٍ حدَّثَهُمْ اَنَّ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ صَعِدَ اُحُدًا وَاَبُوْبَكْرٍ وَعُمَرُ وَعُثْمَانُ فَرَجَفَ بِهِمْ فَقَالَ اُثْبُتْنَا اُحُدَ فَاِنَّمَا عَلَيْكَ نَبِيٌّ وَصِدِّيْقٌ وَشَهِيْدَاتِ(بخاري 51/1)

அனஸ் இப்னு மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உஹது மலையில் ஏறினார்கள். அபூபக்கர், உமர், உதுமான் ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர் ஏறினார்கள். உஹது மலை துளும்பியது. அப்போது நபிகளார் கூறினார்கள்: உஹதே! நீ தரிபடு. உன்மீது ஒரு நபியும், ஒரு சித்தீக்கும், இரு ஷஹீதுகளும் இருக்கிறார்கள் என்று கூறினார்கள்.

அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாக ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்: நபிகளார் மிம்பரின் மீது இருக்கும் போது ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு நபிகளாரின் விலாப்புறத்தில் அமர்ந்திருந்தார்கள். நபிகளார் மக்களை ஒருமுறை பார்த்தார்கள். ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை ஒருமுறைப் பார்த்தார்கள். பிறகு இ என்னுடைய இந்தப் பிள்ளை ஸய்யிதுகளின் தலைவராகும். முஸ்லிம்களின் இரு கூட்டத்திற்கு மத்தியில் இவரை கொண்டு அல்லாஹ் இணக்கமாக்கி வைப்பான் என்று கூறினார்கள்.

அபூ மூஸல் அஷ்அரி ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்: நான் பெருமானாருடன் ஒரு தோட்டத்தில் இருக்கும்போது ஒரு மனிதர் கதவைத் தட்டினார். அப்போது நபிகளார் என்னிடம் கதவைத் திறங்கள். அந்த மனிதருக்கு சோதனையின் மீது சுவனம் இருக்கிறது என்று அவருக்கு சுபச் செய்தி சொல்லுங்கள் என்றார்கள். அங்கே உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு செய்தியை அறிவித்தேன். அவர்கள் அல்லாஹ் உதவி புரிபவன் என்றார்கள். (بخاري. مسلم)

ஸஹ்ல் இப்னு ச:து ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்: நபிகளாரும்இ முஷ்ரிகீன்களும் நபிகளார் தங்களது பட்டாளத்தின்பால் சென்று விட்டார்கள். முஸ்லிம்களில் ஒரு முனிதர் முஷ்ரிக்குகளில் எந்த ஒருவரையும் விடாமல் தொடர்ந்து சென்று தனது வாளால் வெட்டி வீழ்த்தினார். ஷஹாபாக்கள் சொன்னார்கள்: இன்றைய நாளில் இந்த மனிதர் கூலி பெறுவதைப் போன்று எங்களில் யாரும் கூலி பெற மாட்டார்கள் என்றனர். அப்போது பெருமானார் அவர்கள் "நிச்சயமாக அவர் நரகவாதி" என்றார்கள். (بخاري)

அவருடைய நண்பன் அவரைத் தொடர்ந்து சென்று பார்த்தபோது, அவர் கடின காயம் ஏற்பட்டதின் காரணத்தால் மௌத்தை தேடிக் கொண்டார். பூமியில் வாளை நட்டிஇ அதன்மீது விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டார்.

அஸ்வதுல் அன்ஸி என்ற பொய்யன் எமன் நாட்டிலே தன்னை நபியென வாதிட்டான். அவர் கொலை செய்யப்பட்டதை நபிகளார் அந்த இரவில் மக்களுக்கு அறிவித்தார்கள். அவனை பைரோஸ் தைலமீ என்பவர் கொலை செய்தார் என்பதையும் அறிவித்தார்கள்.

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்: நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: நான் தூங்கி கொண்டிருந்தபோது என் கையில் இரு தங்க காப்புகள் இருந்தது . அவை எனக்கு கவலையை ஏற்படுத்தியது. அதனை ஊதிவிடுமாறு எனக்கு கனவில் அறிவிக்கப்பட்டது. நான் அதை ஊதிய போது அவை பறந்து விட்டது. "அதன் விளக்கமாகிறது எனக்குப் பின் இரு பொய்யர்கள் வெளியாகுவார்கள் என்பதாகும். அதில் ஒருவன் சன்ஆனை சார்ந்த அஸ்வதுல் அன்ஸி என்பவன்.(بخاري. مسلم)

உபை இப்னு கலப் என்பவனை நபிகளார், கொலை செய்யப் போவதாக முன்னறிவித்தார்கள். அதன்படி உஹதுபோரில் அவன் நபிகளாரால் கொல்லப்பட்டான். (بيهقي)

ஆயிஷா நாயகி ரலியல்லாஹு அன்ஹா அவர்களைத்தொட்டும் அறிவிக்கப்படுகிறது. நபிகளார் தங்களது கடைசி வேளையிலே மகள் பாத்திமா ரலியல்லாஹு அன்ஹு அவர்களை அழைத்து ரகசியம் பேசினார்கள். அவர்கள் சிரித்தார்கள். அதைப் பற்றி பாத்திமாவிடம் நான் கேட்டேன். அவர்கள் சொன்னார்கள்: நான் தான் நபிகளாரை சந்திப்பவர்களில் அவர்கள் குடும்பத்தில் முதலாமவர் என்றார்கள். அதனால் நான் சிரித்தேன் என்றார்கள். (بخاري باب مناقب فاطمة)

நபிகளாரின் மனைவிகளில் கைநீளமானவர்கள் முதலாவதாக நபிகளாரை சந்திப்பார்கள் என்று நபிகளார் முன்னறிவித்தார்கள். ஜெய்னம்பு பின்த் ஜஹ்ஷ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கொடை கொடுப்பதில் கை நீளமானவர்கள். அவர்கள்தான் நபிகளாருக்குப் பின் மனைவிமார்களில் முதலில் மரணமடைந்தவர்கள். (مسلم من حديث عائشة)

மறைவானதை அறியக் கூடியவன் அவனது மறைவான விசயத்தின் மீது ஒருவருக்கும் வெளிப்படுத்த மாட்டான். அவனது ரஸூல்மார்களில் நின்று அவன் பொருந்திக் கொண்டவர்களுக்கே தவிர.

குர்துபி இமாமின் இந்த ஆயத்தின் விளக்கத்தில் கூறும்போது கைபில் நின்றும் தான் நாடிய ஒன்றின் மீது வெளிப்படுத்துகிறான். ஏனெனில் ரஸூல்மார்கள் முஃஜிஸாத்து கொடுக்கப்பட்டவர்கள். நுபுவ்வத்தைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத் தவிர யாருக்கும் மறைவானதை வெளியாக்க மாட்டான் என்பது கருத்தாகும்.

நுபுவ்வத் கொடுக்கப்பட்டவர்களில் மிகச் சிறந்தவரான நமது கண்மணி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ் தனது மறைவானதில் நின்றும் அதிகமானதை அறிவித்துக் கொடுத்தான். அவர்கள் மறைவான விசயங்களை அறியக் கூடியவர்களாக, மறைவானதை பார்க்கக் கூடியவர்களாக, மறைவானதை உணரக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு மேற்கூறப்பட்ட ஆயத்துகளும், ஹதீதுகளும் ஆதாரமாக இருக்கிறது.

## ايصال الثّواب ஈஸால் தவாப்

ஈஸால் தவாப் - நன்மையை சேர்ப்பித்தல் என்பது மௌத்தானவர்களுக்கு நாம் சில நற்காரியங்களை செய்து அதன் நன்மைகளை அவர்களுக்கு கொடுக்குமாறு அல்லாஹ்விடம் முறையிடுதல் என்பதாகும்.

ஈமான் என்பது இறைவன் நமக்கு அளித்த பெரிய நற்பாக்கியமாகும். அந்த ஈமானின் காரணத்தால் நமது முன்னோர்களின் துஆக்கள் நம்மை வந்தடைகின்றது.

رَبَّنَا اغْفِرْ لِي وَلِوَالِدَيَّ وَلِلْمُؤْمِنِينَ يَوْمَ يَقُومُ الْحِسَابُ(14:41)

எங்கள் இறைவா! என்னையும், என் பெற்றோர்களையும், முஃமீன்களையும் கேள்விக் கணக்கு கேட்கும் நாளில் மன்னித்தருள்வாயாக! என்று நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் துஆ கேட்டார்கள்.

رَبَّنَا وَاجْعَلْنَا مُسْلِمَيْنِ لَكَ وَمِنْ ذُرِّيَّتِنَا أُمَّةً مُسْلِمَةً لَكَ وَأَرِنَا مَنَاسِكَنَا وَتُبْ عَلَيْنَا إِنَّكَ أَنْتَ التَّوَّابُ الرَّحِيمُ(2:128)

இவ்வசனத்தில் நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்களுக்காகவும்இ மகன் இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்காகவும் துஆ கேட்டதோடு நிறுத்திக் கொள்ளாமல், எங்களது சந்ததிகளிலும் உனக்கு முற்றிலும் வழிபட்டு நடக்கும் முஸ்லிம் சமுதாயத்தை உருவாக்கி, நாங்கள் நேரான பாதையில் நடந்திடச் செய்து, எங்கள் யாவரின் தவ்பாவையும் ஏற்றுக் கொள்வாயாக! என்று அவர்களின் பிந்திய சந்ததிகளுக்காகவும் துஆ செய்தார்கள்.

மேற்கூறப்பட்ட இரு வசனங்களிலும் முன் சமூகத்தினர் பின்வரும் சமூகத்தினருக்காக துஆ செய்ததை அறிய முடிகிறது.

அடுத்து பின்னால் வந்த சந்ததியினர் அவர்கள் முன்னோர்களுக்காக செய்த துஆவை குர்ஆன் கூறுகிறது. இப்படி

رَبَّنَا اغْفِرْ لَنَا وَلِاِخْوَانِنَا الَّذِيْنَ سَبَقُوْنَا بِالايمان

எங்கள் இறைவா! எங்களுக்கும் ஈமான் கொண்டதில் எங்களுக்கு முந்தியவர்களான எங்கள் சகோதரர்களுக்கும் பாவமன்னிப்பை அருள்வாயாக!

காலம் சென்றுவிட்ட தங்களது இஸ்லாமிய சகோதரர்களுக்காக பின் சமூகத்தவர்கள் பிழை பொறுக்கக் கோரி துஆக்கள் செய்வதை இவ்வசனம் விளக்குகிறது.

எனவே முன்னோர்கள், பின்னோர்களுக்கும், பின்னுள்ளவர் மறைந்து விட்ட முன்னோர்களுக்கும் துஆக்கள் கேட்பது பலனளிக்கிறது. இந்த அடிப்படையில், மௌத்தானவர்களுக்காக துஆ மட்டுமின்றி தொழுகை, நோன்பு, ஸதகா, ஹஜ், உம்ரா கடனை நிறைவேற்றுதல், இஸ்திக்பார், குர்ஆன் ஓதுதல் போன்ற அமல்களை செய்து அதன் தவாபை மௌத்தாக்களுக்கு சேர்ப்பிக்க துஆ செய்வதும் ஷரீஅத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு செயலாகும். இவற்றிற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அதிகமான ஹதீதுகள் சான்றுகளாக இருக்கின்றன.

உதாரணமாக ஜனாஸா தொழுகையாகிறது மரணித்துவிட்ட ஒரு அடியானுக்காக அவனது பிழை பொறுப்பிற்காக, அவனுக்கு துஆ செய்வதற்காக அமைந்த வணக்கமாகும். இந்த வணக்கத்தை மரணித்து விட்ட சகோதரனுக்காக செய்யுமாறு இஸ்லாம் வலியுறுத்துகிறது.

அல்லாஹ்தஆலா ஸாலிஹான ஒரு அடியானுக்கு அவரது தரஜாவை உயர்த்துவான். அப்போது "யாஅல்லாஹ்! இது எவ்வாறு கிடைத்தது?" என்பான். அதற்கு அல்லாஹ் "இது உன் மகன் உனக்காக பிழை பொறுக்கத் தேடியதினால் கிடைத்தது" என பதில் சொல்வான்.

(அறிவிப்பாளர்: அபுஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு நூல்: புகாரி)

என் உம்மத்துகள் கிருபை செய்யப்பட்டவர்கள். ஏனெனில் பாவிகளாக கப்ரில் அடக்கம் செய்யப்பட்டு, முஃமீன்கள் அவர்களுக்கு கேட்கும் இஸ்திக்பார் - பாவமன்னிப்பினால் பாவங்கள் அழிக்கப்பட்டு பாவமில்லாதவர்களாய் தம் கப்ரிலிருந்து வெளியேறுகிறார்கள்.

(அறிவிப்பாளர்: அனஸ் ரலியல்லாஹு அன்ஹு, நூல்: தப்ரானி, இப்னுமாஜா)

மேற்கூறிய ஹதீதிலிருந்து முஃமின்களில் இஸ்திக்பாரைக் கொண்டு மௌத்தானவர்கள் பயன் பெறுகிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

وَاَنْ لَيْسَ لِلْاِنْسَانِ اِلَّا مَاسَعٰى وَاَنَّ سَعْيَه سَوْف يري(53:39)

இன்னும் மனிதனுக்கு அவன் முயல்வதல்லாமல் வேறு இல்லை. அன்றியும் நிச்சயமாக அவன் முயற்சி பின்னர் அவனுக்கு காண்பிக்கப்படும்.

மேற்கூறிய ஆயத்தின் அடிப்படையில் மனிதன் மரணித்து விட்டால் அவனது அமல் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது. அவன் உலகில் வாழும்போது செய்த அமல்களின்

கூலி மட்டும்தான் அவனுக்கு வழங்கப்படும். மரணத்தின் பின் அவனது அமலோ, பிறரது அமலோ அவனது அமலில் வளர்ச்சியைக் கொடுக்காது என்பது வஹ்ஹாபிகளின் கூற்று.

ஆனால் இவ்வாயத்திற்கு விளக்கம் கூறும்போது இந்த ஆயத்...

وَالَّذِينَ آمَنُوا وَاتَّبَعَتْهُمْ ذُرِّيَّتُهُم بِإِيمَانٍ أَلْحَقْنَا بِهِمْ ذُرِّيَّتَهُمْ وَمَا أَلَتْنَاهُم

இன்னும் விசுவாசங் கொண்டார்களே அத்தகையோர், அவர்களுடைய சந்ததிகளும், விசுவாசத்தின் மூலம் அவர்களைப் பின்பற்றினார்கள். (அத்தகைய அந்த சந்ததியினர் படித்தரங்கள் குறைவாக இருப்பினும் சந்ததியினரை சேர்த்து விடுவோம். (இதனால்)...நன்மையான) செயல்களில் எதனையும் அவர்களுக்கு நாம் குறைத்து விட மாட்டோம். ஒவ்வொரு மனிதனும் தான் சம்பாதித்ததைக் கொண்டு பிணையாக்கப்பட்டிருக்கின்றான்.

مِّنْ عَمَلِهِم مِّن شَيْءٍ كُلُّ امْرِئٍ بِمَا كَسَبَ رَهِينٌ

என்ற ஆயத்தைக் கொண்டு منسوخ மாற்றப்பட்டு விட்டது என்று ரயீஸுல் முஃபஸ்ஸிரீன் ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

இவ்வாயத்தின் விளக்கத்திலே, ஹுஸைன் இப்னு ஃபழில் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்:

لَيْسَ لِلْإِنْسَانَ إِلَّا مَاسَعٰى من طريق العدل فامّا من باب الفضل فجائز أن يريد الله تعالى ماشاء (شرح الصّدور 295)

மனிதனுக்கு அவன் முயன்றதைத் தவிர வேறில்லை என்பது நீதத்தில் அடிப்படையிலாகும். ஆனால் அல்லாஹ்வின் فضل என்பது, அவன் நாடியவர்களுக்கு நாடிய அளவிற்கு அவனது நன்மையை அதிகப்படுத்துவான் என்பதாகும். ربيع ابن انس رضي الله عنه

அவர்கள் இவ்வாயத்தின் விளக்கத்தில் கூறும்போது இவ்வாயத்தில் انسان என்பது كافر ஐக் குறிக்கும். முஃமீன்களுக்கு அவர்கள் முயற்சித்ததும், அவர்களுக்காக முயற்சிக்கப்பட்டதும் இருக்கிறது என்று கூறினார்கள்.

**صدقة தர்மம்:-**

ஸஃது இப்னு உபாதா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தம் தாயார் வஃபாத்தாகி விட்டதை நபிகளாரிடம் சொல்லி "யாரஸூலுல்லாஹ் எந்த தர்மம் (என் தாய்க்கு நலன் கொடுக்கக் கூடியது) சிறந்தது?" என்று வினவ, அதற்கு ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் தண்ணீர் என்றார்கள். அவர்கள் ஒரு கிணற்றைத் தோண்டி இது ஸஃதின் தாயாருக்கு அர்ப்பணம் ஆகுக எனக் கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: ஸஃது இப்னு உபாதா ரலியல்லாஹு அன்ஹு நூல்: இப்னு மாஜா, அபூதாவூது, நஸாஈ)

அப்துல்லாஹ் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் சுன்னத்தான தர்மம் செய்து அதனை தன் பெற்றோர்க்காக ஆக்கினால் அதன் கூலி அவ்விருவருக்கும் கிடைக்கும். அவனுடைய கூலியில் நின்றும் எந்த ஒன்றும் குறையாது. (நூல்: தப்ரானி, தைலமி)

**حج ஹஜ்:**

ஒருவன் தன் பெற்றோர்களுக்காக ஹஜ் செய்வானாகில் அவனுக்கும், அவன் பெற்றோருக்கும் நிறைவேறியதாக ஒப்புக் கொள்ளப்படும். அவ்விருவர்களின் ரூஹுகளும் நற்சுகமடையும். அவர் அல்லாஹ்விடத்தில் நல்லோராக எழுப்பப்படுவார்.

அறிவிப்பாளர்: ஜைத் இப்னு தாபித் ரலியல்லாஹு அன்ஹு நூல்: தார குத்னீ

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஜுஹைனா கோத்திரத்தைச் சேர்ந்த பெண் நபிகளாரிடம் வந்து என் தாய் ஹஜ் செய்வதற்கு நேர்ச்சை செய்தார்கள். அவர்கள் மரணிக்கும் வரை ஹஜ் செய்யவில்லை. அவர்களைத் தொட்டும் நான் ஹஜ் செய்யலாமா? என கேட்டபோது; ஆம். அவர்களுக்காக நீ ஹஜ் செய் என்றார்கள். மேலும் உன் தாய் மீது கடன் இருந்தால் அதை நீ நிறைவேற்றுவாய் அல்லவா! அல்லாஹ்வின் கடனை நிறைவேற்று. அல்லாஹ் நிறைவேற்றுவதைக் கொண்டு மிகத் தகுதியானவன் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல்: புஹாரி மூன்றாவது ஜுஸ்வு

**صوم நோன்பு:-**

ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: யாராகிலும் நோன்பு அவன்மீது இருக்கும் சூழலில் மௌத்தாகி விட்டால் அவனுடைய சொந்தக்காரன் அவனுக்காக நோன்பு பிடிப்பான் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல்: புஹாரி; முஸ்லிம்)

ஒருவர் நபிகளாரிடம் வந்து,"எனது பெற்றோர் இருவரும் ஜீவித்திருக்கும்போது நான் அவர்களுக்கு நன்மை செய்து கொண்டிருந்தேன். அவர்கள் இருவரின் மரணத்தின் பின் நான் அவர்களுக்கு எவ்வாறு நன்மை புரிவது" என நபிகளாரிடம் கேட்டபோது மரணத்தின் பின் நீ அவர்களுக்கு நன்மை புரிதலில் உள்ளது. நீ தொழுதவுடனே அவர்கள் இருவருக்கும் தொழுகை தொழுவது, நீ நோன்பு நோற்பதுடனே அவர்கள் இருவருக்கும் (நோன்பு களா இருந்தால் அந்த) நோன்பை நோற்பது என்று ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல்: தாரகுத்னி)

மேற்கூறப்பட்ட ஹதீதுகளிலிருந்து ஒருவன் தான் செய்யும் அமல்களை அதன் தவாபுகளை பிறருக்கு அளிக்கலாம் என்று தெளிவாகிறது.

عن ابي هرير رضي الله عنه انّ رسول الله صلى الله عليه وسلم قال اِذَا مَاتَ الْاِنْسَانُ انْقَطَعَ عَنْهُ عَمَلُهُ اِلَّا مِنْ

ثَلَاثَةِ اَشْيَاءَ مِنْ صَدَقَةٍ جَارِيَةٍ اَوْ عِلْمٍ يُنْتَفَعُ بِهِ اَوْ وَلَدٍ صَالِحٍ يَدْعُوْلَهُ (مسلم)

மனிதன் மரணித்து விட்டால் அவனது அனைத்து அமல்களும் அவனை விட்டும் துண்டிக்கப்படுகிறது. மூன்று விஷயங்களைத் தவிர, 1. நிரந்தர பயன் அளிக்கும் வகையில் அவன் செய்த நன்கொடை 2. அவன் கற்றுக் கொடுத்த கல்வி 3. அவனுக்காக துஆ செய்யக்கூடிய ஸாலிஹான குழந்தை. இந்த மூன்றும் (அவன் மரணித்த பின்பும்) அவனுக்கு பலனளிப்பதிலிருந்து நின்று விடாது.

(நூல்: முஸ்லிம்இ அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு.)

இந்த மூன்று அம்சங்களும் அவன் உலகில் வாழும் காலையில் அவனால் உருவாக்கப்பட்டதுடைய பயன்களாகும்.

ஈஸால் தவாப் - நன்மையை சேர்த்து வைக்கும் விசயத்தில் மேற்கூறிய சதக்கா, நோன்பு, ஹஜ்இ இஸ்திக்பார், தொழுகை, துஆ அனைத்தையும் ஏற்றுக் கொண்டாலும் வஹ்ஹாபிகளில் சிலர் குர்ஆன் ஓதுவதில் தவாபை மௌத்தாக்களுக்கு சேர்ப்பிக்க முடியாது அது அவர்களை சென்றடையாது என்று கூறுகின்றனர்.

சுன்னத் வல் ஜமாஅத்தின் அடிப்படையில் நமது இமாம்கள் குர்ஆனை ஓதி அதன் தவாபை மௌத்தாக்களுக்கு நன்மையை சேர்ப்பிப்பது கூடும் என்பதற்குப் பல ஆதாரங்களை தருகிறார்கள்.

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரு கப்ருக்கு அருகில் நடந்தார்கள். அப்போது கூறினார்கள்: இருவர்களும் நிச்சயமாக வேதனைக்குள்ளாக்கப்பட்டு இருக்கின்றனர். பெரும் பாவத்திற்குரிய வேதனை அல்ல. இவர்கள் இருவரில் ஒருவர் சிறுநீர் கழித்துவிட்டு சுத்தம் செய்யாதவர். மற்றவர் கோள் சொல்லிக் கொண்டு திரிபவர்.

பின்பு நபி அவர்கள் பசுமையான ஈச்சை மரத்தின் மட்டையை எடுத்து இரண்டாகப் பிளந்து இரு கப்ருகளிலும் ஒன்றையொன்று நட்டினார்கள். இவ்விரண்டும் காயாமல் இருக்கும் காலமெல்லாம் அவ்விருவரின் அதாபு இலகுவாகும் என கூறினார்கள்.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ், நூல்: புஹாரி, முஸ்லிம்.

இந்த ஹதீதின் விளக்கமாகிறது ஈச்சை மரத்தின் மட்டைகள் பச்சையாக இருக்கும் காலம்வரை உயிருடன அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்து கொண்டிருக்கிறது. அந்த தஸ்பீஹின் காரணத்தினால் மனிதனுக்கு கப்ரில் செய்யப்படும் அதாபை இறைவன் லேசாக ஆக்குகிறான்.

எனவே திக்ருகளில் சிறந்ததுஇ அல்லாஹ்வின் கலாமாகிய குர்ஆன் ஆகும். படைப்பினங்களில் சிறந்தது மனித இனம். திக்ரின் சிறந்த குர்ஆன், படைப்புகளில் சிறந்த மனிதன் ஓதி அதை மரணித்த மனிதர்களுக்கு ஈஸால் தவாபு செய்வது, பச்சை மட்டையின் திக்ரை விட பன்மடங்கு சிறந்ததாகும்.

1.நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ஒருவர் அடக்கஸ்தலங்களுக்கு விஜயம் தந்து சூரா பாத்திஹா, குல்ஹுவல்லாஹு அஹது, அல்ஹாக்கு முத்தகாதூர் ஆகிய சூராக்கள் ஓதி, “இறைவா! உன் கலாமில் நான் ஓதியவற்றின் தவாபை இதில் அடங்கியிருக்கும் மு:ஃமினான ஆண்கள், பெண்களுக்கு ஆக்குகிறேன் என்று கூறினால் அல்லாஹ்விடத்தில் பரிந்துரையாளர்களாக ஆகி விடுகிறார்கள்.

(அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு நூல்: பவாயித்)

2.உங்களில் யாரேனும் மரணமாகிவிட்டால் அவரை அடக்குவதில் தாமதம் செய்யாதீர்கள். அவரது தலைமாட்டில் சூரா பகறாவின் ஆரம்பத்தையும், அவரது கால்மாட்டில் பகராவின் கடைசி ஆயத்தையும், ஓதுங்கள் என நபிகளார் கூற நான் கேட்டேன் என இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்.

(நூல்: பைஹகி-ஷுஅபுல் ஈமான், தப்ரானி மு:ஃஜமுல் கபீர், மிஷ்காத்.)

3. ஒருவர் கப்ருஸ்தானில் நடந்து அங்கு அடங்கப் பொற்றவர்களுக்கு பதினோரு தடவை குல்ஹுவல்லாஹு அஹது ஓதி அதன் தவாபை அவர்களுக்கு கொடுப்பாரேயானால் மௌத்தாக்களின் எண்ணிக்கை அளவு கூலி கொடுக்கப்படும் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அலி ரலியல்லாஹு அன்ஹு நூல்: அபூ முஹம்மது சமர்கந்தி, நஸயீ

4.எவன் ஒருவன் தன் தாய், தந்தையரை அல்லது அவர்களில் ஒருவரை ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் ஜியாரத் செய்து அவர்களுக்காக சூரா யாஸீன் ஓதினால் அந்த சூராவின் எழுத்துக்களின் எண்ணிக்கை அளவு அதன் பாவங்கள் பொறுக்கப்படும்.

அறிவிப்பாளர்: அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு

நூல்: தைலமி, இப்னு நஜ்ஜார் ராபிஈ

5. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மைய்யித்தின் மீது சூரா பாத்திஹாவை ஓதினார்கள் என்று இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல்: இப்னு மாஜா

6. عَنْ مَعْقِلِ ابْنِ يَسَارِ رَضِيَ الله عنه قال قَال رسول الله صلى الله عليه وسلم.اقرءُوا يٓس على موتاكُمْ

உங்கள் மௌத்தாக்களுக்கு யாஸீன் ஓதுங்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

நூல்: அபூதாவூது, நஸயீ, இப்னு மாஜா, முஸ்னது அஹமது, பைஹகி

7. அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருவன் கப்ருஸ்தானில் நுழைந்து, சூரா யாஸீன் ஓதினால் அந்த மௌத்தாக்களை தொட்டும் அல்லாஹ் வேதனையை லேசாக்குகிறான். அங்குள்ளவர்களின் எண்ணிகக்கை அளவு இவனுக்கு நன்மை இருக்கிறது என்று நபிகளார் கூறினார்கள்.( شرح الصدور : 296 مغني لابن قدامة 567- )

8. அபூதர்தா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு மனிதன் மரணித்து அவனிடத்தில் யாஸீன் சூரா ஓதினால் அவன் மீது அல்லாஹ் வேதனையை லேசாக்குகிறான்.

நூல்: தைலமி

9. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: குர்ஆனை ஓதி அதன்படி அமல் செய்தால், அவரின் பெற்றோர்கள் மறுமையில் கிரீடம் அணிவிக்கப்படுவார்கள் என்ற ஹதீதின்படி இங்கே அமல் செய்வது குழந்தைகள் ஆனால் கிரீடம் அணிவிக்கப்படுவது அவர்களது பெற்றோர்களுக்கு குழந்தைகளின் அமலின் காரணமாக அல்லாஹ் பெற்றோர்களின் தரஜாவை உயர்த்துகிறான்.

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குர்ஆனை முழுவதும் ஓதி முடித்தால் தம் குழந்தைகளை ஒன்று சேர்த்து குடும்பத்தினரையும் அழைத்து அவர்களுக்காக துஆ கேட்டார்கள். (தாரமீ)

அஹ்மது இப்னு ஹன்பல் ரலியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்:நீங்கள் கப்ருஸ்தானில் நுழைந்தால் பாத்திஹாஇ முஅவ்விததைன், குல்ஹுவல்லாஹு அஹது சூராக்கள் ஓதி அதன் தவாபை மக்பராவாசிகளுக்கு அளியுங்கள். அது அவர்களை சென்றடையும்.

**ஷாபிஈ இமாமின் கூற்று:-**

கப்ரிடத்தில் குர்ஆன் ஓதுவது குற்றமல்ல. கப்ராளிகள் மீது ஒரு குர்ஆன் முழுவதும் ஓதினால் அது மிகச் சிறந்தது.

**நவவி இமாமின் கூற்று:**

கப்ரை ஜியாரத் செய்பவனுக்கு குர்ஆனிலிருந்து லேசான ஒன்றை ஓதுவதும், அதன்பின் அவர்களுக்காக துஆ கேட்பதும் முஸ்தஹப்பாகும்.

எனவே ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீதுகளின் அடிப்படையிலும், குர்ஆனின் கூற்றுப்படியும், இமாம்களின் உறுதியான சொல்லின்படி அடிப்படையிலும் குர்ஆனை ஓதி ஈஸால் தவாப் செய்வதும் ஷரீஅத்தில் ஆகுமான விஷயம் என்பது தெளிவாக விளங்குகிறது.

## வஸீலாالتّوسّل

வஸீலா என்பது துஆ கேட்கம் நேரத்தில், அல்லாஹ்வின்பால் எதைக் கொண்டு

நெருக்கப்படுமோ அத்தகைய ஒன்றை முற்படுத்துவதாகும். ﷺசெய்வதைப் போன்று

எனது இன்ன அமலைக் கொண்டு எனது நாட்டத்தை நிறைவேற்றுவாயாக! என்று துஆ செய்வதாகும். அவ்வாறு முற்படுத்தக் கூடிய ஒன்று தனர் வஸீலாவாகும். எதைக் கொண்டு இறைவன் அளவில் நெருங்கப்படுமோ அத்தகைய அமலாகிறது, துஆ கேட்கக் கூடியவனிடத்தில் உறுதியான, சாலிஹான அமலாக இருக்க வேண்டும். அந்த அமலை வஸீலாவாக ஆக்குவான். ஏனெனில் அந்த நல்லமலை வஸீலாவாக ஆக்குவது பதிலளிப்பதின்பால் தூண்டக்கூடியது.

பைளாவி இமாம் கூறுகிறார்கள்:

தேவைகளை தேடுவதிலே وسيلهவஸீலாவை முற்படுத்துவதுاجازة பால் தூண்டக் கூடியது.

(بيضاوي9–1)

வஸீலா தேடுவது இரண்டு வகையில் அனுமதிக்கப்பட்டது.

1. நல்லமல்களைக் கொண்டு வஸீலா தேடுதல்.

2. நல்லமல்களை உடையவர்களைக் கொண்டு வஸீலா தேடுதல். அமல் இல்லாத மற்றவைகளைக் கொண்டு வஸீலா தேடுவது இதில் அடங்கும்.

1. நல்லமல்களைக் கொண்டு வஸீலா தேடுதல்:

நபிமார்கள்இ வலிமார்களையும் நேசிப்பதும் அவர்களது தகுதியையும், பதவியையும் அவர்களின் கராமத்தை நேசிப்பது நல்லமல்களில் நின்றும் உள்ளதாகும். இந்த நல்லமல்கள்தான் அல்லலாஹ்வின்பால் அவனை நெருங்கச் செய்கிறது. ஒரு மனிதர் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்களிடம் மறுமை எப்போது வரும் என்று கேட்டார். அவரிடம் நபிகளார், அதற்காக நீர் என்ன தயார்படுத்தி இருக்கிறீர்கள்: என வினவியபோது, அவர் நான் அதற்காக அதிகமான தொழுகையோ, நோன்போ, சதக்காவோ தயார்படுத்தவில்லை. என்றாலும்இ நான் அல்லாஹ்வையும், அவனது ரஸூலையும் நேசிக்கிறேன் என்றார். அதற்கு பெருமானார் அவர்கள் நீர் யாரை நேசிக்கிறாயோ அவருடன் இருப்பீர் என்றார்கள்.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது கொண்ட நேசம்தான் அவர்களுக்கு வஸீலாவாக அமைகிறது. (புகாரி)

நபிகளார் அறிவிக்கும் ஹதீது புஹாரி, முஸ்லிமில் இடம்பெற்றுள்ளது. 3 நபர்கள் நடந்து சென்ற போது மழை பிடித்தது. ஒரு மலையில் உள்ள குகையில் போய் தங்கினர். அந்த குகையின் வாயிலை மலையில் உள்ள ஒரு பாறை மூடிக் கொண்டது. அவர்களில் சிலர் சிலருக்கு சொன்னார்கள் உங்களது ஸாலிஹான நல்லமல்களை நினைவு கூறுங்கள். அதைக்கொண்டு இறைவனிடம் துஆ செய்யுங்கள். அல்லலாஹ் நம்மை விடுவிப்பான் என்றார்கள். அவர்களில் ஒருவர் சொன்னார்:“இறைவா! எனக்கு வயது முதிர்ந்த பெற்றோர்களும் சிறிய குழந்தைகளும் இருக்கின்றனர். என் பெற்றோர்களுக்கு முன்பாகஇ என் பணியாருக்கோ, என் குடும்பத்தாருக்கோ நான் உணவளிப்பதில்லை. ஒருநாள் ஓர் அலுவலின் காரணமாக நான் வந்து சேர நேரமாகிவிட்டது. அவாக்ளிடம் நான் வந்தபோது அவ்விருவரும் தூங்கி விட்டனர். அவ்விருவருக்கும் முன்னதாக என் குடும்பத்தார்களுக்கும், பணியாளர்களுக்கும் உணவளிக்க நான் விரும்பவில்லை. பாத்திரம் என் கையிலிருந்தது. அவர்கள் தூக்கத்திலிருந்து விழிப்பதை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தேன். விடிந்து விட்டது. அப்பொழுது தான் அவர்கள் துயிலெழுந்து அவர்களுக்கென நான் வைத்துக் கொண்டிருந்த பால் பாத்திரத்தை வாங்கி அருந்தினார்கள். நாயனே! இதனை உன் திருப்தியை நாடி செய்திருந்தால் இப்பாறையின் காரணமாக நாங்கள் அடைந்திருக்கும் நிலையிலிருந்து எங்களை விடுவிப்பாயாக! என்று பிரார்த்தித்தார். அக்கல் சிறிது விலகியது. ஆனால் அவர்கள் வெளியேற இயலாது.

மற்றொருவர்,“நாயனே! எனக்கு சிறிய தந்தையின் புதல்வி ஒருவள் இருந்தாள். எனக்கு அவள் மிகப் பிரியமானவளாக இருந்தாள். அவள் என்னிடம் வந்தபோது, அவளுக்கு 120

தினார்களை கொடுத்து, அவளை தவறான வழிக்கு அழைத்தேன். அவள் இறைவனைப் பயந்து கொள் எனக் கூறினாள். உடனே நான் அவளிடத்தில் செல்வது பாவமெனக் கருதி, அவளை விட்டு விலகி விட்டேன். அவளுக்கு நான் கொடுத்த தீனாரையும் நான் திரும்ப வாங்கவில்லை. நாயனே! நான் உன்னுடைய திருப்தியை நாடி இவ்வாறு செய்திருந்தால் நாங்கள் இப்பொழுதுள்ள நிலையை எங்களை விட்டும் அகற்றுவாயாக என்றனர். அக்கல் விலகிற்று. என்றாலும் அதை விட்டு அவர்கள் வெளியேற இயலாது.

மூன்றாமவர் நாயனே! கூலிக்காரர்களை நான் கூலிக்கும் அமர்த்தினேன். அவர்களுடைய கூலிகளை நான் அவர்களுக்கு கொடுத்து விட்டேன். ஆனால் அவர்களில் ஒருவர் மட்டும் தன் கூலியை வாங்காமல் சென்றுவிட்டார். அவருடைய கூலியை விவசாயத்தில் ஈடுபடுத்தி பெருக்கினேன். அதிலே செல்வம் பெருகியது. சில வருடம் கழித்து என்னிடத்திலே அவர் வந்து அல்லாஹ்வின் அடியாரே! எனது கூலியை எனக்குக் கொடு என்று கேட்டார். அதற்கு நான், நீர் பார்க்கும் இந்த ஆடு, மாடு, ஒட்டகம், அடிமை யாவும் உன் கூலியைச் சார்ந்தவையே என்றேன். அப்போதவர் அல்லாஹ்வின் அடியாரே! என்னை நீர் கேலி செய்ய வேண்டாம் என்றார். உம்மை நான் பரிகசிக்கவில்லை என்று அதை அபிவிருத்தி செய்த விபரத்தை கூறினேன். அதிலிருந்து ஒன்றையும் அவர் மீதம் வைக்காமல் வாங்கிக் கொண்டு சென்று விட்டார். நாயனே! உன்னுடைய திருப்தியை நாடி இதனை நான் செய்திருந்தால், நாங்கள் இப்போதிருக்கும் நிலையிலிருந்து எங்களை விடுவிப்பாயாக! என்று பிரார்த்தித்தார். அக்கல் அகன்றது. அவர்கள் அக்குகையிலிருந்து வெளியேறிச் சென்று விட்டனர் என்று நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவியுற்றேன்.

(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள்)

இந்த ஹதீதின் சரஹிலே இமாம் நவவி ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்: மனிதனுக்கு அவனது கஷ்டமான நிலையிலே மழை தேடிச் செய்யும் துஆவிலும், அவனது நல்லமலைக் கொண்டு துஆச் செய்வதும்இ அவற்றைக் கொண்டு வஸீலா தேடுவதும் முஸ்தஹப்பாகும்.

قَالَ اللهُ تَعَالٰى: يَاۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللهَ وَابْتَغُوْۤا اِلَيْهِ الْوَسِيْلَةَ

ஈமான் கொண்டோரே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். அவனளவில் தேடுங்கள்.

இந்த வசனம் வஸீலா தேடுவது ஜாயிஸ் என்பதற்குரிய ஆதாரமாக இருக்கிறது. இந்த வசனத்தில் வஸீலா என்பது பொதுவானதாகும். நல்லமல்களையும், அமல்களை உடையவர்களையும் பொதிந்துள்ளது. சாவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்: اِبْتِغَاءُ الْوَسِيْلَةِஎன்பது பொதுவாக அல்லாஹ்வின்பால் நெருக்கி வைக்கக் கூடிய ஒன்றாகும். நபிமார்கள், வலிமார்களை நேசிப்பதும், சதக்கா கொடுப்பதும், இறைநேசர்களை ஜியாரத் செய்வது, அதிகமான துஆக்கள், இனபந்துக்களை இணைந்து நடப்பது, அதிகமாக திக்ர் இவை அனைத்தும் வஸீலாவில் கட்டுப்பட்டதாகம்.

"இறைவனளவில் நெருக்கி வைக்கக் கூடிய அனைத்தையும் பற்றிப் பிடியுங்கள். இறைவனை விட்டும் தூரமாக்கக் கூடிய ஒன்றை விட்டுவிடுங்கள் என்பது இந்த ஆயத்தின் கருத்தாகும்.

அமலை உடையவர்களைக் கொண்டும்,ذات ஐக் கொண்டும் வஸீலா தேடுவது:

அமல் உடையவர்களில் மிகச் சிறந்தவர்கள் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். அவர்கள் நமக்கும், இறைவனுக்கும் மத்தியில் இணைப்பு பாலமாகவும், வஸீலாவாகவும் இருக்கிறார்கள். எனவே நமது துஆவில் அவர்களை முற்படுத்துவது அவசியமாகும்.

நல்லமல்களைக் கொண்டு வஸீலா தேடுவதுதான் சிறந்தது என்று சிலர் கூறுகின்றனர். நாம்செய்யக் கூடிய நல்லமல்கள் அல்லாஹ்வினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா? இல்லையா? என்பதே நமக்குத் தெரியாது. அத்தகைய அமலைக் கொண்டு வஸீலா தேடுவது ஜாயிஸ் ஆக இருக்கும் போது, கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொண்டு வஸீலா தேடுவது எப்படி ஜாயிஸ் ஆகாமல் இருக்கும்? அவர்கள் அல்லாஹ்விடத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டவர்களாகவும்இ சங்கையாக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொண்டு வஸீலா தேடுவது, அவர்களை படைப்பதற்கு முன்பும்இ படைத்த பின்பும், துன்யாவில் அவர்கள் காலையிலும், அவர்கள் மௌத்தானதற்குப் பின்பும்இ அனைத்து நிலையிலும் நபியைக் கொண்டு வஸீலா தேடுவது ஆகுமாக்கப்பட்டதாகும். (نفس المرجع)

நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும்இ தனது துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கும், நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வஸீலாவாக்கினார்கள். ஆதம் நபி தனது தவறை உணர்ந்தபோது,

قَالَ يَارَبِّ اَسْئَلُكَ بِحَقِّ مُحَمَّدٍ اَنْ تَغْفِرْلِيْ

என் இரட்சகா! முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொண்டு கேட்கிறேன். என் பாவத்தை மன்னிப்பாயாக என்று கேட்டார்கள். அப்போது இறைவன் அவர்களை நான் படைக்கும் முன், நீங்கள் எப்படி அறிந்தீர்கள்? என ஆதமிடம் கேட்டபோது, யாஅல்லாஹ்! அர்ஷின் மீது உன் திருப்பெயருடன் அவர்கள் பெயர் இணைக்கப்பட்டதை பார்த்தேன் என்றார்கள். எனவே அல்லாஹ் தன் நபியின் பொருட்டால் ஆதம் நபியின் பாவத்தை மன்னித்தான். (مستدرك)

قال تعالى وَكَانُوْا مِنْ قَبْلُ يَسْتَفْتِحُوْنَ عَلَى الَّذِيْنَ كَفَرُوْا (بقرة 89)

அவர்கள் காபிர்களுக்கு கேடாக வெற்றி தேடக்கூடியவர்களாக இருந்தார்கள் سَبَبُ النُّزُوْلِ

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: கைபரில் உள்ள யஹூதிகள் غَطْفَانُ கோத்திரத்தாருடன் போர் செய்தார்கள். அவ்வாறு போர் நடைபெற்றபோது யஹூதிகள் இவ்வாறு துஆ செய்வார்கள்.

اَللّٰهُمَّ اِنَّا نَسْئَلُكَ بِحَقِّ مُحَمَّدٍ النَّبِيِّ الْاُمِّيِّ اَلَّذِيْ وَعَدْتَنَا اَنْ تُخْرِجَهُ لَنَا فِيْ آخِرِ الزَّمَانِ اِلَّا نَصَرْتَنَا عَلَيْهِمْ

இறுதிகாலத்தில் நீ எங்களுக்கு வெளிப்படுத்துவதாக வாக்களித்தாயே! அத்தகைய اُمِّ النَّبِيِّ ஆகிய முஹம்மது நபியைக் கொண்டு உன்னிடம் கேட்கிறேன். அந்த காபிர்களுக்கு கேடாக எங்களுக்கு உதவி செய்வாயாக. என்று துஆ செய்தார்கள். அல்லாஹ் அவர்களுக்கு வெற்றியைக் கொடுத்தான்.

பிறகு நபிகளாரை அல்லாஹ் அனுப்பியபோது அவர்களை நிராகரித்து விட்டார்கள். அல்லாஹ் அப்போது இந்த ஆயத்தை இறக்கினான்.

மேலே கூறப்பட்ட வசனமும், ஆதம் நபியின் வஸீலத்தும்இ கண்மணி நபிகளார் பிறப்பதற்கு முன்பே அவர்களைக் கொண்டு வஸீலா தேடப்பட்டதற்குரிய ஆதாரமாகும்.

அடுத்துஇ அவர்கள் ஹயாத்திலே அவர்களை கொண்டு ஸஹாபாக்கள் வஸீலா தேடினார்கள் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன.

உதுமான் இப்னு ஹுனைப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: "ஒரு முறை நபியின் சமூகத்திற்கு ஓர் அந்தகர் வந்து தன் பார்வையற்ற நிலையை முறையிட்டு, யாரஸூலல்லாஹ் எனக்கு கண் பார்வை இல்லாததால் மிகக் கஷ்டமாக உள்ளது என்னை அழைத்துச் செல்பவர் யாருமில்லை எனக்கூறி, தனக்கு கண்ஒளி அவசியத்தை வெளிப்படுத்தினார். அதற்கு நபி அவாக்ள் அவரிடம் ஒளு செய்து, இரு ரக்அத் தொழுதபின்பு யாஅல்லாஹ்.

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ وَاَتَوَجَّهُ اِلَيْكَ بِنَبِيِّكَ مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ نَبِيِّ الرَّحْمَنِ يَا مُحَمَّدُ اِنِّيْ اَتَوَجَّهُ بِكَ اِلٰى

رَبِّكَ فَيُجَلِّيْ عَنْ بَصَرِيْ اَللّٰهُمَّ شَفِّعْهُ فِيَّ وَشَفِّعْنِيْ فِيْ نَفْسِيْ

யாஅல்லாஹ்! நிச்சயமாக உன்னிடம் கேட்கிறேன். உனதுஅருள் நபியின் பொருட்டால் உன்னளவில் முன்னோக்கி உள்ளேன். யாமுஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நிச்சயமாக உங்களைக் கொண்டு உங்கள் இறைவனளவில் என் கண்பார்வையின் திரையை அகற்ற முன்னோகி உள்ளேன். யாஅல்லாஹ்! நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என் விசயத்தில் செய்யும் பரிந்துரையையும், நான் எனக்காக வேண்டும் பரிந்துரையையும் ஏற்றுக் கொள்வாயாக என்ற துஆவை ஓதும்படி பணித்தார்கள். அவ்வாறே அந்த ஸஹாபியும் செய்தார்கள். இதைப் பற்றி உதுமான் இப்னு ஹுனைப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள். இறைவன் மீது ஆணையாக! நான் அவ்விடத்தை விட்டும் பிரிந்துவிடவில்லை. உரையாடல் நீண்டிடவும் இல்லை. அப்போது அந்த ஸஹாபி வருகிறார்கள். கண்ணில் எவ்வித இருளும் இல்லாததைப் போன்று காட்சி தந்தார்கள்.

(நஸயீ, இப்னு மாஜா, இப்னு ஹுஜைமா)

இந்த துஆவை ஸஹாபாக்கள் வஃபாத்திற்குப் பின்பும் ஓதி வஸீலா தேடி பலன் பெற்றிருக்கிறார்கள்.

www.sufimanzil.org

உத்பி ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்: நான் நபிகளாரின் கப்ருக்கு அருகில் அமர்ந்திருந்தேன். ஒரு காட்டரபி வந்து, اَلسَّلَامُ عَلَيْكُمْ يَارَسُوْلَ اللهِ . அல்லாஹ் கூறியதை நான் செவியுற்றேன்.

وَلَوْ اَنَّهُمْ اِذْ ظَلَمُوْا اَنْفُسَهُمْ جَاءُوْكَ فَاسْتَغْفَرُوا اللهَ وَاسْتَغْفَرَ لَهُمُ الرَّسُوْلُ لَوَجَدُ اللهَ تَوَّابًا رَحِيْمًا (نساء :64)

உங்களிடம் நான் என் பாவங்கள் மன்னிக்கப் பெறுவதை நாடியும், என் இறைவனிடம் உங்களைக் கொண்டு ஷபாஅத்து தேடியும் வந்துள்ளேன் என்றார். பிறகு இந்த கவியைப் பாடினார்.

يَاخَيْرَ مَنْ دُفِنَتْ بِالْقَاعِ اَعْظُمُهُ

فَطَابَ مِنْ طِيْبِهِنَّ الْقَاعُ وَالْاَكَمُ

نَفْسِي فِدَاءٌ لِقَبْرٍ اَنْتَ سَاكِنُهُ

فِيْهِ الْعَفَافُ وَفِيْهِ الْجُوْدُ وَالْكَرَمُ

இக்கவியைப் பாடிவிட்டு திரும்பி சென்றார். அக்காட்டரபி என் கண்களில் தூக்கம் நிகழ்ந்தது. தூக்கத்தில் நபிகளாரைப் பார்த்தேன். உத்பியே! அந்த காட்டரபியிடம் சென்று அல்லாஹ் அவரை மன்னித்து விட்டான் என்று சுபச் செய்தி சொல்லுங்கள் என்றார்கள்.(ابن كثير 1–520) என்பதை உத்பி ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்.

மேற்கூறிய ஆயத்து ஆகிறது நபிகளாரின் மரணத்திற்குப் பின் வஸீலா தேடுவதற்கு ஆதாரமாக உள்ளது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மரணித்தபின் மறுமையில் அவர்கள் நமக்காக ஷபாஅத்து செய்வதைக் கொண்டு உதவி செய்கிறார்கள். அவர்களின் ஷபாஅத்து அன்றி எந்த முஃமினும்ஈடேற்றம் பெற முடியாது. எனவே நபிகளார் மறுமையிலும் நமக்கு வஸீலாவாக இருக்கிறார்கள்.

## الوسيلة فى الغه

அரபி அகராதியில் வஸீலா என்பது தனது நாட்டத்தை நிறைவேற்றி கொள்வதற்கு தனக்கும் இன்னொரு பொருளுக்கும் இடையில் ஒன்றை ஆக்குவதாகும்.

## الوسيلة فى الشريعة

நபிமார்கள், வலிமார்கள் போன்ற நல்லடியார்களையும், நல்லமல்களையும் அல்லாஹ்வுக்கும், அடியார்களுக்கும் இடையில் ஆக்கிக் கொள்வது வஸீலாவாகும்.

அந்த அடிப்படையில் நபிமார்கள், வலிமார்களைக் கொண்டு அவர்கள் ஹயாத்திலும், வபாத்திற்குப் பின்னும் வஸீலா தேடுவது ஷரீஅத்தில் ஆகுமாக்கப்பட்டது. (ஆதாரம்بغية

கண்மணி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களைக் கொண்டும், அவர்களுக்கு முன் சென்ற நபிமார்களைக் கொண்டும் வஸீலா தேடினார்கள் என்பதற்கு கீழ்வரும் ஹதீது ஆதாரமாகத்திகழ்கிறது.

அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தாயார் பாத்திமா பின்த்த அஸத் ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் வபாத்தானபோது நபிகளார் அவர்களுக்காக கப்ர் தோண்டி கரத்தாலே மண்ணை வெளிப்படுத்தினார்கள். இப்பணி முடிவுற்றதும், நபிகளார் அக்கப்ரிலே நுழைந்து ஒரு பக்கமாய் சாய்ந்தவர்களாக கீழ்வரும் துஆவை ஓதினார்கள்.

அனைத்துத படைப்புகளையும் உயிர்பிக்கும், மரணிக்கச் செய்யும் யா அல்லாஹ் என்றுமே அழியாத உயிருடன் இருக்கும் அஸத்துடைய மகள் பாத்திமாவிற்குப் பிழை பொறுப்பாயாக! அவர்களுக்கு வெற்றி பெறும் ஆதாரத்தைக் காட்டிக் கொடு. அவர்கள் நுழையும் இடத்தைத விரிவாக்கு. உனது நபியின் பொருட்டாலும், எனக்குமுன் தோன்றிய நபிமார்களின் பொருட்டாலும், நிச்சயமாக நீதான் கிருபையாளர்களிலெல்லாம் மகா கிருபையாளன். என்று துஆ செய்தார்கள். (தப்ரானி, இப்னு ஹிப்பான், ஹாகிம்)

உயிரானவர்கள், மறைந்தவர்கள் ஆகியோரின் பொருட்டு வேண்டப்படும் வஸீலாவைப் பற்றி நபிகளார் வழங்கிய அழகிய ஹதீது இதோ:-

எவர் தொழுகைக்காக வீட்டை விட்டு புறப்படும்போது, கீழ்க்காணும் துஆ ஓதுவாரோ அவரை வல்ல அல்லாஹ் தனது திருமுகம் கொண்டு முன்னோக்குகிறான். மேலும், அவருக்கு 70மலக்குகளை சாட்டுகிறான். அவர்கள், அவனுக்காக பாவ மன்னிப்பு கோருகின்றனர்.

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ بِحَقِّ السَّائِلِيْنَ عَلَيْكَ وَاَسْأَلُكَ بِحَقِ مَمْشَايَ هٰذَا فَاِنِّيْ لَمْ اَخْرُجْ اَشَرًا وَلَا بَطَرًا وَلَارِيَاءً وَلَاسُمْعَةً وَخَرَجْتُ اِتِّقَاءَ سَخَطِكَ وَابْتِغَاءَ مَرْضَاتِكَ فَأَسْأَلُكَ اَنْ تُعِيْذَنِيْ مِنَ النَّارِ وَاَنْ تَغْفِرَلِيْ ذُنُوْبِيْ اِنَّهُ لَا يَغْفِرُ الذُّنُوْبَ اِلَّا اَنْتَ (احمد وابن ماجه)

இந்த ஹதீதில் இடம் பெற்றுள்ள بِحَقِّ السَّائِلِيْنَ என்ற வார்த்தை உயிரானவர்கள், மறைந்தவர்கள் யாரைக் கொண்டும் வஸீலா தேடலாம் என்பதற்குப் பொது பதமாகும்.

قَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اُبْغُوْنِيْ فِىْ ضُعَفَائِكُمْ فَاِنَّمَا يُرْزَقُوْنَ اَوْيُنْصَرُوْنَ بِضُعَفَائِكُمْ (ابوداود. مشوكات)

உங்களில் பலகீனர்கள், வயது முதிர்ந்தவர்களில் என்னைத் தேடுங்கள். நீங்கள் அவர்களைக் கொண்டு தான் உணவளிக்கப்படுகிறீர்கள், உதவி செய்யப்படுகிறீர்கள்.

சாலிஹீன்களை முற்படுத்துவதிலே பிரயோஜனம் இருக்கிறது என்பது இந்த ஹதீதிலிருந்து விளங்குகிறது.

(வஸீலா என்பது சிபாரிசு) அதாவது தனக்காக ஒருவரிடத்தில், மற்றொருவரிடமும் பரிந்துரைக்கச் சொல்லுவதாகும். இதை 3வகையாகப் பிரிக்கிறார்கள்.

1. நபிமார்கள், வலிமார்கள் பொருட்டால் அவர்களைக் கொண்டு அல்லாஹ்விடம் நமது தேவைகளைக் கேட்பது.

2. நபிமார்கள், விலமார்களிடத்தில் நீங்கள் அல்லாஹ்விடம் எனக்காகப் பிரார்த்தித்து எனது தேவைகளை நிறைவேறச் செய்யுங்கள் என்று கேட்பது.

3. நபிமார்கள், வலிமார்களிடம் தநது தேவைகளைக் கேட்பது.

எவ்வாறு ஒரு முஃமின் கேட்டாலும் உண்மையில் தேவைகளை நிறைவேற்றுவது அல்லாஹ்தான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இம்மூன்று வகைகளில் 3ஆவது வகையான நபிமார்கள், வலிமார்களிடத்திலே தனது தேவைகளைக் கேட்பது - இதற்கு இஸ்திஙாதா என்று சொல்லப்படும்.

சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கையாகிறது, நபிமார்களைக் கொண்டு அவர்கள் ஹயாத்திலும், மரணத்திற்குப் பின்பும் வஸீலா தேடுவதும், அவ்வாறே மற்ற நபிமார்கள், ரஸூல்மார்களைக் கொண்டும் இறைநேசர்களான வலிமார்களைக் கொண்டும் வஸீலா தேடுவதும், ஆகுமாக்கப்பட்ட ஒன்றாகும். ஹயாத்தானவர்களுக்கும், மரணித்தவர்களுக்கும் மத்தியில் பிரித்துக் காட்டும் சிலர், ஹயாத்தானவர்களைக் கொண்டும் வஸீலாவை ஆகுமாக்குகிறார்கள். மரணித்தவர்களைக் கொண்டும் வஸீலா ஜாயிஸ் அல்ல என்று கூறுகிறார்கள். அப்படிக் கூறுகிறவர்கள் தவறிழைக்கிறார்கள். அவர்கள் மரணித்தவர்களின்றி, உயிருள்ளவர்களுக்குத் தான் அந்த சக்தி உண்டு என்று கருதுகின்றனர். இது தவறான கருத்தாகும். நபிமார்களுக்கு முஃஜிஸாத்தும், வலிமார்களுக்கு கராமத்தும் அவர்கள் ஹயாத்தில் உள்ளது போன்று, அவர்கள் மரணித்த பின்பும், அவர்களுக்குத் தொடர்கிறது. மௌத்தைக் கொண்டு முஃஜிஸாத்தும், கராமத்தும் துண்டிக்கப்படாது.

ஷுஹதாக்கள், மரணித்தவர்கள் என்று நீங்கள் எண்ண வேண்டாம். அவர்கள் உயிரானவர்கள். அவர்கள் இரட்சகனிடத்தில் உணவளிக்கப்படுகிறார்கள்.

(آل امران: 169)

நபிமார்கள் அனைவர்களும் ஹயாத்தோடுதான் உள்ளனர் என்பதற்கு ஆதாரம், மிஃராஜுக்கு நபிகளார் சென்ற சமயம் பெருமானரவர்களைப் பின்பற்றி எல்லா நபிமார்களும் தொழுதிருக்கின்றனர். அந்நபிமார்களுடனும், பெருமனார் அவர்கள் உரையாடி இருக்கிறார்கள்.

மிஃராஜிலே நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் உதவியின் காரணமாக 50 வேளை தொழுகை ஆக குறைக்கப்பட்டது.

அஹத் மீதாக் உடைய நாளில் அல்லாஹ் நபிமார்களின் ரூஹுகளை ஒன்று சேர்த்து உங்களுக்கு, நான் நபித்துவத்தையும், வேதத்தையும் தந்தேன். பிறகு, உங்களில் இறுதியாக

ஒரு ரஸூல் வருவார்கள். அவர்களைக் கொண்டு நீங்கள் ஈமான் கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று இறைவன் வாக்குறுதி கேட்டபோது, அனைத்து நபிமார்களும் அவ்வாறே வாக்களித்தார்கள்.

இந்த வசனத்தின் மூலம் இறுதியாக வந்த நபி நாயகத்திற்கு அவர்களுக்கு முன் மரணித்து விட்ட நபிமார்கள் உதவி செய்வார்கள் என்று இறைவன் கூறுகிறான்.

இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்: ஹயாத்தாக இருக்கும்போது யாரைக் கொண்டு உதவி தேடப்படுமோ அவர்கள் மரணித்த பின் அவர்களைக் கொண்டு உதவி தேடப்படும்.

வலிமார்கள் கப்ரில் ஹயாத்தோடு இருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரமாக நபிமார்கள் கூறினார்கள். "அறிந்து கொள்ளுங்கள். வலிமார்கள் நிச்சயமாக மரணிப்பதில்லை. எனினும் அவர்கள் ஒரு இல்லத்திலிருந்து வேறொரு இல்லத்திற்கு குடிபோனவர்கள்".

மேலும் நபிமார்கள் கூறினார்கள். பாம்புஇ வீட்டிலே வெளியானால் நீங்கள் சொல்லுங்கள் இவ்வாறு நிச்சயமாக நாங்கள் உன்னிடம் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின், இன்னும் தாவூது அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மகனார் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ஒப்பந்தத்தைக் கொண்டும் கேட்கிறோம். எங்களை

வேதனை செய்யாதே!" என்று கூறுமாறு பெருமானார் கூறினார்கள். (.ترمذي)

இதிலிருந்து நபிமார்கள் முன்சென்ற மரணித்தவர்களைக் கொண்டு வஸீலா தேடுமாறு நமக்கு ஏவுகிறார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தங்களையன்றி மற்றவர்களைக் கொண்டும் வஸீலா தேடினார்கள்.

اَللّٰهُمَّ انْصُرْنَا عَلَى الْاَعْدَاءِ بِحَقِّ عِبَادِكَ الْفُقَرَاءِ الْمُهَاجِرِيْنَ

யாஅல்லாஹ்! உனது ஏழை அடியார்களான முஹாஜிரீன்களின் பொருட்டால் எங்கள் விரோதிகளுக்கு கேடாக எங்களுக்கு உதவி புரிவாயாக! என்று துஆ கேட்டார்கள்.

உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் பஞ்சம் ஏற்பட்ட போது, அவர்கள் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை வஸீலாவாக கொண்டு இறைவனிடம் மழை தேடினார்கள். மழை பொழிந்தது.

இந்த ஹதீதின் மூலம் நபிகள் நாயகத்தை மட்டுமின்றி, அவர்கள் அல்லாத மற்றவர்களைக் கொண்டும் வஸீலா தேடுவது ஆகுமாகும் என்பதை உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மக்களுக்கு உணர்த்தினார்கள்.

(ஏழை முஹாஜிரீன்களைக் கொண்டு நபிகளார் வஸீலா தேடியதன் நோக்கமாகிறது "நபிகளாருக்கு வஸீலா தேடவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் தனது தோழர்களைக் கொண்டும், தனது காதிம்களைக் கொண்டும் வஸீலா தேடுவது ஜாயிஸ் என்பதை உம்மத்துகளுக்கு உணர்த்துவதற்கும், அவர்களை கண்ணியப்படுத்துவதற்காகவும் அவர்களைக் கொண்டு வஸீலா செய்தார்கள்.)

இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இமாம் ஷாபிஈ ரஹிமஹுல்லாஹ் அவர்களை வஸீலாவாக வைத்து இறைவனிடம் துஆ கேட்டார்கள்.

இமாம் ஷாபிஈ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தாரைக் கொண்டு வஸீலா தேடி இருக்கிறார்கள் என்று இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களது .فتاوي حديثيةவில் கூறுகிறார்கள்.

முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: பற்றற்ற ஜாஹிதுகளை, ஸாலிஹீன்கள், இல்மு உடையவர்கள், மேன்மை உடையவர்கள், மார்க்கமுடையவர்கள் இவர்களைக் கொண்டு வஸீலா தேடுவது முஸ்த்தஹப் ஆகும்.(غنية الطالبين)

4 மத்ஹபில் உள்ள இமாம்களில் அதிகமானோர் கூறுகிறார்கள்: கண்மணி நபிகளாரை ஜியாரத் செய்யக் கூடியவனுக்கு, அவாக்ளின் கப்ர்ஐ முன்னோக்கி நின்று, அல்லாஹ்விடம் அல்லாஹ்விடம் அவனது பாவங்கள் மன்னிப்பதற்கும் அவனது தேவை நிறைவேறுவதற்கும் வஸீலா தேடுவது முஸ்தஹப் ஆகும்.

இப்னு ஹஜருல் ஹைத்தமி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்: மழை தேடி தொழுவதற்காக வந்திருக்கும் அனைவருக்கும், அவர்களின் இக்லாசான அமலைக் கொண்டும், நல்லடியார்களைக் கொண்டும் குறிப்பாக நபியின் குடும்பத்தாரைக் கொண்டும், மறைவாக பரிந்துரை தேடுவது சுன்னத் ஆக்கப்படும்.

நபிமார்கள், வலிமார்கள் மட்டுமின்றி அவர்கள் உபயோகித்த பொருட்களை உதவி தேடப்பட்டது என்பதற்கும் பல ஆதாரங்கள் உள்ளன.

அஸ்மா நாயகியிடம் நபிகளாரின் ஜுப்பா இருந்தது. ஸஹாபாக்களுக்கு வியாதி ஏற்பட்டால் ஜிப்பாவை தண்ணீரில் முக்கி குடிப்பார்கள். அவர்கள் வியாதி நீங்கி விடும். (புஹாரி)

உத்மான் இப்னு மழ்வூன் ரலியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: என் குழந்தைகளுக்கு கண்திருஷ்டி, நோய் ஏற்பட்டால், உம்மு ஸலமா ரலியல்லாஹு அன்ஹு நபியின் ஒரு முடியை எடுத்து தண்ணீரில் முக்கி வருவார்கள். அதை குடித்தால் எங்களுக்கு ஷி்ஃபா கிடைக்கும்.

நபி யூசுப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய சட்டையை நபி யஃகூப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முகத்தில் போட்டபோது கண் பார்வை திரும்பியது என குர்ஆன் கூறுகிறது.

தாவூத் நபி, ஜாலூத்தை கொலை செய்தார்கள். அச்சரிதையில் அவர்களின் கவ்முகள் யுத்தத்திற்குச் சென்றால் ஒரு பெட்டியை வைப்பார்கள்.

அதிலே மூஸா நபியின் கம்பு, தலைப்பாகை, ஹாரூன் நபியின் தலைப்பாகை இருந்தது. அதை முன்வைத்து இறைவா! எங்களுக்கு போரில் வெற்றியைத் தா! என்று கேட்பார்கள். இறைவனும் அவர்களுக்கு வெற்றியை வழங்கினான். எனவே நபிமார்கள், சாலிஹீன்கள் உபயோகித்த பொருட்களும் மக்களுக்கு வஸீலாவாக அமைகிறது. இதனடிப்படையில்தான் நாம் வலிமார்கள், ஷெய்குமார்கள் உபயோகித்த பொருட்களை பரக்கத்திற்காக வைத்துக் கொள்கிறோம்.

அடுத்து வஸீலா என்பது கூடாது, அல்லாஹ்விடம் மட்டும்தான் கேட்க வேண்டும். படைப்புகளிடம் உதவி தேடக்கூடாது என்று கூறி வஸீலாவை மறுப்பவர்கள், இந்த வசனத்தை ஆதாரம் காட்டுகிறார்கள்.

لَاتَدْعُ مَعَ اللهِ اَحَدًا

இறைவனைத் தவிர யாரையும் அழைக்காதீர்கள்

இவ்வசனத்தில் لَاتَدْعُ என்பதற்கு அழைக்காதீர்கள் என்று துஆவுடைய கருத்தை கூறுகின்றனர். ஆனால் இதற்கு முபஸ்ஸிரீன்கள் விளக்கம் கூறும் போது, இறைவனைத் தவிர வேறு யாரையும் வணங்க வேண்டாம். துஆ என்பதற்கு இபாதத் உடைய மஃனாவை கூறுகின்றனர். துஆ என்பதற்கு குர்ஆனில் 9 மஃனா வருகிறது.

بادة . نِدَاءُ. سؤال . استغاثة . نسبة. تمنِّي . قول.

ஆனால் துஆ என்பதற்கு குர்ஆனில் எங்கும் வஸீலாவுடைய மஃனா வரவில்லை. எனுவே அல்லாஹ்வைத் தவிர யாரையும் வணங்க வேண்டாம் என்பதுதான் இந்த ஆயத்தின் விளக்கமாகும்.

நபிமார்களைக் கொண்டும், வலிமார்களைக் கொண்டும் அவர்களது வாழ்நாளிலும் , மரணத்திற்குப் பின்பும் வஸீலா தேடுவதற்கு குர்ஆனும், ஹதீதுகளும் ஆதாரமாக உள்ளது. எனவே நாம் குர்ஆனையும் ஹதீதையும் பின்பற்றி இறைவனிடம் வஸீலா தேடி, நன்மையடைவோமாக!. ஆமீன்.

**அல் இஸ்திஙாதா**

இஸ்திஙாதா என்பதுஇ நபிமார்கள், வலிமார்களில் நின்றும் முஃஜிஸாத்தைக் கொண்டும், கராமத்தைக் கொண்டும் உதவி தேடுவதாகும். அல்லது நபிமார்கள், வலிமார்களின் துஆவைக் கொண்டும், அவர்களின் பரிந்துரையைக் கொண்டும் உதவி தேடுவதாகும். இதற்கு இஸ்திஙாதா என்றும் சொல்லப்படும்.

சாதாரண உதவியைப் பெறுவதாகிறது, சாதாரண மற்ற மனிதர்களில் நின்றும் பெறப்படும்.

وَتَعَاوَنُوْا عَلَى تلْبِرِّوَالتَّقْوٰي وَلَا تَعَاوَنُوْا عَلَى الْاِثْمِ وَالْعُدْوَانِ(مائدة:2)

"நன்மையின் மீதும் தக்வாவின் மீதும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள். பாவத்தின் மீதும், விரோதத்தின் மீதும் உதவி செய்யாதீர்கள் என்கிறான். இறைவன்.

நல்ல விசயங்களிலே உதவி செய்வதைக் கொண்டு மக்களை ஏவுகிறான். எப்போது மற்றவர்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வது ஆகுமானதோ, அப்போது உதவி தேடுவதும் ஆகுமானது என்பது விளங்குகிறது.

قَالَ تَعَالٰى فَاسْتَغَاثَهُ الَّذِيْ مِنْ شَيْعَتِهِ عَلَى الَّذِي مِنْ عَدُوِّهِ

அவர்களின் இனத்தைச் சார்ந்தவன், அவனின் எதிரிக்குப் பாதகமாக உதவி செய்யுமாறு மூஸா நபியிடம் வேண்டினான்.

நமது அகீதாவாகிறது, இறைவன்தான் அனைத்து வஸ்த்துக்களையும் படைத்தான். அவனைத்தவிர படைக்கக் கூடியவன் யாருமில்லை. அடியானாகிறவன் அவனது செயல்களையும், அமல்களையும் சம்பாதிக்கக் கூடியவன். உதவி என்பது படைப்பாலும் பெற்றுக் கொள்வதாலும், அல்லாஹ்வின்நின்றுமே உண்டாகிறது.நபிமார்களும், வலிமார்களும் உதவி பெறப்படுவதற்கு காரணமாகவும் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து உண்டாகக் கூடிய முஃஜிஸாத்தும், கராமத்தும் அல்லாஹ்வின் உத்தரவைக் கொண்டும், அவனது நாட்டத்தைக் கொண்டும் உண்டாகிறது. அவர்களின் முஃஜிஸாத்து, கராமத்து, துஆஇ ஷபாஅத் இவைகளைக் கொண்டு அவர்களிடம் உதவி தேடுவது, வெளிரங்கத்திலாகும். ஹகீகத்திலே உதவி தேடப்படுவது அல்லாஹ்விடமாகும். ஹகீகத்தில் உதவி செய்பவன் அல்லாஹ் மட்டுமே. ளாஹிரில் உதவி செய்பவர்கள் நபிமார்கள், வலிமார்கள். எனவே தான் மனிதன் உதவி கிடைத்தபின் அல்ஹம்துலில்லாஹ் என்று இறைவனைப் புகழ்கிறான். நபிமார்கள், வலிமார்கள் ஹயாத்திலும், அவர்கள் மரணித்தபின்பும் உதவி தேடப்படும்.

இமாம்கள் கூற்று:

لأنّ المعجزة والكرامة لا ينقطع بالموت

ஏனெனில் முஃஜிஸாத்தும், கராமத்தும் மௌத்தைக் கொண்டு துண்டிக்காது.

சாதாரண உதவிகள் அனைத்தும்இ அல்லாஹ்வின் உத்திரவைக் கொண்டும், அவனது நாட்டத்தைக் கொண்டும், அவனது சக்தி, அவனது படைப்பைக் கொண்டுமே பெறப்படுகிறது. அவனது சக்தியின்றி மனிதனில் எந்த ஒரு செயலும் நடைபெறாது. மனிதன் எந்த செயலை செய்தாலும், அதனை செயல்படுத்துபவன் இறைவன்தான்.

وَمَا رَمَيْتَ إِذْ رَمَيْتَ وَلَكِنَّ اللهَ رَمَىٰ

நபிகளார் பத்ரிலே முஷ்ரிகீன்கள் மீது ஒரு ஒரு பிடி மண்ணை அள்ளிப்போட்ட போது, நீங்கள் மண்ணை எறிந்த போது நீங்கள் எறியவில்லை. அல்லாஹ்தான் எறிந்தான் எனக் கூறினான் இறைவன். இவ்வசனம் நபிகளார் எறிந்தார்கள் என்பதையும், உறுதிப்படுத்துகிறது. எறியவில்லை என்பதையும் கூறுகிறது.

اِنَّهُ رَمَاهُ كَسْبًا وَمَا رَمَاهُ خَلْقًا

كسب ஆல் எறிந்தார்கள். படைப்பால் அவர்கள் எறியவில்லை.

மலக்குகள்இ நபிமார்கள், வலிமார்களிடம் முஃஜிஸாத்து, கராமத்தின் காரணமாக உதவி பெறப்படுகிறது. இவ்வுதவிகள் அல்லாஹ்வின் உத்திரவைக் கொண்டும், அவனது நாட்டத்தைக் கொண்டும், சாதாரண உதவியைப் போன்ற அசாதரமான உதவிகளும் பெறப்படுகிறது.

யஜீத் இப்னு அபீ அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: ஸலமத் இப்னு அக்வஃ ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கெண்டைக்காலில் காயத்தின் அடையாளத்தைப் பார்த்தேன். இது என்ன காயம்? எனக் கேட்டபோது, இது கைபர்போரிலே ஏற்பட்டது. நான் நபிகளாரிடம் வந்தேன். 3 முறை அந்த காயத்தில் ஊதினார்கள். அன்றிலிருந்து இந்நேரம் வரை அக்காயம் எந்த நோவினையையும் அளிக்கவில்லை என்றார்கள். நபிகளாரின் முஃஜிஸாத்தைக் கொண்டு சஹாபாக்கள் நபிமார்களின் அசாதாரண உதவியையும் பெற்றிருக்கிறார்கள்.

قَالَ يَا أَيُّهَا الْمَلَأُ أَيُّكُمْ يَأْتِينِي بِعَرْشِهَا قَبْلَ أَنْ يَأْتُونِي مُسْلِمِينَ(نمل:38)

பிரதானிகளே! அவர்கள் முஸ்லிமாக என்னிடம் வரும் முன் உங்களில் யார் அவளுடைய சிம்மாசனத்தை என்னிடம் கொண்டு வருவார்? என்று சுலைமான் நபி கேட்டார்கள்.

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகளாரிடம் "யாரஸூல்லல்லாஹ் உங்களிடமிருந்து நான் அதிகமான ஹதீதுகளை செவியுறுகிறேன். அவற்றை மறந்து விடுகிறேன் என்றார்கள். அப்போது நபிகளார் "உங்களது மேலங்கியை விரியுங்கள் என்றார்கள். அதை நான் விரித்தேன். தனது கைகளால் எதையோ அள்ளிப் போட்டார்கள். அதை சேர்த்துக் கொள் என்றார்கள். அந்த மேலங்கியை நான் என்னுடன் சேர்த்துக் கொண்டேன். அதற்குப் பின் எனக்கு மறதியே ஏற்படவில்லை என்றார்கள். (புஹாரி 119, 3648)

அனஸ் இப்னு மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: "ஒரு மனிதன் ஜும்ஆ தினம் அன்று, ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குத்பா ஓதிக் கொண்டிருக்கும் நிலையில் மிம்பருக்கு நேராக உள்ள வாசலில் நுழைந்தார். நபிகளாரை முன்னோக்கி கூறினார்கள். அல்லாஹ்வின் தூதரே! பொருட்கள் நாசமடைந்து விட்டன. பாதைகள் துண்டித்து விட்டன. எங்களுக்கு மழை வருவதற்காக அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள் என்றார்கள். ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கையை உயர்த்தி......... யாஅல்லாஹ்! எங்களுக்கு மழை பொழிவிப்பாயாக! என்று துஆ செய்தார்கள். அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: அச்சமயம் வானில் ஒரு துண்டு மேகத்தைக் கூட நாங்கள் பார்த்ததில்லை. என் ஆன்மா யார் கைவசமிருக்கிறதோ அவன் மீது ஆணையாக கூறுகிறேன். உயர்த்திய கரங்களை கீழே போடும்முன் மேகம் மலைபோல் திரண்டது. பின் மிம்பரை விட்டு கீழே இறங்குவதற்குள்ளாக மழைத்துளி அவர்களின் தாடி மீது விழுவதை நான் பார்த்தேன். தொடர்ந்து ௬நாட்களாக சூரியனைப் பார்க்கவில்லை. பின்னர் அடுத்த ஜும்ஆவில் அதே மனிதர் நுழைந்தார். நபிகளார் குத்பா ஓதிக் கொண்டிருக்கும்போதுஇ "யாரஸூலல்லாஹ்! பொருட்கள் நாசமாகிவிட்டது. பாதைகள் முறிக்கப்பட்டு விட்டது. மழையை நிறுத்துமாறு துஆ செய்யுங்கள் என்றார்கள். நபிகளார் இரு கரங்களை உயர்த்திஇ

اَللّٰهُمَّ حَوَالَيْنَا وَلَا عَلَيْنَا اَللّٰهُمَّ عَلَى الْاٰكَامِ وَالْجِبَالِ وَالظِّرَابِ وَالْاَوْدِيَةِ وَمَنَابِتِ الشَّجَرِ

நாயனே! எங்களைச் சுற்றிலும் மழை பெய்யச் செய்வாயாக! எங்கள் மீது வேண்டாம். நாயனே! மேடுகள், மலைகள் மீதும் ஓடைகளுக்குள்ளும், மரங்கள் முளைத்திருக்கும் இடங்களிலும் பெய்யச் செய்வாயாக! என துஆ செய்தார்கள். மழை நின்றது. நாங்கள் வெயிலில் வெளியே சென்றோம்.

அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ரலியல்லாஹு அன்ஹு

நூல்: புகாரி 137

மேற்கூறப்பட்ட ஹதீதுகள் இஸ்திஙாதாவிற்கு ஆதாரமான ஹதீதுகளாகும்.

சக்தி என்பது மௌத்தைக் கொண்டு துண்டிக்காது. அது ஆகிறத்தைக் கொண்டு ஈமான் கொள்வதின் ஒரு பகுதியாகும்.

கஸ்ஸாலி இமாம் கூறும்போது, மௌத் என்பதின் மஃனாவாகிறது. அதன் நிலைமை மட்டும் மாறுவதாகும். றூஹு ஆகிறது உடம்பை விட்டும், பிரிந்த பின்பும் வேதனை செய்யப்பட்டதாகவோ, இன்பம் அனுபவிக்கப்பட்டதாகவோ தரிபட்டிருக்கும். (إحياء 332-4)

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: "மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு நபிகளார் إسراءசென்றபோது ஆதம் நபி முதல் அனைத்து நபிமார்களையும் அல்லாஹ் எழுப்பினான். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அதான் சொன்னார்கள். பிறகு இகாமத் சொன்னபின் "நபியே நபிமார்களுக்குத் தொழ வையுங்கள்" என்றார்கள். நபிகளார் தொழுது முடித்தபின் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்களே! ரஸூல்மார்களில் நின்றும், உங்களுக்கு முன்சென்ற ரஸூல்மார்களிடம் கேளுங்கள்" என்று ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

وَسْئَلْ مَنْ اَرْسَلْنَا مِنْ قَبْلِكَ مِنْ رُّسُلِنَآ

இந்த வசனத்திலிருந்து நபிகளார், ரஸூல்மார்களில் நின்றும், மரணித்து விட்டவர்களிடம் கேட்டால் அவர்கள் செவியுறுவார்கள் என்பது விளங்குகிறது. (زخرف:45)

முல்லா அலிகாரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்: روح مؤمن ஆகிறது, வானம், பூமியிலே சுற்றித் திரிகிறது. அது நாடிய புறத்திலே சுவனம் செல்கிறது. அர்ஷுக்கு கீழே உள்ள விளக்குகளின்பால் அதுஒதுங்குகிறது. மேலும் அந்த றூஹுக்கு அதன் உடம்பைக் கொண்டு பூரணமான கொழுகுதலும் உள்ளது. அந்நேரம் கப்ரிலே குர்ஆன் ஓதுகிறார்கள், தொழுகிறார்கள், சுகம் அனுபவிக்கிறார்கள். மணமகனின் தூக்கத்தைப் போன்று தூங்குகிறார்கள். சுவனத்திலே அவர்களின் இடத்தைப் பார்க்கிற றூஹின் விஷயங்களும், கப்ரின் நிலை, மறுமையின் நிலைகள் அனைத்தும் வழமைக்கு மாற்றமாகும். அவற்றில் நின்றும் எந்த ஒன்றும் முஃமீன்களுக்கு சந்தேகம் ஏற்படுத்தாது. (مرقاة:334-6)

وَلَا تَقُوْلُوْا لِمَنْ يُّقْتَلُ فِىْ سَبِيْلِ اللّٰهِ اَمْوَاتٌ بَلْ اَحْيَآءٌ وَّلٰكِنْ لَّا تَشْعُرُوْنَ (بقرة:154)

அல்லாஹ்வின் பாதையில் ஷஹீதானவர்களை மரணித்தவர்கள் என்று கூறாதீர்கள். மாறாக, அவர்கள் உயிருள்ளவர்கள் என்றாலும் நீங்கள் உணர மாட்டீர்கள். (بقرة:154)

இந்த ஆயத்தின் விரிவுரையில் ராஜி இமாம் கூறும்போது, இறைவன் பாதையில் வெட்டப்பட்டவர்களை, அதற்குப் பின் அல்லாஹ் உயிர்ப்பிக்கிறான். அவர்களுக்குப் பலவகையான சந்தோஷம், மகிழ்ச்சியின் பால் அவர்களை சேர்த்து வைக்கிறான்.

(رازي:88–9)

ஷுஹதாக்களுக்கு உணவு, குடிப்பு கப்ரிலே இருக்கிறது என்பதை இவ்வாயத்து உணர்த்துகிறது. இவ்வாயத்தின் விளக்கத்திலே تفسير مظهري கூறும்போது அல்லாஹ்தஆலா, ஷுஹதாக்களின் றூஹுகளுக்கு உடம்பின் சக்தியைக் கொடுக்கின்றான். அவர்கள் நாடிய புறத்திலே பூமி, வானம், சுவர்க்கத்திலே சுற்றித் திரிகிறார்கள். தங்களின் நேசர்களுக்கு உதவி செய்கிறார்கள்.

(التفسير المظهري121–2.)

**இஸ்திஙாதாவைப் பற்றி அறிவிக்கும் ஆதாரமான வசனங்கள்:**

قَالَ تَعَالىٰ : فَاِنَّ اللّٰهَ هُوَ مَوْلَاهُ وَجِبْرِيْلُ وَصَالِحُ الْمُؤْمِنِيْنَ وَالْمَلَائِكَةُ بَعْدَ ذٰلِكَ ظَهِيْرٌ(تحريم :4)

நிச்சயமாக அல்லாஹ் அவர்களின் உதவியாளன். ஜிப்ரயீலும், விசுவாசிகளிலுள்ள நல்லடியார்களும், அதன் பின்னர் மலக்குமார்களும் உதவியாளர்கள்.

இவ்வசனத்தில் அல்லாஹ்வும், ஜிப்ரயீலும், நல்லடியார்களும் உதவியாளர் என்பதால் அவர்களிடம் தேவைகளுக்காக உதவி தேடுவது அனுமதிக்கப்பட்டது என்பது தெளிவாகிறது.

இதில். صَالح المؤمنين என்பது நபிமார்களை குறிக்கிறது என்று طبري இமாம் கூறுகிறார்கள்.

وَمَنْ يُطِعِ اللّٰهَ وَالرَّسُوْلَ فَاُولٰٓئِكَ الَّذِيْنَ اَنْعَمَ اللّٰهُ عَلَيْهِمْ مِنَ النَّبِيِّيْنَ وَالصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَآءِ وَالصَّالِحِيْنَ

وَحَسُنَ اُولٰٓئِكَ رَفِيْقًا(نساء :69)

யார் அல்லாஹ்விற்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்படிந்து நடக்கின்றார்களோ அவர்கள் நபிமார்கள், சத்தியவான்கள், ஷஹீதுகள், நல்லடியார்கள் ஆகியோர்களிலிருந்து அவர்கள் மீது அல்லாஹ் அருள் செய்திருக்கிறானோ அத்தகையோருடன் இருப்பார்கள். தோழமைக்கு இவர்கள் அழகானவர்கள்.

இவ்வாயத்தின் விளக்கவுரையில் ராஜி இமாம் கூறும் போது ர.ஃபீக் என்பவர் அவருடன் பிரயாணத்திலும், ஊரிலும் இணைந்திருப்பவர் எனவே அல்லாஹ்விற்கும், ரஸூலுக்கும் வழிபடக்கூடியவர்கள். நபிமார்கள், சித்தீக்கீன்கள், ஷுஹதாக்களுடன் இணைந்து இருக்கிறார்கள். ஷுஹதாக்கள் உதவி செய்கிறார்கள். இந்த உதவியாகிறது சுவர்க்கத்தில் மட்டுமல்ல ர.ஃபீக் என்பதன் பொருளாகிறது معين உதவி செய்பவர் என்பதாகும்.

إِنَّمَا وَلِيُّكُمُ اللّٰهُ وَرَسُوْلُهُ وَالَّذِيْنَ آمَنُوا الَّذِيْنَ يُقِيْمُوْنَ الصَّلٰوةَ وَيُؤْتُوْنَ الزَّكَاةَ وَهُمْ رَاكِعُوْنَ وَمَنْ يَتَوَلَّ اللّٰهَ رَسُوْلَهُ

وَالَّذِيْنَ آمَنُوْا فَإِنَّ حِزْبَ اللّٰهِ هُمُ الْغَالِبُوْنَ (مَائِدَة : )

உங்களுடைய நண்பனெல்லாம் அல்லாஹ்வும், அவனது தூதரும் இன்னும் ஈமான் கொண்டார்களே அவர்களும்தான். அவர்கள் எத்தகையவர்கள் எனில், பணிந்தவர்களாக, தொழுகையை நிறைவேற்றி ஜகாத் கொடுத்தவர்கள். எவர் அல்லாஹ்வையும், அவன் தூதரையும் விசுவாசங் கொண்டவர்களையும், தோழர்களாக எடுத்துக் கொள்கிறார்களோ அப்போது (அவர்கள் தாம் அல்லாஹ்வின் கூட்டத்தினர்கள்) நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தினர் அவர்கள்தான் வெற்றியாளர்கள்.

ராஜி இமாம் கூறும்போது,

إِنَّمَا وَلِيُّكُمُ اللهُ... لَيْسَ إِلَّا بِمَعْنَى النَّاصِرِ وَالْمُحِبِّ

ولي வலி என்பதன் மஃனா ناصر .محبّ உதவியாளன், நேசன் என்பதை குறிக்கிறது என கூறுகிறார்கள்.

**இஸ்திஙாதாவின் மீது அறிவிக்கும் ஹதீதுகள்:**

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் அன்சாரிகள் சிலரை அபூராபிவு என்ற யஹூதியின்பால் அனுப்பி வைத்தார்கள். அவர்களுக்கு அப்துல்லாஹ் இப்னு அதீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை தலைவராக்கினார்கள். அந்த நிகழ்வில் அப்துல்லாஹ் இப்னு அதீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கால் ஒடிந்தது. அந்த ஸஹாபி கூறுகிறார்கள்: நான் நபிகளாரிடம் வந்து முறையிட்டேன். உனது காலை நீட்டு என்று நபிகளார் கூறினார்கள். நான் எனது காலை நீட்டினேன். நபிகளார் எனது காலை தனது கையால் தடவினார்கள். அதற்குப் பிறகு ஒருபோதும் எனது காலில் வலி

ஏற்பட்டதில்லை என கூறுகிறார்கள். (2–577بخاري)

ரபீவு இப்னு கஃப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: நபிகளாருடன் நான் இரவு தங்கினேன். அவர்களுக்கு உளு செய்ய தண்ணீர் கொண்டு கொடுத்தேன். என்னிடம் நபிகளார் நீ கேள் என்றார்கள். அப்போது நான் நபியே உங்களுடன் நான் சுவனத்தில் இணைந்திருக்க வேண்டும் என கூறினேன். அப்போது நபிகளார் என்னிடம் வேறு தேவையிருக்கிறதா? என கேட்டார்கள். அப்போது நான் இல்லை. இது மட்டும்தான் என் தேவை என்று கூறினேன். அப்போது நபிகளார் என்னிடம் நீ அதிகமான ஸுஜூது

செய்வதைக் கொண்டு எனக்கு உதவி செய் என்றார்கள். (مشكوة , مسلم)

மேற்கூறப்பட்ட ஹதீதுகள் நபிகளாரின் முஃஜிஸாத்துவைக் கொண்டு துன்யாவிலும், ஆகிறத்தின் ஈடேற்றத்திற்கும் உதவி தேடப்பட்டதைக் குறிக்கும்.

ஹயாத்திலே எப்படி உதவிதேடுவது ஆகுமாக்கப்பட்ட அதுபோல் மௌத்திற்குப் பின்பும், தூரத்திலிருந்தும் உதவி தேடுவது ஜாயிஸ் ஆகும். மௌத்திற்குப் பின் நபிமார்கள்,

வலிமார்களிடம் உதவி தேடுவது ஷிர்க் ஆகாது. மௌத்திற்குப் பின்பும் அவர்களுக்கு கராமத்து, முஃஜிஸாத்தின் அடிப்படையில் அவர்களுக்கு பேசக்கூடிய ஆற்றல், மற்றவர்கள் பேசுவதை செவியுறும் ஆற்றல், உண்ணுதல், குடித்தல் போன்ற ஆற்றல், ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு செல்லும் ஆற்றல் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் ஹயாத்தில் உதவி தேடப்படுவது போல் மரணத்தின் பின்பும், தூரத்திலிருந்தும், வலிமார்கள், நபிமார்களிடம் மறைவான உதவி தேடப்படுவது ஆகுமாக்கப்பட்டதாகும். அதற்கு ஆதாரமான ஹதீதுகள் அதிகமுள்ளன. عبدُ الرَّحْمٰن ابن سعدٍ

رضي الله عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் இருந்தேன். அவர்களின் கால் எலும்புகள் ஒன்று சேர்ந்து விட்டது. நான் சொன்னேன், அபூ அப்துர் ரஹ்மானே! உங்கள் காலுக்கு என்ன நேர்ந்தது? எனக் கேட்டேன். கால் எலும்புகள் பிடித்துக் கொண்டன என்றார்கள். உங்களுக்கு நேசமானவரை அழையுங்கள் என சொன்னேன். அவர்கள் யா முஹம்மத் என அழைத்தார்கள். பிறகு அவர்கள் காலை நீட்டினார்கள். (الادب المفرد)

பெருமானார் அவர்கள் கூறினார்கள்:

قال رسوالله صلى الله عليه وسلم انّ للهِ حلقا خلقهم لحوائج الناس يُفْزَعُ الناسُ اليهم فى حوائجهمْ اُوْلَئِكَ هُمُ الْاَمِنُوْنَ مِنْ

عَذَابِ اللهِ (حُلْيَةُ الْاَوْلِيَاءِ ٢٢٥-٣)

அல்லாஹ்விற்கு சில படைப்புகள் இருக்கின்றனர். அல்லாஹ்தஆலா அவர்கள் மக்களின் தேவைகளுக்காக படைத்திருக்கிறான். மக்கள் தங்களது தேவைகளுக்காக அவர்களிடம் உதவி தேடுகிறார்கள். அவர்கள் அல்லாஹ்வின் வேதனையை விட்டும் அச்சமற்றவர்கள்.

وَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اِذَا اَفَلَّا اَحَدُكُمْ فَلْيَقُلْ يَاعِبَادَ اللهِ اَغِيْثُوْنِيْ وَفِى رَوَايَةٍ اَعِيْنُوْنِيْ فَاِنَّ لِلّٰهِ عِبَادٌ لَاتَرَوْنَهُمْ (رواه

الطبراني و الاكم والبزّار)

உங்களில் ஒருவர் ஒரு பொருளை தொலைத்து விட்டால் அல்லது உதவியை நாடினால் மனிதாக்ள் இல்லாத இடத்தில் உதவியை தேடினால் அல்லாஹ்வின் அடியார்களே! எனக்கு உதவி செய்யுங்கள் எனக் கூறட்டும். மற்றொரு ரிவாயத்தில் எனக்கு உதவி செய்யுங்கள் அல்லாஹ்விற்கு, நீங்கள் பார்க்கமாட்டீர்களே அத்தகைய அடியார்கள் இருக்கிறார்கள் என கண்மணி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

عَنِ ابْنِ عَبَّاسٍ اَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ اِنَّ لِلّٰهِ تَعَالٰى مَلَائِكَةً فِى الْاَرْضِ سِوَي الْحَفَظَةِ يَكْتُبُوْنَ مَايَسْقُطُ مِنْ وَرَقِ

الشَّجَرِ فَاِذَا اَصَابَتْ اَحَدَكُمْ عَرْجَةٌ بِاَرْضِ فَلَاةٍ فَلْيَتَنَادِ يَاعِبَادَ اللهِ اَعِيْنُوْنِيْ (البزّار)

அல்லாஹ்விற்கு பூமியிலே பாதுகாக்கும் மலக்கைத் தவிர வேறு மலக்குகள் இருக்கிறார்கள். மரத்தின் உதிரக்கூடிய இலைகளையும் எழுதுவார்கள். உங்களில்

ஒருவருக்கு காலில் வலி ஏற்பட்டால் அவர்கள் يَاعِبَادَ اللهِ اَعِيْنُوْنِيْ அல்லாஹ்வின் அடியார்களே! எனக்கு உதவி செய்யுங்கள் என அழைக்கட்டும் என்றார்கள்.

عباد الله என்பதைக் கொண்டு நோக்கமாகிறது மலக்குகள், முஸ்லிமான ஜின்கள் அப்தால் என்று பெயர் சொல்லப்பட்ட மறைவான மனிதர்கள் ஆகும். (فُتُوْحَاتُ : 151)

அஹ்மது இமாம் ரஹிமஹுல்லாஹு அவர்கள் சொல்கிறார்கள்:- "நான் 5 ஹஜ் செய்தேன். அதில் 3 ஹஜ்ஜுகள் நடந்து சென்று நிறைவேற்றினேன். அப்போது நான் பாதை தவறிவிட்டேன். அப்போது நான்,

يَاعِبَادَ اللهِ دُلُّوْنِيْ عَلَى الطَّرِيْقِ

இறை அடியார்களே! எனக்குப் பாதையை அறிவித்துத் தாருங்கள் எனக் கூறினேன். அவ்வாறு கூறுவதை நான் நிறுத்தும்முன் என் பாதையில் நான் வந்து நின்றேன் எனக் கூறுகிறார்கள்.

(اَلْبِدَايَةُ وَالنِّهَايَةُ)

அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்படுகிறது "நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் உங்களில் ஒருவரின் வாகனம் கட்டுக்கடங்கவில்லை என்றால் يَاعِبَادَ اللهِ اِحْبِسُوْا يَاعِبَادَ اللهِ اِحْبِسُوْا என அழையுங்கள். அல்லாஹ்விற்கு பூமியிலே ஹாளிராக உள்ள மலக்குகள் இருக்கிறார்கள். அவர்கள் அதனைக் கட்டுப்படுத்துவார்கள். (عمل اليوم والليلة ٢٤٠)

அலி இப்னு அபீதாலிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் வனவிலங்குகளை பயப்படக்கூடிய ஓர் ஓடையிலே நீ ஆகிவிட்டால்,

اَعُوْذُ بِدَانِيَال وَبِالْجُبِ مِنْ شَرِّ الْاَسَدِ

தான்யால் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொண்டும், கிணற்றிற்குரியவர் யூசுப் அலைஹிஸ்ஸலாம்அவர்களைக் கொண்டும் சிங்கத்தின் கெடுதியை விட்டும் பாதுகாவல் தேடுகிறேன் எனக் கூறட்டும் என்றார்கள். (عمل اليوم والليلة167)

عَنْ خَوْلَةَ بِنْتِ حَكِيْمٍ قَالَتْ سمعتُ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُوْلُ مَنْ نَزَلَ مَنْزِلًا فَقَالَ اَعُوْذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ لَمْ يَضُرَّهُ شَيْئٌ حَتّٰي يَرْتَحِلَ مِنْ مَنْزِلِهِ ذَالِكَ (رواه مسلم ومشكوة ٢١٣-١)

ஹவ்வா பின்த் ஹகீம் ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்: நபிகளாரிடம் நான் செவியுற்றேன் பிரயாணத்தில் ஓரிடத்தில் இறங்கி,

اَعُوْذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ

என்று ஓதினால், அந்த இடத்தை விட்டும் பயணிக்கும்வரை எந்த ஒன்றும் தீங்கிழைக்காது.

இந்த ஹதீதில் கலீமாத்துல்லாஹி என்பது அப்துல்லாஹ் - அல்லாஹ்வின் அடியார்களைக் குறிக்கிறது.

ராஜி இமாம் கூறும்போது,

اَعُوْذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ

அல்லாஹ்வின் பூரணமான வார்த்தைகள் என்பது தூய்மையான, உயர்வான, மணமான ரூஹ்களாகும். (رازي: ١–٧٢)

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தம் பேரர்களாகிய ஹஸன், ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு பாதுகாப்புத் தேடினார்கள்.

اُعِيْذُكُمَا بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ مِنْ كُلِّ شَيْطَانٍ وَهَامَّةٍ وَمِنْ كُلِّ عَيْنٍ لَامَّةٍ

ஷைத்தான்களை விட்டும், விஷ ஜந்துக்களை விட்டும், கெடுதல் ஏற்படுத்தும், கண் பார்வைகளை விட்டும், இறைவனின் பூரண வார்த்தைகளைக் கொண்டு பாதுகாவல் தேடுகிறேன் எனக் கூறினார்கள். நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும், அவர்களது மகனார் இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களும், அவர்களது மகனார் இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களும், இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆகியோருக்கு இவ்வாறே பாதுகாப்பு தேடினார்கள்" என நபிகளார் கூறினார்கள். (ابو داود : ٢–٣١٢)

ஷாபி இமாம் ரஹிமஹுல்லாஹு அவர்கள் கூறுகிறார்கள்: அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்களைக் கொண்டு நான் பரக்கத் பெற்றேன். ஒவ்வொரு நாளும் அவர்களுடைய கப்ருக்கு வந்து ஜியாரத்து செய்வேன். எனக்கு ஒரு தேவை ஏற்பட்டால், 2ரக்அத் தொழுது, பின் அவர்கள் கப்ருக்கு வந்து, அவர்களிடத்தில், அல்லாஹ்விடம் என் தேவையை கேட்பேன். எனது தேவை உடனே நிறைவேற்றப்படும் என கூறுகிறார்கள். (تَاريخ البغداد ١٢٣–١)

உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் காலத்தில் பஞ்சம் ஏற்பட்டது ஒரு மனிதான் நபிகளாரின் கபுரிடத்தில் வந்து, யாரஸூல்லாஹ்! உங்கள் உம்மத்திற்கு மழை பொழியத் தேடுங்கள். அவர்கள் பஞ்சத்தால் அழிகிறார்கள் என்று கேட்டுவிட்டு சென்றார். நபிகளார் ஒரு மனிதரின் கனவில் தோன்றி அம்மனிதரிடம் சொன்னார்கள், உமர் ரலியல்லாஹு

அன்ஹு அவர்களிடம்சென்று என் ஸலாமை சொல்லுங்கள். பிறகு மழை பொழியப்படும் என்று அவர்களுக்கு அறிவியுங்கள்" என சொன்னார்கள். அம்மனிதர் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் செய்தியை அறிவித்தார். அதன்படி மழை பொழிந்தது.

(فتح الباري, البداية والنهاية)

இப்னு ஹஜர் ரலியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்: "நபிகளாரை கனவில் பார்த்த மனிதர் பிலால் இப்னு ஹாரிதுல் முஜ்னி ரலியல்லாஹு அன்ஹு என்ற ஸஹாபி எனக் கூறுகிறார்கள்.

மௌத்தாக்களிடம் கேட்பது பிரயோஜனம் அளிக்காது. அவர்களால் எப்படி உதவி செய்ய முடியும்? என்பது வஹ்ஹாபிகளின் கூற்று.

**வஹ்ஹாபிகளின் கேள்விக்குரிய பதில்.**

மௌத்தாக்களிடம் கேட்பதிலே பிரயோஜனம் இல்லையென்றால் கப்ரிலே முன்கர், நகீர் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கேள்வியின் நிலை என்ன? ஷுஹதாக்களும், சாலிஹீன்களும் உதவி செய்கிறார்கள் என்பது குர்ஆன், ஹதீதின் கூற்று.

حَسُنَ أُولَٰئِكَ رَفِيقًا இதில் ரஃபீக் என்பது رَفِيقًا உதவியாளரை குறிக்கும் என தப்ஃஸீரிலே கூறப்படுகிறது. நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரணித்த பின் மிஃராஜுடைய இரவிலே 50 நேரத் தொழுகையை 5 ஆகக் குறைத்து அனைத்து முஸ்லிம்களுக்கும் உதவி புரிந்தார்கள் என்ற ஹதீது புகாரியில் இடம்பெற்றுள்ளது. إِنَّكَ لَا تُسْمِعُ الْمَوْتَىٰ என்ற ஆயத்திலே மௌத்தாக்களின் اجساد செவியுறாதே தவிர (ارواح) அவர்களின் ரூஹுகள் செவியுறும் என முபஸ்ஸிரீன்கள் விளக்கம் கூறுகின்றனர்.

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ உன்னையே நாங்கள் வணங்குகிறோம். உன்னிடமே நாங்கள் உதவி தேடுகிறோம். என்பதில் இறைவனிடம் உதவி தேடுவதாகிறது ஹகீகத்தில் ஆன உதவியாகும்.(اعانه حقيقة உள்ரங்கம்) லே உதவி செய்வது இறைவனைத் தவிர வேறு யாருமில்லை. மலக்குகள், நபிமார்கள், வலிமார்கள், ஏனைய மனிதர்களிடமிருந்து பெறப்படும் உதவியாகிறது, ஹகீகத் ஆன உதவி அல்ல. மாறாக ளாஹிர் ஆன உதவியாகும். (اعانه ظاهرية) அவ்வுதவி இறைவனின் சக்தியைக் கொண்டும், அவனது நாட்டம், உத்தரவைக் கொண்டும் உண்டாகக் கூடியது. நபிமார்கள், வலிமார்களிடம் கேட்கக் கூடிய உதவியில் இறைவனுக்குரிய أُلُوهِيَّةُ தையும், صَمَدِيَّة யையும் அவர்களுக்கு நாடினால் அது ஷிர்க்காகும். ஆனால் நபிமார்களிடமும், வலிமார்களிடமும் முஃஜிஸாத், கராமத்தை நாடி உதவி கேட்பது ஆகுமாக்கப்பட்டதாகும். அது ஷிர்க்காகாது. ஏனெனில் அவர்கள் இறைவனின் நாட்டம், சக்தியைக் கொண்டே உதவி செய்கிறார்கள்.

**மௌலிது ஷரீஃப்**

மௌலித் என்பது குர்ஆனிலிருந்து சிலதை ஓதுவதற்காக மக்கள் ஒன்று கூடுவதாகும். மேலும் நபிமார்கள், வலிமார்களின் பிறப்பு பற்றி வரக்கூடிய அறிவிப்புகளை ஓதுவதற்காக மக்கள் ஒன்று கூடுவதாகும். இன்னும் அவர்களின் சொல், செயல்களைக் கொண்டு அவர்களை புகழ்தல். அதன்பிறகு ஏழைகளுக்கு உணவளிப்பதாகும்.

மௌலித் ஓதுவதன் நோக்கமாகிறது:

1. அவர்களது புகழையும், உபகாரங்களையும், சங்கையையும் கூறுவது கொண்டு அவர்களைக் கண்ணியப்படுத்துவதாகும்.

2. அவர்களைக் கொண்டு ஈமான் கொள்வதன் மீதும், இஸ்லாத்தின் விஷயங்களைக் கொண்டு உண்மைப்படுத்துவதின் மீதும் தூண்டுவதாகும்.

3. அவர்களின் பிறப்பைக் கொண்டு சந்தோஷத்தை வெளிப்படுத்துவதாகும்.

4. அவர்களின் குணங்களைக் கொண்டும், அவர்களின் வழிமுறையைக் கொண்டும் நற்குணம் பெறுவதின் மீது தூண்டுவது.

5. அவர்களின் மீது நேசத்தை வெளிப்படுத்துவது, அவர்கள் மீது ஸலவாத்து சொல்வதாகும்.

6. அவர்களைக் கொண்டு அல்லாஹ்வின் நிஃமத்தை நினைவு கூறுவதாகும்.

7. அவர்கள் பிறந்தநாள் அல்லது பிறந்த மாதம், வபாத்தான நாளில் உணவளிப்பதைக் கொண்டு அல்லாஹ்வின் நிஃமத்திற்கு நன்றி செலுத்துவதாகும்.

இவை அனைத்தும் ஷரீஅத் ஆக்கப்பட்ட விஷயங்களாகும்.

اِنَّ اللّٰہَ وَمَلٰٓئِکَتَہٗ یُصَلُّوْنَ عَلَی النَّبِیِّ یٰٓاَیُّھَا الَّذِیْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَیْہِ وَسَلِّمُوْا تَسْلِیْمًا

"இறைவனும், மலக்குகளும் நபிகளார் மீது ஸலவாத்து சொல்கிறார்கள். ஈமான் கொண்டோர்களே! நீங்கள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும், ஸலாமும் சொல்லுங்கள்.

இவ்வசனத்தின் விளக்கத்திலே இமாம் பைளாவி ரஹிமஹுல்லாஹு அவர்கள் கூறும்போது, يُصَلُّوْنَ நபிகளார் மீது அல்லாஹ்வும், மலக்குகளும் ஸலவாத்து சொல்கிறார்கள் என்பது பெருமானாரின் சிறப்பை வெளிப்படுத்துவது கொண்டும், அவர்களின் விஷயங்களை கண்ணியப்படுத்துவது கொண்டுமாகும்.

قَالَ تَعَالٰی وَرَفَعْنَا لَکَ ذِکْرَکَ (انشراح:٤)

குர்துபி இமாம் இவ்வசனத்தின் விளக்கவுரையில் கூறும்போது, "நபியே! உங்களது புகழை, வானத்தில் மலக்குமார்களிடத்திலும், பூமியில் முஃமின்களிடத்திலும் உயர்த்தினோம்" என விளக்கமளிக்கிறார்கள்.

தித்திக்கும் திருமறையாம் திருக்குர்ஆன் பல்வேறு இடங்களில் பெருமானாரின் புகழ்பாடும் மௌலிதாக அமைந்துள்ளது.

لَقَدْ جَآءَكم رسول من انفسكم...

என்ற வசனத்தில், “உங்களுக்கு ஓர் தூதுவர் வருகை தந்துள்ளார். அவர்கள் உங்கள் மீது பேராவல் கொண்டவர்கள். முஃமீன்கள் மீதும் ரபூபாகவும், ரஹீமாகவும் இருக்கிறார்கள் என இறைவன் கூறுகிறான். மேலும்,

لَقَدْ مَنَّ اللهُ عَلَى الْمُؤْمِنِيْنَ اِذْ بَعَثَ فِيْهِمْ رَسُوْلًا (164-3)

முஃமின்கள் மீது அவர்களிடையே ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அனுப்பியபோது அல்லாஹ் பேருபகாரம் அளித்தான் என இறைவன் கூறுகிறான்.

هُوَ الَّذِيْ اَرْسَلَ رَسُوْلَهُ بِالْهُدٰي وَدِيْنِ الْحَقِّ(47–28)

நேர்வழியைக் கொண்டும், சத்திய மார்க்கத்தைக் கொண்டும் தனதுதூதரை அனுப்பினானே அத்தகைய (வல்லமை மிக்க)வன்.

இவை போன்ற ஆயத்துகள் குர்ஆனில் அதிகமாக இருக்கிறது. இவ்வாறு பெருமானாரின் பிறப்பியல்புகளை கூறுவது இறைவனின் வழிமுறையாகும்.

கண்மணி நபிகளாரின் புகழ்பாடுவது, அவர்களின் புனித புகழை எடுத்துச் சொல்வது மிகச் சிறந்த வணக்கமாகும். திருக்குர்ஆன் முழுவதுமே பெருமானாரின் புகழ்பாடும் புனித காவியமாக உள்ளது.

நபிகளாரின் தோழர்களான சஹாபாக்களும் நபியின் புகழ்பாடி நன்மை அடைந்துள்ளார்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் தங்கள் புகழை பாட வைத்து கேட்டு களிப்படைந்து சன்மானங்கள் வழங்கியுள்ளார்கள்.

நபிகளார் அவர்கள் ஹஸ்ஸான் இப்னு தாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு பள்ளியினுள் மிம்பர் மேடை அமைத்துக் கொடுப்பார்கள். அதன் மேல் நின்று கொண்டுஇ அவைப்புலவர் ஹஸ்ஸான் ரலியல்லாஹு அன்ஹு பெருமானாரின் புகழ் பாடுவார்கள். கயவர்கள் பெருமானாரை தூஷித்துப் புாடிய பாடல்களுக்கு மறுப்பு பாடல்களையும் அள்ளி வீசுவார்கள்.

اِنَّ اللهَ يُؤَيِّدُ حَسَّانَ بِرُوْحِ الْقُدُسِ

ரூஹுல் குத்ஸைக் கொண்டு ஹஸ்ஸானுக்கு இறைவன் உறுதியளிப்பானாக என நபிகளார் துஆ செய்தார்கள் என அன்னை ஆயிஷா நாயகி ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா

நூல்: மிஷ்காத் 410, அபூதாவூத், திர்மிதி.

ரூஹுல் குத்ஸ் என்பது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் குறிக்கும்.

**கவிதைகள் பாடுதல் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டதே.**

عَنِ الْبَرَاءِ رَضِيَ اللهُ عَنْهُ اَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ لِحَسَّانَ اِهْجُهُمْ اوقَالَ هَاجِهِمْ وَجِبْرِيْلُ مَعَل

நபிகளார் (பனூ குறைலா போரின் போது0 ஹஸ்ஸான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் எதிரிகளுக்கு பதிலடியாக வசைக் கவிதைகளைப் பாடுங்கள். (வானவர்) ஜிப்ரயீல் உங்களுடன் (துணையாக) இருப்பார் என்றார்கள். (புஹாரி 6153)

ஆயிஷா நாயகி ரலியல்லாஹு அன்ஹா அறிவிக்கிறார்கள்:

மினாவில் தங்கும் நாட்களில் ஒரு நாள் பெருமானார் அவர்கள் துணியால் முகத்தைப்போர்த்திக் கொண்டு படுத்திருந்தார்கள். அச்சமயம் இரு சிறுமிகள் தஃப் என்னும் கஞ்சிராவை தட்டிக் கொண்டிருந்தார்கள். அங்கு வந்த அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அச்சிறுமிகளை அதட்டினார்கள். நபிகளார் தம் முகத்திலுள்ள ஆடையை நீக்கி விட்டுஇ "அபூபக்கரே! அவ்விருவரையும் விட்டுவிடுங்கள். ஏனெனில் இது பெருநாட்கள் என கூறினார்கள். (புகாரி 3529)

பாடல் பாடுவது கூடாதெனில் நபிகளார் அவ்விடத்திலேயே தடுத்திருப்பார்கள்.

.அகழ் யுத்தத்தில் நபிகளாரும், சஹாபிகளும் அகழ் தோண்டும் பணியில் ஈடுபட்டபோது

اَللّٰهُمَّ اِنَّ الْعَيْشَ عَيْشُ الْآخِرَةِ

فَاغْفِرْ لِلْاَنْصَارِ وَالْمُهَاجِرَةْ

இறைவா! நிச்சயமாக நிலையான வாழ்க்கை என்பது மறுமை வாழ்க்கையே. எனவே அன்சாரிகளுக்கும், முஹாஜிர்களுக்கும் மன்னிப்பு வழங்குவாயாக! என்று பாச நபிகளார் கவி பாடினார்கள்.

அதை செவியுற்ற சஹாபிகள் பாச நபிக்கு பதிலளிக்கும் வண்ணம்,

نَحْنُ الَّذِيْنَ بَايَعُوْا مُحَمَّدًا

عَلَى الْجِهَادِ مَا بَقِيْنَا اَبَدًا

நாங்கள் வாழும் காலமெல்லாம் புனிதப் போரில் ஈடுபடுவோம் எனமுஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் (பைஅத்) உறுதி பிரமாணம் வழங்கியுள்ளோம் என பாடினார்கள். (புஹாரி 4099)

ஹுனைன் யுத்தத்தில் நபிகளார் தங்களது பைளா என்னும் வெண்ணிற கோவேறு கழுதையின் மீது அமர்ந்திருந்தவாறு பாடினார்கள் இப்படி:

اَنَا النَّبِيُّ لَا كَذِبْ ، اَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبْ

நான் இறைத்தூதராவேன். இது பொய்யல்ல. நான் அப்துல் முத்தலிபின் மகனாவேன் என்று பாடினார்கள். ( புகாரி 2864, 2874, 2930)

கஅபு இப்னு ஜுஹைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்ள் பூமான் நபியை புகழ்ந்து கவிபாடியபோது கருணை நபிகளார் தம் புனித மேனியை தழுவி நின்ற போர்வையை போர்த்தி கௌரவித்தார்கள் என்ற சேதி முஸ்தத்ரக் என்னும் ஹதீது கிரந்தத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய ஹதீதுகள் மூலம் கருணை நபிகளார் கவிதைகளையும், பாடல்களையும், பாடல்களையும் அங்கீகரித்திருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

وَالشُّعَرَاءُ يَتَّبِعُهُمُ الْغَاوٗنَ(شعراء:224)

கவிஞர்களை வழிகேடர்களே பின்தொடாருவார்கள் எனும் இவ்வசனத்தை வைத்து கவிதைகளும், மௌலிதுகளும் கூடாது என வஹ்ஹாபிகள் வாதிடுகின்றனர்.

**இவ்வசனத்தின் விளக்கவுரை:**

இவ்வசனம் இறைநிராகரிப்பாளர்களான குறைஷிக் காபிர் கவிஞர்களைக் குறித்தே அறிவிக்கப்பட்டது. காரணம், அவர்கள் தம் கவி புலமையால் மாநபியை இகழ்ந்து பாடினர். குறிப்பாக அப்துல்லாஹ் இப்னு ஜப்அரீ, உமையத் இப்னு அபீஸல்த், ஜுபைல் இப்னு வஹ்ப் போன்ற காபிர் கவிஞர்கள் கஅபாவின் வளாகத்தில் அமர்ந்து சூழ இருக்கும் தனது நண்பர்களை மகிழ்ச்சிபடுத்துவதற்காக கதைகளாலும், கற்பனையாலும், பொய்யும், பொறாமையும் பொதிந்து கவிபாடுவார்கள். அந்த வார்த்தைகளிடையே அவர்கள் நாங்கள் கூறுவதெல்லாம் முஹம்மது கூறுவது போலன்றி வேறில்லை என்ற வாசகமும் இடம்பெறும். இவ்வார்த்தைகள் பெருமானார் அவர்களுக்கு வருத்தத்தை உண்டாக்கியது.

எனவேதான் அல்லாஹ் இவ்வசனத்தை அருளி அந்தக் கவிஞர்களை வழிகெட்டவர்களே பின்தொடர்வார்கள்" என்றான்.

இவ்வசனம் காபிர்களான கவிஞர்களைக் குறித்தே அருளப்பட்டது என அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

مَنْ سَنَّ فِى الْاِسْلَامِ سُنَّةً حَسَنَةً فَلَهُ اَجْرُهَا وَاَجْرُ مَنْ عَمِلَ بِهَا بَعْـدَهُ مِنْ غَيْرِ اَنْ يَنْقُصَ مِنْ اُجُوْرِهِمْ شَيْئٌ

யார் இஸ்லாத்தில் புதிய நற்கருமத்தை தோற்றுவிக்கிறாரோ அவருக்கு அதன் நற்கூலியும், அவருக்குப் பின் அதை செயல்படுத்துவோரின் நன்மைகளும் அவர்களின் கூலி குறைக்கப்படாமல் வழங்கப்படும். (முஸ்லிம்) (ரியாலுஸ் ஸாலிஹீன்)

மேற்கண்ட ஹதீதின் மூலம் இஸ்லாத்தில் தோற்றுவிக்கப்பட்ட மௌலிது போன்ற நற்கருமங்கள் நன்மைகள் தருவனவேயன்றி அவைகள் தடுக்கப்பட வேண்டியதல்ல.

அத்தன்வீர் எனும் கிரந்தத்தில் ஹாபிள் இப்னு தஹ்யா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்:

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் இல்லத்தில் சில நண்பர்களுடன் கூடி இருந்து பெருமானாரின் பிறந்த ஜனன செய்தியை சொல்லிக்

கொண்டிருந்த அவர்கள் எல்லோரும் அல்லாஹ்வைப் புகழ்ந்து, நபிகள் நாதர் மீது மகிழ்வுடன் ஸலவாத் சொல்லி கண்ணியமுடன் காது தாழ்த்திக் கேட்டுக் கொண்டிருந்தனர். அச்சமயம் நபிகளார் அங்கு வந்து, அந்நிகழ்ச்சியை பார்த்து மகிழ்ந்து, உங்களுக்கு என்னுடைய ஷபாஅத் வாஜிபாகி விட்டது(என்னுடைய பரிந்துரை உங்களுக்கு கண்டிப்பாக கிடைக்கும்) என கூறினார்கள்.

அபூதர்தா ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்: ஒருசமயம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆமிருல் அன்சாரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வீட்டிற்குப் போனார்கள். அப்போது அவர்கள் தங்கள் மக்களுக்கும், சுற்றத்தாருக்கும் நபிகளாரின் ஜனனமான பிறப்பு செய்திகளை அறிவித்து, இதுதான் அந்த நாள் என மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டிருக்கும் போது, அதைப் பார்த்து பெருமானார் அவர்கள் மகிழ்வுற்று அல்லாஹ் உமக்கு நல்லருள் பாலிப்பானாக. ரஹ்மத்துடைய வாயில்களை அவன் உமக்குத் திறந்து வைத்து விட்டான். வானவர்கள் எல்லாம் உமக்காகப் பிழைப் பொறுக்கத் தேடுகிறார்கள். எவரொருவர் இவ்வண்ணம் நீர் செய்தது போல் செய்தால் நீர் ஜெயம் பெற்றதுபோலவே அவரும் ஜெயம் பெறுவார் என கூறினார்கள்.

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்: "சஹாபாக்களில் சிலர் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது ஒருவர் கூறினார்கள்: இறைவன் இப்றாஹீம் நபியையை கலீலாக தேர்ந்தெடுத்தான் என்றும்இ மற்றொரு ஸஹாபி மூஸா நபியுடன் இறைவன் பேசினான் என்றார்கள். மற்றொரு சஹாபி ஈஸா நபி இறைவனின் வார்த்தையாகவம், ரூஹாகவும் இருக்கிறார்கள் என்றும், மற்றொரு சஹாபி ஆதம் நபியை அல்லாஹ் தேர்ந்தெடுத்தான் எனவும் கூறினார்கள்.

இதை செவியுற்ற நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், நான் ஹபீபுல்லாஹ்" - இறைவனின் நேசர் என்பதை அறிந்து கொள்ளுங்கள். மேலும், நான் மறுமையில் லிவாவுல் ஹம்து எனும் கொடியை சுமப்பவனாக உள்ளேன். அதில் எனக்குப் பெருமையில்லை. நான்தான் முதலில் சுவன வாயிலை தட்டக் கூடியவன். எனக்கு இறைவன் சுவன வாயிலை முதலில் திறப்பான். அதிலே என்னை முதலில் நுழைவிப்பான். என்னுடன் ஏழை முஃமீன்கள் இருப்பார்கள். நான் முன் சென்ற சமுதாயத்திற்கும், பின் வரும் சமுதாயத்தினருக்கும் மிக சங்கையானவனாக இருக்கிறேன் என கூறினார்கள்".

(திர்மிதி, மிஷ்காத்)

இந்த ஹதீதின் மூலம் நபிகளார் தனது புகழை தாங்களாகவே தனது உம்மத்தினருக்கு எடுத்துக் கூறியுள்ளார்கள் என்பது விளங்குகிறது.

காழி இயாள் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்:

ஒரு மனிதன் தனது தந்தை, குழந்தை, நேசமானவர், மேன்மையானவர் அனைவரையும் விட பெருமானார் அவர்களின் அந்தஸ்த்தையும், புகழையும் உயர்த்துவது கொண்டே தவிர அவனது ஈமான் ஸிஹத் ஆகாது என கூறுகிறார்கள்.

இவை அவன் உறுதி கொள்ளவில்லை என்றால் அவன் முஃமினல்ல. (شرح مسلم ١٢-١)

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لَا يُؤْمِنُ اَحَدُكُمْ حَتّٰى اَكُوْنَ اَحَبَّ اِلَيْهِ مِنْ وَالِدِهٖ وَوَلَدِهٖ وَالنَّاسِ اَجْمَعِيْنَ

(بخاري)

உங்களில் ஒருவர் தனது தந்தை, தனது குழந்தை மற்றும் அனைத்து மக்களைவிட என்னை நேசிக்காதவரை பூரணமான முஃமின் ஆகமாட்டார் என்றார்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

ரஸூல்மார்கள் அனைவரையும் நேசிப்பது ஈமானில் நின்றும் ஆகியிருப்பினும் அவர்களை விட அதிக நேசம் வைப்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொண்டும் குறிப்பாகும். (فتح الباري ١-٥٨)

எனவே நபிகளார் மீது புகழ்பாடுவதினால் அவர்களின் மீதுள்ள நமது மஹப்பத் எனும் நேசம் வெளிப்படுகிறது.

அவர்கள் மீதுள்ள முஹப்பத்தை வெளிப்படுத்துவதற்காகவும், அத்தகைய நபியை நமக்கு ரஹ்மத்தாக அளித்த அல்லாஹ்விற்கு ஷுக்ர் செய்வதற்காகவும், அவர்கள் மீது நாம் புகழ்மாலை பாடுகிறோம்.

நபிகளாரின் பிறப்பு செய்தியை ஓதுவது கொண்டு நன்றியை வெளிப்படுத்துவது நமக்கு முஸ்த்தஹப் ஆகும் என இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ரூஹுல் பயானில் கூறுகிறார்கள்.

நபிகளார் மதீனா வந்தபோது யூதர்கள் ஆஷூரா அன்று நோன்பு நோற்றார்கள். அதன் காரணத்தை கேட்டபோது, அந்நாளில் தான் பனூ இஸ்ரவேலர்களை அவர்களின் விரோதிகளை விட்டும் இறைவன் ஈடேற்றமளித்தான். நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் ஈடேற்றம் கிடைத்தது. அதற்கு இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்காக நாங்கள் நோன்பு நோற்கிறோம்" எனக் கூறினார்கள். அதற்கு நபிகளார் நாங்கள் உங்களை விட மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொண்டு மிகத் தகுதியானவர்கள் எனக் கூறியதோடு, நபிகளாரும் ஆஷூரா அன்று நோன்பு நோற்று மற்றவர்களையும் நோன்பு பிடிக்குமாறு ஏவினார்கள்.

எனவே எந்த ஒரு நிஃமத் ஏற்பட்டாலோ, அல்லது நிஃமத் நீங்கினால் அக்குறிப்பிட்ட நாளிலே இறைவனுக்கு நாம் நன்றி செலுத்துகிறோம்.

وَاذْكُرُوْا نِعْمَةَ اللهِ عَلَيْكُمْ (2-231)

وَاَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ (93-10)

இறைவனுக்கு நன்றி செலுத்துவது என்பது, ஸுஜூது செய்வது, நோன்பு நோற்பது, சதகா கொடுப்பது, ஓதுவது போன்று பலவகையான இபாதத்துகளை கொண்டு உண்டாகும். அந்த அடிப்படையில் நிஃமத்களில் எல்லாம் நமக்கு மாபெரும் நிஃமத்தாக விளங்கக் கூடிய எம்பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இறைவன்

நமக்கு தந்த அப்பொன்னாளை நாம் இறைவனுக்கு நன்றி செலுத்தும் முகமாக அந்நாளில் அவர்களின் பிறப்பு செய்திகளையும், புகழ்ப்பாக்களையும் நாம் படிக்கிறோம்.

சர்யு ஸிக்தி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்:

நபிகளாரின் மௌலித் ஓதப்படக்கூடிய இடத்தை ஒருவன் நாடிச் சென்றால் அவன் சுவனப் பூஞ்சோலையை நாடிச் செல்கிறான். ஏனெனில் அவன் நபிகளின் நேசத்தின் காரணமாகவே தவிர அவ்விடத்தை அவன் நாடவில்லை. நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ اَحَبَّنِي كَانَ مَعِي فِي الجَنَّةِ

“என்னை ஒருவன் நேசித்தால் சுவனத்தில் என்னுடன் இருப்பான்“ என்றார்கள்.

இமாம் யாஃபி இல் யமனி ரஹிமஹுல்லாஹு அவர்கள் கூறுகிறார்கள்: நபிகளாரின் மௌலிதிற்காக ஒன்று சேர்ந்திருந்து, உணவு தயாரித்து, நல்லமல்கள் செய்து, நபிகளாரின் மௌலிது ஒதுவதற்கு காரணமாக இருந்தால் அவர்களை அல்லாஹ் மறுமைநாளில் ஸித்தீகீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்களுடன் எழுப்புவான். அவர்கள் நயீம் எனும் சுவனப்பதியில் இருப்பார்கள்.

மேலும் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறும்போது, வீட்டிலோ அல்லது மஸ்ஜிதிலோ அல்லது ஓரிடத்தில் நபிகளாரின் மௌலிது ஓதப்பட்டால் அவர்களை மலக்குகள் சூழ்ந்து கொள்கிறார்கள். இறைவன் பரக்கத்தை கொண்டு அவர்களை சூழ்ந்து கொள்கிறான். மேலும் ஒரு முஸ்லிம் தன் வீட்டில் மௌலிது ஓதினால் அவ்வீட்டில் பஞ்சம், காலரா, ஆபத்துகள், சோதனைகள், பொறாமை, கண்ணேறு, பயம் இவையனைத்தையும் விட்டும் இறைவன் அவ்வீட்டார்களை பாதுகாக்கிறான். அவன் மரணித்துவிட்டால், கபுரில் முன்கர், நகீர் மலக்குகளின் கேள்விகளுக்கு பதிலளிப்பதை அல்லாஹ் லேசாக்குகிறான். அவன் அல்லாஹ்விடத்தில் உண்மையான உயர்ந்த இடத்தில் இருப்பான்.

(நூல்:.روضة الندية في مدح البرية)

அவுலியாக்கள், அன்பியாக்களுடையவும் மவ்லிது முதலான மத்ஹு(புகழ்ப்பாக்களை) ஓதுவதால் அந்த நாதாக்களின் கிருபை உண்டாகி, அவர்களுடைய துஆ பேற்றினையும் பெற்றுக் கொள்ள அல்லாஹ் அருள் புரிகிறான் என ஹழ்ரத் ஜுனைதுல் பகுதாதி நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

சுப்ஹான மௌலிது ஷரீபை கோர்வை செய்ததாக இமாம் கஜ்ஜாலி ரலியல்லாஹு அன்ஹுஇ இமாம் கதீப் முஹம்மது மதனீ ரலியல்லாஹுஅன்ஹு ஆகிய இருவரின் பெயர் முன்வைக்கப்பட்டாலும் இமாம் கஜ்ஜாலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் கோர்வை செய்யப்பட்டது என்பதே ஞானநாதாக்களால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் ஆகும்.

**குற்றச்சாட்டுகளும், விளக்கங்களும்:**

اَنْتَ غَفَّارُ الْخَطَايَا وَالذُّنُوبِ الْمُوبِقَاتِ

நபியே! நீங்கள் உம் சிறு பெரும் பாவங்களை மன்னிப்பவர்கள் என்பது சுப்ஹான மௌலிதின் அடி.

وَمَنْ يَغْفِرُ الذُّنُوبَ اِلَّا اللهُ

அல்லாஹ்வைத் தவிர, வேறு யார் பிழைகளை மன்னிப்பார்? என அல்லாஹ் கேட்கிறான். எனவே மௌலிதில் கூறப்பட்டிருக்கும் செய்தி குர்ஆனுக்கு முரணாகும் என்பது வஹ்ஹாபிகளின் கூற்று.

**விளக்கம்:**

இறைவனிற்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் குறைவைத்த மனிதனை அல்லாஹ் நாடினால் மன்னிப்பான். அல்லது தண்டிப்பான். மன்னிப்:பும்இ தண்டிப்பும் அல்லாஹ்வின் புறத்திலுள்ளது. ஆனால் மனிதர்கள் பிறமனிதருக்கு புரிய வேண்டிய உரிமைகளில், கடமைகளில் குறை செய்தால், அந்த மனிதர் மன்னிக்காதவரை அல்லாஹ் மன்னிப்பதில்லை. இங்கே மன்னித்தல் என்பது மனிதர்களின் நடைமுறைகளிலும் உண்டு என்பதை புரிய முடிகிறது.

وَلَوْ اَنَّهُمْ اِذْ ظَلَمُوْا اَنْفُسَهُمْ جَاءُوْكَ فَاسْتَغْفَرُوْا اللهَ وَاسْتَغْفَرَ لَهُمُ الرَّسُوْلُ لَوَجَدُوْا اللهَ تَوَّابًا رَحِيْمًا

நபியே! தமது ஆத்மாக்களுக்கு அநீதம் செய்துகொண்ட அடியார்கள் உம்மிடம் வந்து அல்லாஹ்விடம் பிழைபொறுக்க வேண்டி, அவர்களுக்காக (நபியே) நீங்களும் மன்னிக்க வேண்டுவீர்களேயானால், திண்ணமாக அல்லாஹ்வை மிக்க மன்னிப்பாளனாகவும், கருணையுள்ளவனாகவும் அடைந்து கொள்வார்கள் (4:70)

தவறு செய்துவிட்ட மானிடரை தாஹா நபியிடம் வரச் சொல்லும் அல்லாஹ் திட்டமான அல்லாஹ் மன்னித்து விட்டான் என்று கூறுவதன் மூலம் பூமான் நபியிடமே பிழை பொறுப்பு இருக்கிறது எனப் பறைசாற்றுகிறான் இறைவன். மேலும் .....(மன்னிப்பவன்) எனும் சொல்இ முக்காத்தையும் குறிக்கும் மகத்தான சொல்லாகும். மாநபி அவர்கள் தமக்கு தீங்கிழைத்தவர்களை மன்னித்தார்கள்.

தாயிப் வாசிகளையும்இ பிறந்த பதியிலே வாழ விடாமல் நெருக்கடி கொடுத்தவர்களையும்இ உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்த நினைத்தவர்களையும் மக்கா வெற்றியின் போது மன்னித்தார்கள்.

غَفَّارٌஎன்ற சொல் இறைவனுக்குரியது. இறைவனின் பெயரை அடியார்களில் யாருக்கும் சூட்டக்கூடாது என வாதிப்பவர்களின் வாதம் தவறானது என்பதை திருக்குர்ஆன் நிரூபிக்கிறது இப்படி:

وَالْعَافِيْنَ عَنِ النَّاسِ (ال عمران:133)

இன்னும் ஜனங்களை மன்னித்து விடுகிறவர்கள். இவ்வசனம் மனிதர்களை குறித்துதானே கூறப்பட்டிருக்கிறது.

وَلَّذِيْنَ يَجْتَنِبُوْنَ كَبَائِرَ الْاِثْمِ وَالْفَوَاحِشِ وَاِذَا مَا غَضِبُوْاهُمْ يَغْفِرُوْنَ(42:37)

அவர்கள் கோபம் கொள்ளும் போது மன்னிப்பார்கள் என இறைமறை கூறுகிறது.

மாநபி அவர்கள் கூறினார்கள்:

مَنْ لَا يَغْفِرْ لَا يُغْفَرْ

யார் மன்னிக்கவில்லையோ, அவர் மன்னிக்கப்படவும் மாட்டார் என்றார்கள். (முஸ்னது அஹ்மது 4-365)

மேற்கூறப்பட்டஆயத்துகளும், நபிமொழியும் மன்னித்தல் என்பது மனிதர்களுக்கும் உண்டு என்பதை நிரூபிக்கிறது.

مَنْ يُطِعِ الرَّسُوْلَ فَقَدْ اَطَاعَ اللهَ

யார் ரஸூலுக்கு வழிப்பட்டாரோ, அவர் திட்டமாக அல்லாஹ்வுக்கே வழிப்பட்டவராகிறார் (4:80) என இறைவன் இயம்புகிறான்.

وَمَنْ يَعْصِ الله ورسوله

எவன் அல்லாஹ்வுக்கும், ரஸூலுக்கும் மாறு செய்கிறானோ, அவனை நரகிலே அல்லாஹ் நுழைவிக்கிறான்.

இதன்மூலம் ரஸூலுக்கு வழிப்படுவது அல்லாஹ்விற்கு வழிப்பட்டதாகவும், ரஸூலுக்கு மாறுபட்டவன் அல்லாஹ்விற்கே மாறுபட்டவனாகவும், திருமறை திட்டமாக கூறுகிறது. எனவே நபிகளார் அவர்களிடம் மன்னிக்க வேண்டுவது அல்லாஹ்விடமே மன்னிக்க வேண்டுவதாகிறது.

மனிதர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை தவறிழைத்தால் அம்மனிதன் மன்னிக்கும் வரை இறைவன் மன்னிப்பதில்லை என்ற அடிப்படையில் ஷரீஅத்தில் நாம் செய்யக் கூடிய தவறுகள்இ பாவங்களை ஷரீஅத்தின் தலைவராகிய பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்தான் மன்னிக்க வேண்டும் என்ற அடிப்படையில்,

اَنْتَ غَفَّار الخطايا والذنوب الموبقات

என்று மௌலிதில் ஓதப்படுகிறது.

**குற்றச்சாட்டு:**

اَلسَّلَامُ عَلَيْكَ يَامُبْرِي السَّقَامِ

நோய்களை குணமாக்கும் நாயகமே!உங்கள் மீது ஸலாம் உண்டாவதாக!

وَلَوۡتَكُوۡنُ سَقِيۡمًا لَدَيۡهِ بُرۡءُ السَّقَامِ

நீ நோயாளியாக இருந்தால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நிவாரணம் இருக்கிறது.

நோயை குணமாக்குவது அல்லாஹ்தானே.ஆனால் இங்கே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கூறப்படுகிறது. சுகமாக்குபவன் ஷாஃபி என்ற அல்லாஹ்வின் தன்மைப் பெயர் அண்ணலாருக்கு எப்படி பொருந்தும்? என்பதுதான் வஹ்ஹாபிகளின் வாதம்.

**விளக்கம்:**

ஷாஃபி -சுகமாக்குபவன் என்ற பெயர் அல்லாஹ்விற்கு மட்டுமே உண்டு நபிகளாருக்கு சூட்டுவது பொருந்தாது என்றால் நோய்களுக்கு நிவாரணம் தேடி மருத்துவரை அணுகுவது எப்படி சரியாகும்?

1. ஸாயிப் இப்னு யஜீத் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்:

தாயின் சகோதரி என்னை நபிகளாரிடம் அழைத்து சென்று நாயகமே! என் சகோதரி மகனுக்கு நோய் கண்டுள்ளது என முறையிட்டபோது, நபியவர்கள் என் தலையை வருடிக் கொடுத்து என் நலத்திற்காக துஆ செய்யதார்கள். பின்னர் அவர்கள் உளு செய்த தண்ணீரை நான் சிறிது குடித்தேன். பின்னர் நான் அவர்களின் முதுகுக்குப் பின் நின்று அவர்களுடைய இரு புஜங்களிடையே இருந்த நபித்துவ முத்திரையை பார்த்தேன். (புஹாரி 3541, 190)

2. கைபர் யுத்தகளத்தில், அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு கண் வலி ஏற்பட்டபோது, தமது உமிழ்நீரை உமிழ்ந்து அவருக்காக பிரார்த்தித்தார்கள். உடனே அலி நாயகத்திற்கு அவர்களின் கண் அதற்கு முன் வவலி எதுவுமே இல்லாதிருப்பதைப் போன்று குணமாகிவிட்டது. (புஹாரி 4210)

3. கழன்று விட்ட கண்ணை கையில் எடுத்து வந்து கண்மணி நாயகத்திடம் முறையிட்டு, கண்ணைப் பொருத்தி பார்வையை பெற்றுக் கொண்டார்கள் கதாதா ரலியல்லாஹு அன்ஹு

4. யூதர் தலைவர் அபூராபீவு என்பவனை கொலை செய்துவிட்டு மாடியிலிருந்து கீழே இறங்கிய அப்துல்லாஹ் இப்னு அதீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கால் முறிந்து விட்டபோது, நபிகளாரிடம் வந்து முறையிட்ட போது, நபிகளார் அவர்களின் காலை நீட்டச் செய்து புனித கரத்தால் தடவினார்கள். அக்காலில் அப்படியொரு வேதனை இருந்ததற்கு அடையாளமே இல்லாமல் போய்விட்டது என அவர்களே அறிவிக்கிறார்கள் (புஹாரி 4039)

5. அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்:

இறைவனின் தூதரே! நான் உங்களிடமிருந்து நிறைய செய்திகளை கேட்கிறேன். ஆனால் அவற்றை மறந்து விடுகிறேன் என சொன்னேன். நபிகளார் உன் மேலங்கியை விரி என சொல்லி தம் இருகைகளால் (எதையோ அள்ளுவதுபோல் சைகை செய்து) அதில் அள்ளிக் கொட்டினார்கள். பிறகு அதைச் சேர்த்து (நெஞ்சோடு) அணைத்துக் கொள் என்று சொன்னார்கள். நானும்அவ்வாறே செய்தேன். அதன்பிறகுஇ எந்த ஹதீதையும் நான் மறக்கவில்லை. (புஹாரி119, 3648)

உடல்ரீதியாக நோய்கள் மட்டுமின்றி உளரீதியான உணர்வுகள் ரீதியான எல்லா நோய்களுக்கும் ஏந்தல் நபியிடமே மருந்துண்டு என்பதை இந்நிகழ்வு நிரூபிக்கிறது. எனவே கண்மணி நாயகம் மருத்துவத்தில் பல்கலை நிபுணராக திகழ்கிறார்கள் என்பதை புரிய முடிகிறது.

மஸ்ரூக் பின் அஜ்தவு ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியதாவது: "ஒருமுறை நாங்கள் ஆயிஷா நாயகி ரலியல்லாஹு அன்ஹா அவர்களிடம் சென்றோம். அப்போது அவர்களருகில் புலவர் ஹஸ்ஸான் இப்னு தாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அமர்ந்து அன்னையை புகழ்ந்து பாராட்டி தம் கவிகளால் பாடினார்கள்.

حَصَانٌ رَزَانٌ مَاتُزَنُّ بِرِيْبِهِ

وَتُصْبِحُ غَرْثٰى مِنْ لُحُوْمِ الْغَوَافِلِ

கற்பொழுக்கம் மிக்கவர், கண்ணியம் நிறைந்தவர் எந்த சந்தேகத்தின் பேரிலும் குற்றம் சாட்டப்பட இயலாதவர்கள் (புறமும், அவதூறும் பேசுவதன் மூலம்) அப்பாவிப் பெண்களின் மாமிசங்களைப் புசித்து விடாமல் பட்டினியோடு காலையில் எழுபவர்கள் என்று பாடினார்கள். (புஹாரி ஷரீப்)

இந்த ஹதீதின் மூலம் இறை அனுக்கிரகத்தைப் பெற்ற இறைஅடியார்களான மேன்மக்களைப் போற்றி அவர்கள் முன்னிலேயே பாடலாம் என்பதைப் புரிய முடிகிறது.

மேற்கூறப்பட்ட ஹதீதின் மூலம் மறைந்து விட்ட முன்னோர்கள் மீதும், வலிமார்கள் மீதும் புகழ் மாலை, மௌலிது ஓதுவது கூடும் என்பதும் உறுதியாகிறது.

ருபைய்யுவு பின்த் முஅவ்வித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள், " எனக்கு திருமணம் நடந்த அன்று நபிகளார் அவர்கள் என்னிடம் வந்தார்கள். எனது விரிப்பில் அமர்ந்தார்கள். அங்கு சில முஸ்லிம் சிறுமிகள் (தப்) கஞ்சிராக்களை அடித்துக் கொண்டு பத்ருப் போரில் ஷஹீதாக்கப்பட்ட முன்னோர்களைப் புகழ்ந்து இரங்கல் இரங்கல் பாடினார்கள். (புஹாரி 4001)

மேற்கூறப்பட்ட ஹதீதும், மறைந்து விட்ட முன்னோர்கள் மீது புகழ்மாலை, இரங்கற்பா பாடுவது கூடும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

**குர்ஆன், ஹதீதுகளிலிருந்து மௌலிதுக்கு ஆதாரங்கள்:**

قل بِفَضْلِ اللّٰهِ وَبِرَحْمَتِهِ فَبِذَالِكَ فَلْيَفْرَحُوْا هُوَ خَيْرٌ مِمَّا يَجْمَعُوْنَ(يونس :58)

அல்லாஹ்வின் அருளையும், அவனது ரஹ்மத்தையும் (நபியே) நீங்கள் (மக்களுக்கு எடுத்துக்) கூறுங்கள். இந்த ரஹ்மத்தைக் கொண்டு அவர்கள் சந்தோஷம் அடையட்டும் (10-58)

இவ்வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ரஹ்மத் என்ற வார்த்தை குர்ஆனைக் குறிக்கும் என்றும், ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறிக்கும் என்றும் முபஸ்ஸிரீன்கள் விளக்கம் தருகின்றனர். ஏனெனில்,

وَمَا اَرْسَلْنَاكَ اِلَّا رَحْمَةً لِلْعَالَمِيْنَ

நபியே! நாம் உங்களை உலகத்தார் யாவருக்கும் ரஹ்மத்தாகவேத்தான் அனுப்பியிருக்கிறோம். (21-108)

எனவேதான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விட உயர்ந்த ரஹ்மத் நமக்கு வேறெதுவும் உண்டா? நிச்சயமாக இல்லை. எனவேதான் அப்படிப்பட்ட ரஹ்மத்தாகிய குர்ஆனையும், அது இறங்குவதற்கு காரணமாக இருந்த ரஹ்மத்தாகிய தங்களைப் பற்றி பிரஸ்தாபியுங்கள். இந்த ரஹ்மத்தைக் கொண்டு அவர்கள் பூரிப்பும் சந்தோசமும் அடையட்டும் என்று இறைவன் கூறுவதினால் உலகில் நமக்கு கிடைத்த மாபெரும் ரஹ்மத்தாகிய நபிகளாரின் புகழாரத்தைப் பாடிபயன் பெறும் வண்ணம் நாம் மௌலிது ஓதுகிறோம்.

நபிகளார் இவ்வுலகில் பிறந்தபோதுஇஅச்செய்தியை அபூலஹபிற்கு அவரது அடிமைப் பெண் துவைபா என்ற பெண்மணி கூறியபோது, நபிகளார் அவர்களின் பிறப்பின் சந்தோசத்தில் மூழ்கிய அபூலஹப் அச்சுபச் செய்தியை சொன்ன காரணத்திற்காக அவளை விடுதலை செய்வதாக, தனது வலக்கரத்தின் இருவிரல்களால் சமிக்ஞை காட்டியதற்காக, நரகவாதியாக இருந்தும், அந்த இருவிரல்களையும் நரகம் தீண்டாது என அவர்கள் கூறியதாக ஸஹீஹுல் புஹாரியில் ஹதீது வந்துள்ளது. இதுவும் பெருமானார் அவர்கள் பிறந்த தினத்தை அவர் சந்தோஷமாகக் கருதியதால் நரகத்தில் இந்த சலுகையை அவருக்கு வழங்கப்படுகிறது. இறைநிராகரிப்பு செய்த காபிர்களுக்கே பெருமானாரின் பிறப்பின் சிறப்பால் ஏற்பட்ட சந்தோஷத்திற்காக இச்சலுகை என்றால், நபிகளாரையும், அவர்களது வழிமுறைகளையும் முற்றிலும் ஏற்று நடக்கும் முஸ்லிம்களுக்கு பெருமானாரின் பிறந்ததினம் எந்த அளவிற்கு சந்தோஷமுடையதாக இருக்க வேண்டும். அந்த சந்தோஷத்தை வெளிப்படுத்தும் முகமாகத்தான் அவர்களின் பிறந்த நாளை மீலாது விழாவாகக் கொண்டாடி அவர்களின் புகழ்பாடக்கூடிய மௌலிது ஷரீபையும் ஓதுகிறோம். மௌலிது ஓதுவதற்கு இந்த ஹதீதை, ஹதீதின் அடிப்படை சட்டத்திற்கு உட்பட்டு இமாம்கள் இஜ்திஹாஜ் செய்து இந்த ஹதீதிலிருந்து ஆதாரம் தருகிறார்கள்.

**கூட்டு துஆ**

கூட்டு துஆ என்து ஷரீஅத்தின் அடிப்படையில் வணக்கமே.

**துஆ என்றால் என்ன**?

துஆ என்பது நம்மை படைத்த வல்லவனாம் அல்லாஹ்விடம் கோரி பெறுதல்,வேண்டுதல் செய்தல், வழிபாடு செய்தல் என்பன அதன் பொருளாகும்.

**வணக்கங்களில் ஒன்றே துஆ.**

عَنِ النُّعْمَانِ ابْنِ بَشِيْرٍ قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ. اَلدُّعَاءُ هُوَ الْعِبَادَةُ (احمد, والترمذي,

وابوداود)

நுஃமான் இப்னு பஷீர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள் துஆ என்பது வணக்கமாகும் என அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல்: அஹ்மது,திர்மிதீ, அபூதாவூது)

வணக்கம் மட்டுமல்ல. மாறாக வணக்கத்தின் அடிப்படையே துஆதான்.

عَنْ اَنَسٍ رَضِيَ اللهُ قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اَلدُّعَاءُ مُخُّ الْعِبَادَةِ (الترمذي)

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் துஆ என்பது வணக்க வழிபாட்டின் அடிப்படை என அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்கள் கூறினார்கள்.

துஆ ஓதப்படக்கூடிய நேரங்களில் சிறந்தது பர்ளு தொழுகைக்குப் பின்பு ஓதப்படக் கூடியதே. ஆம். வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறும்போது,

فَاِذَا فَرَغْتَ فَانْصَبْ وَاِلٰى رَبِّكَ فَارْغَبْ (سورة انشراح)

எனவே நீர் விடுபட்டால் வணக்கத்தில் ஈடுபடுவீராக. இன்னும் உம்முடைய ரப்பை ஆர்வத்துடன் சார்ந்திருப்பீராக. இந்த வசனத்திற்கு விளக்கம் தரும்போது, இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்,

قَالَ ابْنُ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُ اِذَا فَرَغْتَ مِنَ الصَّلَاةِ الْمَكْتُوْبَةِ فَانْصَبْ فِى الدُّعَاءِ (تفسير الرازي والخازن

واداكم القرآن)

பர்ளு தொழுகை முடிந்து விட்டால் துஆவில் ஈடுபடுவாயாக என்று கூறினார்கள்.

(தப்ஸீர் அல் ராஜி, காஜின்)

மேலும், இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கூற்றுக்கு வலுவூட்டும் முகமாக பின்வரும் ஹதீது அமைகிறது.

عَنْ اَبِيْ اُمَامَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قِيْلَ لِرَسُوْلِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اَيُّ الدُّعَاءِ اَسْمَعُ فَقَالَ جَوْفُ اللَّيْلِ

وَدُبُرَ الصَّلَوَاتِ الْمَكْتُوْبَاتِ

திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்கப்பட்டது. கேட்கப்படும் துஆக்களில் சிறந்தது எது? நடுநிசியிலும், பர்ளு தொழுகைக்குப் பின்னும் கேட்கப்படும் துஆவாகும் என திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆக வணக்கவழிபாட்டின் அடிப்படையாகவும், வணக்கமாகவும் உள்ள துஆவைத்தான் பர்ளு தொழுகைக்குப் பின்னர் கூட்டாக ஓதுகிறோம்.

அடுத்து கூட்டு துஆ என்றால் என்ன? கூட்டு துஆ என்பது ஒருவர் துஆ ஓத மற்றொருவர் ஆமீன் சொல்வதுதான். கூட்டு துஆவை ஷரீஅத்தே ஆகுமாக்கிய இடங்கள்:

عَنْ اَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اِذَا اَمَّتَ الْاِمَامُ فَاَمِّنُوْا فَاِنَّهُ مَنْ وَافَقَ تَاْمِيْنُهُ تَاْمِيْنَ الْمَلَائِكَةِ غُفِرَ لَهُ مَا تَقَلَّمَ مِنْ ذَنْبِهِ (البخاري والمسلم)

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: "இமாம் ஆமீன் கூறினால் நீங்களும் கூறுங்கள். எவருடைய ஆமீன் மலக்குமார்களின் ஆமீனுடன் இணைந்து விடுகிறதோஇ அவரின் கடந்த பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு விடும் என நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

2. **தொழுகைக்கு வெளியே இடம் பெறும் கூட்டுத் துஆ:**

عَنْ اُمِّ سَلَمَةَ قَالَتْ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اِذَا حَضَرْتُمُ الْمَرِيْضَ اَوِ الْمَيِّتَ فَقُوْلُوْا خَيْرًا فَاِنَّ الْمَلَائِكَةَ يُؤَمِّنُوْنَ عَلَى مَا تَقُوْلُوْنَ (مسلم)

உம்மு ஸலமா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள்: "நோயாளியை சந்தித்தாலோ அல்லது மய்யித் இருக்குமிடத்திற்குச் சென்றாலோ, நல்ல வார்த்தையையே சொல்லுங்கள். காரணம் நீங்கள் சொல்லும் வார்த்தைகளுக்கு மலக்குகள் ஆமீன் கூறுகிறார்கள் என நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்) மலக்குமார்கள் நாம் சொல்லும் வார்த்தைகளுக்கு ஆமீன் சொல்வதும் கூட்டு துஆதானே.

3. **குர்ஆன் ஓதிய பின்பு ஓதப்படும் கூட்டு துஆ:**

عَنْ حَمِيْدِ الْاَعْرَجِ قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ قَرَأَ الْقُرْآنَ ثُمَّ دَعَا اَمَّنَ عَلٰى دُعَائِهِ اَرْبَعَةَ آلَافِ مَلَكٍ (الدارمي)

ஒருவன் திருக்குர்ஆனை ஓதிஇஅதன் பிறகு துஆ செய்தால் அவருடைய துஆவுக்கு 4000 மலக்குமார்கள் ஆமீன் கூறுகிறார்கள் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என ஹழ்ரத் ஹமீதுல் அஃரஜ் அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஒருவரின் பிரார்த்தனைக்கு மலக்குகள் கூட்டாக ஆமீன் கூறுவது கூட்டு துஆதானே. கூட்டு துஆவிற்கு அத்தாட்சியாக நமக்கு முன்பே நபிமார்கள் கூட்டு துஆவை ஓதிய ஆதாரங்கள்:

1. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே கூட்டு துஆவிற்கு ஆமீன் கூறினார்கள்.

عَنْ زَيْدِ بْنِ ثَابِتٍ قَالَ اَنَا وَ اَبُوْهُرَيْرَةَ وَ آخَرُ عِنْدَ النَّبِيِّ صَلِّ اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ اُدْعُوْا فَدَعَوْتُ اَنَا وَصَاحِبِيْ

وَاَمَّنَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ثُمَّ دَعَا اَبُوْهُرَيْرَةَ فَقَالَ : اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ مِثْلَمَا سَئَلَكَ صَاحِبِيْ وَاَسْئَلُكَ

عِلْمًا لَايُنْسَىٰ فَاَمَّنَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ (الحاكم)

ஜைத் இப்னு தாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: நானும், அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் இன்னும் ஒரு நண்பரும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அவையில் இருந்தோம்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்: துஆசெய்யுங்கள். நானும் எனது நண்பரும் துஆ செய்தோம். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆமீன் கூறினார்கள். பிறகு அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், “யாஅல்லாஹ்! உன்னிடம் எனது சகோதரர் கேட்டதைப் போல் கேட்டதுடன் இன்னும் மறந்து போகாத கல்வியையும் நான் கேட்கிறேன்“ என துஆ செய்தார்கள். அதற்கு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “ஆமீன்“ எனக் கூறினார்கள். ஆக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூட்டுத் துஆ ஓத ஏவி, அதற்கு அவர்களே பதில் அளித்துள்ளார்கள் என்பதை நம்மால் விளங்க முடிகிறது.

2. **திருக்குர்ஆனில் இடம் பெறும் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கூட்டு துஆ:**

وَقَالَ مُوْسىٰ رَبَّنَا اِنَّكَ اٰتَيْتَ فِرْعَوْنَ وَ مَلَأَهٗ زِيْنَةً وَّاَمْوَالًا فِى الْحَيٰوةِ الدُّنْيَا رَبَّنَا لِيُضِلُّوْا عَنْ سَبِيْلِكَ رَبَّنَا اطْمِسْ

عَلٰى اَمْوَالِهِمْ وَاشْدُدْ عَلٰى قُلُوْبِهِمْ فَلَا يُؤْمِنُوْا حَتّٰى يَرَوُا الْعَذَابَ الْاَلِيْمَ (يُوْنُس :88)

இன்னும் மூஸா “எங்களுடைய ரப்பே! நிச்சயமாக நீ பிர்அவ்னுக்கும், அவனுடைய கூட்டத்தாருக்கும் (உலக) அலங்காரத்தையும்இ (பலவகை) பொருட்களையும் இவ்வுலக வாழ்வில் கொடுத்துள்ளாய். எங்களுடைய ரப்பே! உன்னுடைய வழியை விட்டும் (மக்களை) அவர்கள் வழி கெடுத்து விடுவார்கள். (ஆகவே) எங்கள் ரப்பே! அவர்களுடைய பொருட்கள் மீது அழிவை ஏற்படுத்தி அவர்களுடைய இதயத்தின் மீது கடினங்களை உண்டாக்குவாயாக. ஏனெனில் நோவினை தரும் வேதனையை அவர்கள் காணும்வரை ஈமான் கொள்ளமாட்டார்கள் என துஆ செய்தார்கள்.

**கூட்டுதுஆவை நிச்சயமாக அல்லாஹ் அங்கீகரிக்கிறான் என்பதற்குரிய சான்றுகள்:**

1. ஹதீதின் கூற்று:

عَنْ حَبِيْبِ بْنِ سَلَمَةَ الضهري (وكَانَ مُجَابُ الدعوة) قال سَمِعْتُ رَسُوْلَ اللهِ يَقُوْلُ لَا يَجْتَمِعُ مَلَأٌ فَلْيَدْعُوْا

يَعْفُهُمْ وَيُؤَمِّنُ بَعْضُهُمْ اِلَّا اَجَابَهُمُ اللهُ (الحاكم)

ஹபீப் இப்னு ஸலமா அல் பஹ்ரீ அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்வதை நான் கேட்டேன். ஒரு

கூட்டம் ஒன்று சேர்ந்து அவர்களில் ஒருவர் துஆ செய்ய அவர்களில் சிலர் ஆமீன் கூறினால் அல்லாஹ் அந்த துஆவை அங்கீகரிக்கிறான். (ஹாகிம்)

2. குர்ஆனின் வசனம்:

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள துஆ(மேலே கூறப்பட்ட வசனம்) செய்யஇ அதற்கு ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆமீன் சொன்னார்கள். எனவே இந்த கூட்டு துஆவை வல்ல அல்லாஹ் அங்கீகரித்தான் என்பதை பின்வரும் வசனம் சுட்டிக் காட்டுகிறது.

قَالَ أُجِيبَتْ دَعْوَتُكُمَا (يونس :89)

உங்கள் இருவருடைய துஆவையும் அல்லாஹ் ஏற்றுக் கொண்டான். இதன் மூலம் கூட்டு துஆ என்பது இறைவனிடம் ஒப்புக் கொள்ளப்படக்கூடிய ஒரு வணக்கமாக அமைகிறது என்பதை நம்மால் உணர முடிகிறது. கூட்டு துஆ என்பது நமது சமுதாயத்திற்கு மட்டுமே கிடைத்த பாக்கியம் (ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் தவிர)

عَنْ اَنَسٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ كُنَّا عِنْدَ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ جُلُوْسًا فَقَالَ قَدْ اَعْطَانِيْ خِصَالًا ثَلَاثًا اَعْطَانِيْ صَلَاةً فِي الصُّفُوْفِ وَاَعْطَانِيْ تَحِيَّةَ اَهْلِ الْجَنَّةِ وَاَعْطَانِيْ التَّامِيْنَ وَلَمْ يُعْطَ اَحَدٌ مِنَ النَّبِيِّيْنَ قَبْلِيْ اِلَّا اَنْ يَكُوْنَ قَدْ اَعْطَاهُ هَارُوْنَ يَدْعُوْ مُوْسٰي وَاَمَّنَ هَارُوْنَ قَالَ اللهُ تَعَالٰى اُوْلٰئِكَ الَّذِيْنَ هَدَى اللهُ فَبِهُدَاهُمُ اقْتَدِهْ

ஹழ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: "நாங்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சபையில் அமர்ந்து இருந்தோம். அப்பொழுது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்தஆலா எனக்கு 3 பாக்கியங்களை வழங்கியுள்ளான்.

1. வரிசையில் நின்று தொழும் பாக்கியத்தை வழங்கியுள்ளான்.

2. ஸலாம் சொல்லும் பாக்கியத்தை வழங்கியுள்ளான்.

3. ஆமீன் சொல்லும் பாக்கியத்தை வழங்கியுள்ளான்.

எனக்கு முன்னர் அனுப்பப்பட்ட நபிமார்களில் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களைத் தவிர வேறு யாருக்கும் அதனை (ஆமீன்) வழங்க வில்லை. ஹழ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் துஆ செய்தார்கள். ஹழ்ரத் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அந்தப் பிரார்த்தனைக்கு ஆமீன் எனக் கூறினார்கள். அல்லாஹ் சொன்னான் அவர்கள் எத்தகையவர்கள் என்றால் அல்லாஹ் அவர்களை நேர்வழியில் செலுத்தினான். எனவே (நபியே) அவர்களுடைய நேர்வழியை நீர் பின்பற்றுவீராக! ஆகஇ ஆமீன் கூறுவதை (கூட்டு துஆவை) நம்மால் விளங்க முடிகிறது.

**முடிவுரை:**

ஆமீன் என்பது அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக! எனப் பொருள்படும். எனவேஇ ஒருவர் துஆச் செய்யும் போது நாம் ஆமீன் என்றுக் கூறினால் அந்த சகோதரர்க்கு நாம் உதவி செய்கிறோம் என்றுதான் அர்த்தம். எனவே

وَتَعَاوَنُوا عَلَى الْبِرِّ وَالتَّقْوَاي(مائدة:2)

நன்மைக்கும், இறையச்சத்திற்கும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள் என்ற வசனத்தின் பிரகாரம் கூட்டுத் துஆ என்பது இறைவனால் ஏவப்பட்ட ஒன்று என்பதை நாம் புரிய முடிகிறது. மேலும் கூட்டுத்துஆவை மனிதன் மட்டுமல்ல, மலக்குகளும் செய்கிறார்கள் என்பதற்கு ஆதாரமாக பின் வரும் ஹதீதுகளும் அமைகிறது.

1. மறைவாக இருக்கும் சகோதரருக்கு ஒரு முஸ்லிம் துஆ செய்தால், அவரைப் பார்த்து மலக்கு கூறுவார் (உன் சகோதரனுக்கு) நீ கேட்டதைப் போன்று உனக்கு கிடைக்கும்.

அறிவிப்பாளர்: அபூதர்தா ரலியல்லாஹு அன்ஹு

நூல்: முஸ்லிம்.

2. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: முஃமீன்கள் ஒரு செயலை நல்ல காரியமாகக் கருதினால் அது அல்லாஹ்விடமும் நல்ல செயலே ஆகும். (நூல்: அஹ்மத்)

ஆகவே கூட்டுத்துஆ என்பது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட செயல் மட்டுமல்ல. மாறாக, இந்த உம்மத்திற்கே பாக்கியமாக்கப்பட்ட வணக்கத்தின் அடிப்படையாக அமைகிறது என்பது மேற்கண்ட ஆதாரங்களால் தெளிவாகிறது.

நானிலம் போற்றும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நம்மைப் போன்ற மனிதரல்ல

**நபியின் தனிச்சிறப்பு:**

اَلنَّبِيُّ اَوْلٰى بِالْمُؤْمِنِيْنَ مِنْ اَنْفُسِهِمْ(احزاب:6)

அல்லாஹ்வின் திருத்தூதரான நபி அவர்கள் முஃமீன்களுக்கு உயிரை விடவும் மேலானவர்களாக இருக்கிறார்கள்.

اَنَا مِنْ نُوْرِ اللهِ وَكُلُّ شَيْءٍ مِنْ نُوْرِيْ

நான் அல்லாஹ்வின் ஒளியில் இருந்து ஆனவன். ஒவ்வொரு வஸ்துமே என்னுடைய ஒளியில் இருந்து உண்டானது.

أُعْطِيْتُ مَفَاتِيْحَ خَزَائِنِ الْاَرْضِ

நான் சுவர்க்கத்தின் கஜனாக்களின் திறவுகோல் கொடுக்கப்பட்டுள்ளேன்.

**பிரதிவாதிகளின் கூற்று:**

நபியவர்கள் நம்மைப் போன்று மனிதர்தான். ஏனென்றால் அல்லாஹ்வே நபியை நோக்கி,

قُلْ اِنَّمَا اَنَا بَشَرٌ مِّثْلُكُمْ

“நபியே! நாயகமே! கூறுங்கள். நானாகிறவன் உங்களைப் போன்ற மனிதன்தான்“ என்ற இந்த ஆயத்தை உதாரணமாக எடுத்துக் கூறி குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர்.

**இந்த ஆயத்தின் உண்மையான நோக்கம்:**

உதாரணமாக நபியவர்கள் மலாயிகத்துமார்களில் நின்றும் ஆகிவிட்டால் அல்லது வேறு சிறப்பு பொருந்திய, மனிதன் அல்லாத தோற்றத்தில் ஆகிவிட்டால், நபி அவர்கள் தூதுத்துவத்தை எத்திவைக்கும் பொழுது யாருக்கு தூதுத்துவத்தை எத்தி வைக்கிறார்களோ அத்தகைய மக்களிலிருந்து எழும்புகின்ற முதல் பதில்:-

“நீங்கள் எங்களைப் போன்றா இருக்கிறீர்கள்? எங்களுக்குப் பசி, தாகம், உறக்கம், மறதி இவைகள் ஏற்படுகிறது. அவைகள் உங்களுக்கு ஏற்படுவதில்லை. மேலும் எங்களுக்கு குடும்பம், மனைவி, மக்கள் இருக்கிறது. அவர்களுக்காக நாங்கள் உழைக்க வேண்டும். அதற்கென நேரங்களை செலவழிக்க வேண்டும். உங்களுக்கு குழந்தை, மனைவி, குடும்பம் இவைகள் இல்லை. எனவே சதாகாலமும் இறைவனை தஸ்பீஹ் தஹ்மீத் செய்வீர்கள். உங்களுக்கு கவலை, லாபம், நஷ்டம் இவைகள் ஏற்படாது. இவைகள் எல்லாம் எங்களுக்கு ஏற்படும். இவைகளைத் தாண்டி இறைவனை வணங்குவதென்பது சாத்தியமாகாது என்ற கூறுறுதான். இதனை முறியடிக்கவே அல்லாஹ் மனித தோற்றத்தை நபி அவர்களுக்கு கொடுத்து பசி, தாகம், உறக்கம் இவைகளை ஏற்படுத்தி குடும்பம், மனைவி, மக்கள், நஷ்டம், இலாபம், இன்பம், துன்பம் இவைகளை உண்டாக்கித் தன்னை வணங்கச் செய்தான். எனவேதான் அல்லாஹ் நபியிடம் நான் மனிதன்தான் என்று கூறுங்கள்“ என்றான். அதாவது, நான் நீங்கள் அனுபவிக்கின்ற அத்தனை சூழ்நிலைகளையும் அனுபவிக்கிறேன். அத்தோடு இறைவனை ஓர்மைப்படுத்தி அவனை வணங்குகிறேன். நீங்களும் அவனை ஓர்மைப்படுத்தி வணங்கி கட்டுப்பட்டு நடஙகள் என்ற கருத்தை உணர்த்துகிறது இந்த வசனம்.

**பிரதிவாதிகள் கூற்றை முறியடிக்கும் ஆதாரம்:**

எந்த ஆயத்தைக் கொண்டு நபி அவர்கள் நம்மைப் போன்றவர்கள் தான் என்று பிரதிவாதிகள் வாதிடுகிறார்களோ அந்த ஆயத்தின் தொடரிலேயே நபி அவர்களின் தனிச்சிறப்பு சுட்டிக் காட்டப்படுகின்றது. ஆம். அதுதான்

قُلْ اِنَّمَا اَنَا بَشَرٌ مِّثْلُكُمْ يُوْحٰى اِلَيَّ (كهف:11)

“என்னின்பால் வஹி அறிவிக்கப்படுகின்றது என்று நபியை அல்லாஹ் சுட்டிக் காட்ச் சொல்கிறான். அப்படியென்றால் மனிதர்களாகிய நமக்கும் வஹி அறிவிக்கப்படுகின்றதா? இதிலிருந்தே விளங்கிக் கொள்ளலாம் நாம் அவர்களின் தனிச்சிறப்பை.

1.அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்படுகின்ற ஒரு ஹதீது:

“உங்களில் யாரும் என்னைப் போன்றில்லை“

(நூல்: புஹாரி, முஸ்லிம்)

இந்த கூற்றை நபி அவர்கள் ஸஹாபாக்களை பார்த்து கூறினார்கள்.

**ஸஹாபாக்கள் யார்?**

வான்மறையில் அல்லாஹ் ஸஹாபாக்களைக் குறித்து

رَضِيَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوْا عَنْهُ(بينة:8)

அல்லாஹ் அவர்களை (ஸஹாபாக்களை) தொட்டும் பொருந்திக் கொண்டான். அவர்கள் (ஸஹாபாக்கள்) அல்லாஹ்வைத் தொட்டும் பொருந்திக் கொண்டார்கள்". அத்தகைய உயர்வு பெற்ற ஸஹாபாக்களை நோக்கியே "நான் உங்களைப் போன்றவன் அல்ல என்று நபி அவர்கள் கூறினார்கள் என்றால் பிறகு எப்படி நம்மைப் போன்றவர்கள் நபி அவாக்ள் என்று நாம் சொல்ல முடியும்?

**நபிஅவர்கள் நம்மைப் போன்றவர்கள் இல்லை என்பதை உணர்த்த மேலும் உண்டான ஆதாரங்கள்:**

நமக்கும், கண்மணி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் உண்டான வித்தியாசங்கள்:

1. **உறக்கம்**:

உளுவை முறிப்பவைகளில் ஒன்றுதான் படுத்து உறங்குவது. ஒருவன் உளுச் செய்து விட்டு படுத்து உறங்கிய பின் விழித்தெழுந்து தொழ விரும்பினால், மறுபடியும் ஒளுச் செய்ய வேண்டும் என்பது ஷரீஅத்தின் கட்டளை. ஆனால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் படுத்துறங்கினால், அவர்களின் ஒளு முறிந்து போகாது.

ஆதாரம்: ஆயிஷா நாயகி ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள்: "நான் அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களிடம் கேட்டேன், யாரஸூலல்லாஹ் தாங்கள் படுத்துறங்கி விழித்தபின் உளுச் செய்யாமல் தொழுகிறீர்களே என்று. அதற்கு அல்லாஹ்வின் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்(ஆயிஷா) எனது இரு கண்கள் உறங்குமே தவிர எனது கல்பு (உள்ளம்) உறங்காது.

(நூல்: புஹாரி)

2. **திருமணத்தில் சாட்சி:**

நம்மில் ஒருவன் திருமணம் செய்ய நாடினால், அத்திருமணம் நிறைவேற இரண்டு சாட்சிகள் கட்டாயம் வேண்டும். நபிஅவர்கள் சொல்லும் போது "சாட்சிகள் இல்லாத திருமணம் செல்லாது" (நூல்: தாரகுத்னீ)

ஆனால் நபிநாதர் அவர்களுடைய திருமணம் சாட்சிகள் இல்லாமலேயே நிறைவேறிவிடும். இதனை நிரூபணம் செய்யும் முகமாக,

يَاأَيُّهَا النَّبِيُّ إِنَّا أَحْلَلْنَا لَكَ أَزْوَاجَكَ الَّتِي آتَيْتَ أُجُورَهُنَّ وَمَا مَلَكَتْ(33:50)

மு:ஃமீனான ஒரு பெண் நபி அவர்களுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள விரும்பினால் திருமணம் நிறைவேறி விடும். நபியே! இது உமக்கு மட்டும்தான் வழங்கப்பட்டுள்ள உரிமை. மற்ற மு:ஃமீன்களுக்கு அல்ல.

3. பெண்ணின் மறுமணம்:

ஒரு பெண்ணின் கணவன் மரணித்து விட்டால் அல்லது ஒரு பெண் தலாக் விடப்பட்டிருந்தால் இவ்விருவரும் அவர்களுக்கு குறிப்பிட்ட காலம்வரை இத்தா இருந்து பிறகு அவர்களை மற்றொருவன் திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மறைவிற்குப் பின்னால் அவர்களின் துணைவியர் எவரையும் திருமணம் செய்து கொள்வதற்கு யாருக்கும் அனுமதியில்லை என்று இறைமறை இயம்புகிறது.

ذَالِكُمْ اَطْهَرُ لِقُلُوْبِكُمْ وَقُلُوْبِهِنَّ وَمَاكَانَ اَنْ تَؤْذُوْا رَسُوْلُ اللهِ وَلَا اَنْ تَنْكِحُوْا اَزْوَاجَهُ مِنْ بَعْدِهِ اَبَدًا اِنَّ ذَالِكُمْ كَانَ عِنْدَ اللهِ عَظِيْمًا (33:53)

அல்லாஹ்வின் தூதரை நோவினை செய்வது உங்களுக்கு ஆகுமானது அல்ல. அன்றியும்இ அவருடைய மனைவியரை அவருக்குப் பின்னர் நீங்கள் மணப்பது ஒரு போதும் கூடாது. நிச்சயமாகஇ அல்லாஹ்விடத்திலே இது மிகப் பெரிய பாவகாரியமாகும்.

4. **தஹஜ்ஜத்:**

ஒரு நாளைக்கு 5 நேரத் தொழுகைகள் நமக்கெல்லாம் கடமையாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அத்தோடு தஹஜ்ஜத் தொழுகையும் கடமை.

وَمِنَ اللَّيْلِ فَتَهَجَّدْ بِهِ نَافِلَةً لَّكَ عَسٰي اَنْ يَبْعَثَكَ رَبُّكَ مَقَامًا مَحْمُوْدًا (17:79)

இன்னும் இரவில் ஒரு சிறு பகுதியில் உமக்கு 5 நேரத் தொழுகைகளை விடவும் அதிகப்படியாக தஹஜ்ஜுத் தொழுகையை தொழுது வருவீராக. இதன் பாக்கியத்தால் உம்முடைய இறைவன் மகாமே மஹ்மூத் என்னும் புகழ்பெற்ற தலத்தில் உம்மை எழுப்பப்படும்.

5. **நோன்பு:**

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொடர் நோன்பு வைத்தார்கள். இதைப் பார்த்து ஸஹாபாக்களும் தொடர் நோன்பு வைத்தபோது அதை நபியவர்கள் தடுத்தார்கள். நோன்பைத் திறக்காமல் தொடர்ச்சியாக இடைவிடாது நோன்பு பிடிக்க வேண்டாம். அப்படியானால் அவ்விதம் நீங்கள் தொடர் நோன்பு பிடிக்காதீர்கள். எங்களை மட்டும் ஏன் தடுக்கிறீர்கள்? எனத் தோழர்கள் அவர்களிடம் வினவினார்கள். அதற்கு நபி அவர்கள் சொன்ன பதில் என்ன தெரியுமா? உங்களில் என்னைப் போன்று யார் இருக்கிறீர்கள்? எனது இரட்சகன் எனக்கு உணவளிக்கிறான். குடிப்பளிக்கிறான் என்றார்கள்.

ஆகவே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மேற்கூறிய ஆதாரங்களின் மூலம் சாதாரண மனிதரல்ல, மனிதரில் மாணிக்கம் என தெளிவாகப் புரிகிறது. அத்தகைய

மனித புனித நபியை எக்காலமும் புகழக்கூடிய பாக்கியத்தை வல்ல இறைவன் தந்தருள்வானாக!

**ஜியாரத்துல் குபூர்**

அல்லாஹ்வின் தனிப்பட்ட அருளுக்கும், அன்புக்கும் பாத்தியமான அவுலியாக்கள், மஹான்கள், நாதாக்களின் கப்ரு ஷரீபிற்குச் சென்று ஜியாரத் செய்வது ஆண், பெண் இருபாலருக்கும் ஸுன்னத்தும் முஸ்தஹப்புமாகும்.

நபிபெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் அன்னையின் கப்ருக்குச் சென்று ஜியாரத் செய்திருக்கிறார்கள். மேலும் உஹது யுத்தத்தில் ஷஹீதான ஸஹாபாக்களுடைய கப்ருகளுக்கும் போய் ஜியாரத் செயதிருக்கிறார்கள். ஸஹாபாக்களையும் ஜியாரத்திற்குப் போகும்படி ஏவியிருக்கிறார்கள்.

كُنْتُ نَهَيْتُكُمْ عَنْ زِيَارَةِ الْقُبُوْرِ فَزُوْرُوْهَا فَاِنَّهَا تُزَهِّدُ فِى الدُّنْيَا وَتُذَكِّرُ الْآخِرَةَ (ابن ماجة)

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களை நோக்கி, நான் உங்களை கப்ருகளை ஜியாரத் செய்வதை விட்டும் விலக்கி இருந்தேன்.இப்போது அவைகளை ஜியாரத் செய்யுங்கள். ஏனெனில் நிச்சயமாக அது இவ்வுலகத்தில் பற்றற்ற தன்மையையும், மறு உலக வாழ்க்கையை நினைவூட்டக் கூடியதாகவும் இருக்கிறது எனக் கூறினார்கள்.

கப்ருகள் மறுமை வாழ்க்கையை நினைவூட்டக் கூடிய அடையாள சின்னங்களாக இருக்கின்றன என்பதை இந்த ஹதீது உணர்த்துகிறது.

عَنْ مُحَمَّدِ ابْنِ نُعْمَانَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ زَارَ قَبْرَ اَبَوَيْهِ اَوْ اَحَدِهِمَا فِى كُلِّ جُمُعَةٍ غُفِرَ لَهُ وَكُتِبَ بِرًّا (بَيْهَقِيْ فِى شعب الايمان)

முஹம்மது இப்னு நுஃமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்படுகிறது "ஒருவன் தன் பெற்றோர் இருவரின் அல்லது இருவரில் ஒருவரின் கப்ரை ஒவ்வொரு ஜும்ஆ அன்றும் ஜியாரத் செதால் அவனுக்கு பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. நன்மைகள் எழுதப்படுகிறது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியுள்ளார்கள்.

عَنْ عُقْبَةَ ابن عمار رضي اللّٰهُ عنهُ قَال: صَلَّى رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ عَلٰى قَتْلٰى اُحُدٍ بعَدَ ثمان سنين كال مودّع لِلْاَحْيَاءِ وَالْاَمْوَالِ

உக்பத் இப்னு ஆமீர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்படுகிறது அவர்கள் கூறுகிறார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எட்டு வருடத்திற்குப் பிறகு உஹதில் ஷஹீதானவர்கள் மீது, மரணித்தவர்களுக்கும் உயிருள்ளவர்களுக்கும் பயணம் சொல்வது போன்று தொழுதார்கள்.

عَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: زَارَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَبْرَ اُمِّهَا فَبَكٰى وَاَبْكٰى مَنْ حَاوله (مسلم)

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்படுகிறது அவர்கள் கூறுகிறார்கள்: "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன் தாயின் கப்ரை ஜியாரத் செய்துவிட்டு அழுதார்கள். அவர்களை சுற்றி இருந்தவர்களையும் அழவைத்தார்கள்.

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَتْ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: مَا مِنْ رَجُلٍ يَزُوْرُ قَبْرَ اَخِيْهِ وَيَجْلِسُ

عِنْدَهُ اِلَّا اسْتَأْنَسَ بِهِ وَرَدَّ عَلَيْهِ حَتّٰى يَقُوْمُ (رواه ابن ابي الدنيا)

எந்த மனிதரும் தன் சகோதரர் மண்ணறையை தரிசித்து அங்கு அமர்ந்திருப்பது அதைக் கொண்டுஅவர் (மண்ணறையை)பிரியமாகியே தவிர இல்லை. மேலும் அவர் எழுந்திருக்கும் வரை அவர் மீது பதிலும் தருகிறார் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَا مِنْ اَحَدٍ يَمُرُّ بِقَبْرِ اَخِيْهِ الْمُؤْمِنِ

كَانَ يَعْرِفُهُ فِى الدُّنْيَا فَيُسَلِّمُ اِلَّا عَرَفَهُ وَرَدَّ عَلَيْهِ السَّلَامُ (الستدكاو—شرح الصدور)

துன்யாவிலே அவனைப் பற்றி அறியக்கூடிய மு:மினான தனது சகோதரனுடைய கப்ரை கடந்து சென்று, அவன் மீது ஸலாம் சொல்லக்கூடிய எந்த ஒருவரும் இல்லை. அவனை அந்தக் கபுராளி அறிந்து, அவன் மீது ஸலாமை மீட்டியே தவிர,

عَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ اَبُوْ رَزِيْنَ: يَا رَسُوْلَ اللهِ اِنَّ طَرِيْقِيْ عَلَى الْمَوْتٰى فَهَلْ مِنْ كَلَامٍ اَتَكَلَّمُ بِهِ اِذَا

مَرَرْتُ عَلَيْهِمْ قَالَ قُلْ اَلسَّلَامُ عَلَيْكُمْ يَا اَهْلَ الْقُبُوْرِ مِنَ الْمُسْلِمِيْنَ فَالْمُؤْمِنِيْنَ اَنْتُمْ لَنَا سَلَفٌ وَنَحْنُ لَكُمْ تَبَعٌ

وَاِنَّا اِنْشَاءَ اللهُ بِكُمْ لَاحِقُوْنَ قَالَ: اَبُوْا رَزِيْن يَا رَسُوْلَ اللهِ يَسْمَعُوْنَ قَالَ يَسْمَعُوْنَ وَلَاكِنْ لَايَسْتَطِيْعُوْنَ اَنْ

يُجِيْبُوْا قَالَ يَا اَبَا دزين اَلَا تَرْضٰى اَنْ يَرُدَّ عَلَيْكَ بِعَدَدِهِمُ الْمَلَائِكَةُ (شرح الصدور)

قَوْلُهُ لَايَسْتَطِيْعُوْنَ اَنْ يُجِيْبُوْا جَوَابًا يَسْمَعُهُ الْجِنُّ وَالْاِنْسُ فَهُمْ يردوْنَ حيث يَسْمَعُ

அபூரஜீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகளாரிடம் யாரஸூலல்லாஹ்! என்னுடைய பாதை கப்ருகளின் மீது இருக்கிறது. அவர்களை நான் கடந்து சென்றால் நான் ஓதக்கூடிய வார்த்தைதகள் ஏதும் இருக்கிறதா? எனக் கேட்ட போது, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

اَلسَّلَامُ عَلَيْكُمْ يَا اَهْلَ الْقُبُوْرِ مِنَ الْمُسْلِمِيْنَ وَالْمُؤْمِنِيْنَ اَنْتُمْ لَنَا سَلَفٌ وَنَحْنُ لَكُمْ تَبَعٌ وَاِنَّا اِنْ شَاءَ اللهُ بِكُمْ لَاحِقُوْنَ

என்று ஓதுங்கள் என்றார்கள். அப்போது அபூரஜீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் செவியுறுவார்களா? என்று கேட்டபோது, நபிகளார் செவியேற்பார்கள் என்றாலும்,பதிலளிப்பதற்கு சக்தி பெறமாட்டார்கள் என்று கூறிவிட்டு, "அபூரஜீனே! அவர்களின் எண்ணக்கையளவு மலக்குகள் உனக்கு பதிலளிப்பதை நீர் பொருந்திக் கொள்ள மாட்டீரா? எனக் கேட்டார்கள்.

அவாக்ள் மனிதர்கள், ஜின்கள் செவியேற்கக் கூடிய பதிலாக பதிலளிக்க சக்தி பெறமாட்டார்கள்.. எனினும் அவர்கள் செவியுறாத புறத்திலே பதில் அளிப்பார்கள்.

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللهث عَنْهُ قَالَ: قَالَ مَرَّ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عَلٰى مُصْعَبِ ابْنِ عُمَيْرٍ رَضِيَ اللهُ عَنْهُ حِيْنَ رَجَعَ مِنْ اُحُدٍ فَوَقَفَ عَلَيْهِ وَعَلٰى اَصْحَابِهِ فَقَالَ: اَشْهَدُ اَنَّكُمْ اَحْيَاءٌ عِنْدَ اللهِ فَزُوْرُوْهُمْ وَسَلِّمُوْا عَلَيْهِمْ فَوَلَّذِيْ نَفْسِيْ بِيَدِهٖ لَايُسَلِّمُ عَلَيْهِمْ اَحَدٌ اِلَّا رَدُّوْا عَلَيْهِ اِلٰى يَوْمِ الْقِيَامِ الْقِيَامَةِ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உஹதிலிருந்து திரும்பிய நேரத்திலே, முஸ்அபு இப்னு உமைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கடந்து சென்றார்கள். அவர்களிடத்திலும், அங்கே ஷஹீதான மற்ற ஸஹாபாக்களிடமும் நின்று சொன்னார்கள். இப்படி "நிச்சயமாக நீஞ்கள் அல்லாஹ்விடத்திலே உயிருள்ளவர்கள். அவர்கள் நீங்கள் ஜியாரத் செய்து, ஸலாம் சொல்லுங்கள். என் ஆன்மா யார் கைவசம் உள்ளதோ, அத்தகைய ஒருவன் மீது ஆணையாக, அவர்கள் மீது எந்த ஒருவரும் ஸலாம் சொல்ல மாட்டார்கள். அவர்கள் மீது கியாமத் நாள் வரை பதில் சொல்லியே தவிர இல்லை.

عَنْ مَعْقِلِ ابْنِ يَسَارٍ الْمُزْنِيْ رَضِيَ اللهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اَنَّهُ قَالَ اِقْرَءُوْا يٰسٓ عِنْدَ مَوْتَاكُمْ لَقِّنُوْا مَوْتَاكُمْ لَا اِلٰهَ اِلَّا اللهُ

உங்களின் மரணத்தவர்களிடத்தில் யாஸீன் சூராவை ஓதுங்கள். உங்கள் மௌத்ததாக்களுக்கு லாஇலாஹ இல்லல்லாஹ்வை தல்கீனு சொல்லி கொடுங்கள்.

உதுமான் இப்னு மள்வூன் ரலியல்லாஹு அன்ஹு மரணித்த போது, அவர்களது ஜியாரத்தைக் கொண்டு வரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவாக்ள் ஒரு கல்லை சுமந்து கொண்டு வந்து அந்த கப்ரின் தலைப்பகுதியில் வைத்தார்கள். இந்த ஹதீதை அறிவிக்கக் கூடிய ஸஹாபி கூறும்போது, அவ்வாறு நபிகளார் கல்லை வைத்ததன் மூலம் என் சகோதரரின் கப்ரை நான் அறிந்து கொள்வேன். என் குடும்பத்தில் மௌத்தானவர்களையும் அதன் அருகிலேயே அடக்கினேன் என கூறுகிறார்கள். (அபூதாவூது)

இந்த ஹதீதிலிருந்து 2 விஷயங்கள் தெளிவாக தெரியவருகிறது. 1. கல்லை நட்டினார்கள். 2. குடும்பத்தார்களை பக்கத்தில் அடக்கினார்கள்.

عَنْ عَائِشَ ةَ رَضِيَ اللهُ عَنْهَا اِنِّيْ اَدْخُلُ فِى بَيْتِيْ الَّتِيْ فِيْهِ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَاضِعًا ثَوْبِيْ اَقُوْلُ فِى نَفْسِيْ اِنَّهُمَا هُوَاَبِيْ وَزَوْجِيْ فَلَمَّا دَفِنَ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُ مَا دَخَلْتُ اِلَّا مَشْدُوْدَةً ثِيَابِيْ حَيَاءً مِنْ عُمَرَ (مسلم)

ஆயிஷா நாயகி அறிவிக்கிறார்கள்: ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள எனது வீட்டிற்குள் என்னுடைய ஹிஜாப் (துப்பட்டா) அணியாமல் நுழைவேன். அவ்விருவரும் எனது தந்தைஇ எனது கணவர் என சொல்லிக் கொள்வேன். உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அங்கே அடக்கப்பட்டபோதுஇ அவர்களின் மீது வெட்கத்தின் காரணமாக எனது ஹிஜாப்பை அணிந்தவளாகவே தவிர நுழைய மாட்டேன் எனக் கூறினார்கள்.

இந்த ஹதீதிலிருந்து தெரியவரும் விஷயங்கள்:

1. பெண்கள் கப்ரை ஜியாரத் செய்திருக்கிறார்கள்.

2. அந்நிய நபரை ஜியாரத் செய்திருக்கிறார்கள்.

3. அந்நிய நபரை ஜியாரத் செய்யும் போது உடல் முழுவதையும் மறைத்து ஹிஜாப் அணிந்து சென்றிருக்கிறார்கள்.

என்றால் கப்ருவாசிகள் உயிருடன்தான் இருக்கிறார்கள் என்றும் தெரியவருகிறது. எனவே பெண்கள் அந்நிய நபர்கள் ஜியாரத் செய்யும்போது, அவர்கள் உயிருடன் இருக்கும் போது எப்படி நடந்து கொள்வோமோ அப்படியே மரணித்த பின்பும் ஜியாரத் செய்ய வேண்டும்.

عَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ اَنَّ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : لَعَنَ زُوَّارَاتِ الْقُبُوْرِ فَقَالَ ترمذي هٰذا حديثٌ صَحِيْحٌ وَقَالَ قَدْ رَأي بَعْضُ اَهْلُ الْعِلْمِ اَنَّ هٰذَا كَانَ قَبْلُ اَنْ يُرَخِّصَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فِى زِيَارَةِ الْقُبُوْرِ فَلَمَّا رَخَّصَ دَخَلَ فِى رُخْصَتِهِ الرِّجَالُ وَالنِّسَاءُ فَقَالَ بَعْضُهُمْ اِنَّمَا كُرِهَ زِيَارَةُ الْقُبُوْرِ لِنِّسَاءِ لِقِلَّةِ صَبْرِهِنَّ كَثْرَةِ جَزْعِهِنَّ تَمَّ كَلَامُهُ (التّرمذي)

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கப்ருகளை ஜியாரத் செய்யும் பெண்களை சபித்தார்கள். இந்த ஹதீது அஹ்மது, திர்மிதி, இப்னுமாஜாவில் இருக்கிறது. திர்மிதி இமாம் கூறும்போது இது சஹீஹான ஹதீது ஆகும்.

கப்ருகளை ஜியாரத் செய்வதற்கு நபிகளார் சலுகை அளிப்பதற்கு முன் கூறியதாகும். அவர்கள் கப்ரை தரிசிப்பதற்கு சலுகை அளித்தபோது, அதிலே ஆண்களும், பெண்களும் நுழைகிறார்கள் என்று இல்முடையவர்களில் சிலர் கூறுகிறார்கள். பெண்களுக்கு ஜியாரத் மக்ரூஹ் ஆக்கப்பட்டதெல்லாம் அவாக்ளின் பொறுமை குறைவினாலும், அவர்களின் அதிகமான நடுக்கத்தின் காரணமாகத்தான் என சிலர் கூறுகின்றனர்.

இப்னு அபீ முலைக்கா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: "ஒருநாள் ஆயிஷா நாயகி மக்பராவிலிருந்து வெளியே வந்தார்கள். எங்கிருந்து வருகிறீர்கள்? எனக் கேட்டபோது, என் சகோதரர் அப்துர் ரஹ்மானுடைய கப்ரிலிருந்து வருகிறேன் என்றார்கள். ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதனை தடுக்கவில்லையா? என நான் கேட்டேன். அப்போது ஆம் தடுத்தார்கள். பிறகு அதனைக் கொண்டு ஏவினார்கள் என்றார்கள்.

(நூல்: இப்னு அபீலதுன்யா)

ஆயிஷா நாயகி நபிகளாரிடம் தன் கப்ரை ஜியாரத் செய்யும்போது என்ன கூறவேண்டும்? எனக் கேட்டார்கள்.

قُوْلِيْ السَّلَامُ عَلَيْكُمْ اَهْلَ الدِّيَارِ مِنَ الْمُؤْمِنِيْنَ اَنْتُمْ مُسْتَقْدِمُوْنَ نَحْنُ مُسْتَأْخِرُوْنَ اِنَّا اِنْ شَاءَ اللهُ بِكُمْ لَاحِقُوْنَ

اَسْئَلُ اللهَ لِيْ وَلَكُمُ الْعَافِيَةَ(مسلم)

மேற்கூறப்பட்ட ஹதீதிலிருந்து பெண்கள் ஜியாரத் செய்வது கூடும் என்பது தெளிவாகிறது.

ரஸூலுல்லாஹ், அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களை அழைத்து சிலைகளையெல்லாம் விட்டு வைக்காமல் அழித்து விடுங்கள் என்றும், உயரமான கப்ருகளை செவ்வைப்படுத்துங்கள்(سَوِّي) என்றும் கூறினார்கள். ஆனால் வஹ்ஹாபிகள் இந்த سوي என்பதற்கு தரைமட்டமாக்குதல் என அர்த்தம் கூறுகிறார்கள்.

ثُمَّ اسْتَوٰٓى اِلَى السَّمَاءِ فَسَوّٰهُنَّ سَبْعَ السَّمٰوٰتِ

பின்னர் அவன் வானத்தின்பால் நாட்டம் கொண்டான். அவைகளை 7 வானங்களாக ஒழுங்குபடுத்தினான் என்று அல்லாஹ் கூறுகிறான். இதில் سوي என்பதற்கு தரைமட்டமாக்கினான் என்று அர்த்தம் வைத்தால் கருத்து இந்த ஆயத்தில் பொருந்துமா?

وَلَا تُصَلِّ عَلٰٓى اَحَدٍ مِّنْهُمْ مَّاتَ اَبَدًا وَّلَا تَقُمْ عَلٰى قَبْرِهٖ(توبة:84)

அவர்களில் நின்றும் ஒருவர் மீதும் நீங்கள் தொழ வைக்க வேண்டாம். அவரின் கப்ரிடத்திலும் நிற்க வேண்டாம் என்றும் இறைவன் கூறிய இந்த ஆயத்தை வைத்து, ஜியாரத் செய்வது கூடாது என்கின்றனர்.

ஆனால் இந்த ஆயத்து முனாபிக்குகளின் தலைவன் அப்துல்லாஹ் இப்னு உபை, இப்னு சலூல் உடைய விஷயத்தில் இறங்கியது.

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்ரை ஜியாரத் செய்தல், அவருக்கு நபிகளாரின் ஷபாஅத்து வாஜிபாகிவிட்டது என்பதை உணர்த்தும் ஹதீது

مَنْ زَارَ قَبْرِيْ وَجَبَتْ لَهُ شَفَاعَتِيْ

மேலும்,

مَنْ حَجَّ وَلَمْ يَزُرْنِيْ فَقَدْ جَفَانِيْ

ஹஜ் செய்து என்னை சந்திக்கவில்லையென்றால் திட்டமாக அவன் என்னை மறுத்துவிட்டான்.

مَنْ زَارَنِيْ بَعْدَ مَوْتِيْ فَكَأَنَّمَا زَارَنِيْ فِيْ حَيَاتِيْ

என் மரணத்திற்குப் பின் என்னை சந்தித்தவன் என்னை என் ஹயாத்திலே சந்தித்தவனைப் போலாவான் என்றார்கள் நபிகளார்.

கண்மணி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்ரை ஜியாரத் செய்வது ஆண், பெண் அனைவர் மீதும் சுன்னத் முஅக்கதாவாகும்.

முற்றும்.

تمت الدّرس بعون الله ملك الوهّاب صلّى الله على خير خلقه سيدنا محمد وآله وصحبه اجمعين الحمد لله

ربّ العالمين.

www.sufimanzil.org